போதனர்

D. வேங்கடாவதானி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

போதனர்

ஆங்கில மூலம்:

D. வேங்கடாவதானி

தமிழாக்கம்:

அ. அ. மணவாளன்

சாகித்திய அக்காதெமி

புதுடில்லி

POTHANAR—Tamil translation by A. A. Manavalan
of D. Venkatavadani's monograph in English.
Sahitya Akademi, New Delhi 1981. Price Rs. 4

First Edition. 1981.

Copies can be had from:
SAHITYA AKADEMI
Rabindra Bhavan, New Delhi—110 001.

Regional offices:
Madras-600 018, Calcutta 700 029, & Bombay 400 014

Published by Sahitya Akademi, New Delhi,
and Printed at Parakkat Venus Press, Madras-35.

பொருளடக்கம்

		பக்கம்
1.	போதனரின் வாழ்க்கை வரலாறு	5
2.	போதனரின் படைப்புகள்	17
3.	ஸ்ரீமத் பாகவதம்	28
4.	போதனரின் மொழியாக்க முறைகள்	35
5.	பாகவதத்தில் அமைந்த கதைகளும் துணைக்கதைகளும்	47
6.	பாகவதத்தில் பக்திச் சுவை	64
7.	போதனரின் கவிதைச் சிறப்பு	76
8.	போதனரின் ஆளுமை	90
	துணை நூல்கள்	102
	அருஞ்சொல்லகராதி	103

இயல் ஒன்று

போதனரின் வாழ்க்கை வரலாறு

மகாபாகவதம்

போதனரின் பெயர் ஆந்திர நாட்டில் நெடுங்காலமாகவே இல்லந்தோறும் அறிமுகமான பெயராக உள்ளது. படித்த ஆந்திரன் ஒவ்வொருவனும் அவருடைய ஆந்திர மகாபாகவதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பான். இது இலக்கியச் செவ்வியும் பக்திச் சுவையும் ஒருங்கே அமைந்த காப்பியம். கடைப்பிடித்தலுக்கு அரிய தொண்டுநெறி, ஞான நெறி என்பவற்றை விடுத்து எல்லோராலும் எளிதில் பற்றி ஒழுகத் தக்க பக்தி நெறியினை இக் காப்பியம் விளக்குகிறது.

பக்தர்களைக் காக்கும் திருமாலின் திரு அவதாரச் சிறப்புக்களையும் யசோதையின் ஆசைக் குழந்தையாம் கண்ணனின் பிள்ளைமைக் குறும்புகளையும் இந்நூல் மிக அழகாக வருணிக்கிறது. வடசொற்கள் மிகுதியாகக் கலந்திருப்பினும் தேனினும் இனிய மொழிநடையில் இந்நூல் அமைந்துள்ளது. இயற்கைப் பொருள்களான காற்றும் ஒளியும் போன்று, தெலுங்கு நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் இந்நூல் நன்கு பரவியுள்ளது. இன்றைக்கும் கல்வியறிவு பெற்ற ஒவ்வொரு ஆந்திரனும் இந்நூலின் பாடல்களில் குறைந்தது நான்கைந்தையாவது மனப்பாடமாக அறிவான் எனக் கூறின் அது மிகையாகாது. இனிய மொழிக் கருவூலமாகவும், தெலுங்குக் கவிதை உலகின் இணையற்ற ஒளியாரமாகவும் இந்நூல் திகழ்கிறது.

பாகவதத்தின் ஆசிரியர்

'ஸ்ரீமத் பாகவதம்' பன்னிரண்டு காண்டங்களை (ஸ்கந்தங்கள்) உடையது. அவற்றுள் ஐந்தாம் காண்டத்தைப் பொப்பராசு கங்கனரும், ஆறுவதை ஏர்சுரி சிங்கனரும், பதினொன்று, பன்னிரண்டாம் காண்டங்களை வெலிகண்டல நாராயாவும், ஏனைய எட்டுக காண்டங்களைப் பம்மெர போதன மாத்யாவும் இயற்றினர். இந்நூலின் இரண்டாம், மூன்றும், நான்காம் காண்டங்களின் முடிவிலும், பத்தாம் காண்டத்தின் பிற்பகுதி

யிலும் அமைந்துள்ள தொகுப்புரைகளில் போதனரின் பெயர் காணப்படுகிறது; எனினும் இக் காண்டங்களின் சிதைந்த பகுதிகளை நாராயா என்பவர் தம் குரு பக்தியின் காரணமாக இயற்றி நிறைவு செய்தார் என்ற கருத்து ஆந்திர நாட்டில் நிலவுகிறது. இதற்கேற்பச் சில ஓலைச்சுவடிகளில் சில இடங் களில், 'இங்கிருந்து நாராயாவின் பாடல் தொடங்குகிறது' என்னும் குறிப்பு காணப்படுகிறது. இச்சுவடிக் குறிப்பின் அடிப்படையில் அச்சேறிய சில படிகளிலும் இதே குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இது உண்மையாகுமிடத்து வாணாசுரன், குசேலர் முதலியோரைப் பற்றிய கதைகளை இயற்றியவர் போதனர் அல்லர். நாராயா தான் எனக் கொள்ள நேரிடுகிறது. எனினும் போதனரின் கவிப்பாங்கு, இக்கதைகளுள் நன்கு புலப் படுவதால் பல அறிஞர்கள் இம்முடிவினை ஏற்றுக்கொள்வதில்லை. சிதைவுற்ற சில சொற்களையோ, பாடல்களின் சில பகுதிகளை மட்டுமோ நாராயா நிறைவு செய்திருக்கலாம் எனத் தோன்று கிறது.

இத்தகைய சிறந்த புராணம் ஏன் பலரால் இயற்றப்பட்டது என்பதைப் பற்றி மூவகையான வேறுபட்ட கருத்துகள் நிலவு கின்றன. முதற் கருத்தின்படி, பன்னிரு காண்டங்களையும் இயற்றி முடித்ததும் போதனர் தாம் வழிபடும் கடவுளர் சிலை களை வைக்கும் பெட்டியுள் ஓலைச்சுவடிகளை வைத்து அவற்றைக் கவனமாகக் காப்பாற்றுமாறு தன் மகனுக்குக் கட்டளையிட்டு உயிர் நீத்தார். சிறிது காலத்திற்குப் பிறகு போதனரின் மகன் அப்பெட்டியைத் திறந்து பார்க்க இப்புராணத்தின் பல பகுதி கள் செல்லரிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். இச் சிதைந்த பகுதிகள் பின்னர் கங்கனராலும் பிறராலும் இயற்றி நிறைவு செய்யப்பட்டன.

திம்ம கவியின் 'சர்வலட்சண சார சங்கிரகம்' என்னும் நூலில் உள்ள ஒரு செய்யுள் இரண்டாவது கருத்திற்கு இடமளிக் கிறது. இக் கருத்தின்படி போதனர் இப் புராணத்தை இயற்றி முடித்ததும் திருமாலுக்கு இதனை அர்ப்பணிக்க எண்ணிக்கொண் டிருந்தார். அப்போது சர்வக்ஞ சிங்கபூபாலன் என்னும் அரசன் இதனைத் தனக்கு அர்ப்பணிக்குமாறு பணித்தான். போதனர் அதற்கு இசையவில்லை. எனவே அரசன் சினந்து இந்நூலினை நிலத்தில் புதைக்கச் செய்தான். காலப்போக்கில் சிதைவுற்ற இந்நூலின் சில பகுதிகளைப் பின்னர் நாராயாவும் பிறரும் இயற்றி நிரப்பினர். இக் கருத்து ஆந்திரநாட்டில் பரவலாக நிலவி வருகிறது.

மூன்றுவது கருத்தின்படி, பக்திச்சுவையும் தத்துவார்த்தமும் நிறைந்த பகுதிகளைப் போதனர் தாமே இயற்றினர் எனவும் தம்முடைய சீடர்களாகவோ நண்பர்களாகவோ விளங்கிய நாராயாவிடமும் பிறரிடமும் ஐந்து, ஆறு, பதினொன்று, பன்னிரண்டாம் காண்டங்களை இயற்றும் பணியை ஒப்படைத்தார் எனவும் அறிகிறோம். பாஸ்கர இராமாயணத்தின் ஆசிரியரைப் பற்றி அறிந்த நமக்கு இத்தகைய வழக்கம் தெலுங்கு இலக்கியத்திற்குப் புதியதன்று என்று தெரியும். இக் கருத்து ஏனையவற்றைக் காட்டிலும் நம்பத் தக்கதாக இருப்பினும் உண்மை இன்னும் புதிராகவே உள்ளது. ஆயினும் போதனர் எட்டுக் காண்டங்களைமட்டுமே இயற்றினர் என்பதும் தெலுங்கு இலக்கிய வாசகர்களின் உள்ளத்தே பாகவதம் மேம்பட்டு நிற்கும் அளவுக்குப் புகழைத் தேடித் தந்தவை இந்த எட்டுக் காண்டங்கள் தாம் என்பதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மையாகும்.

போதனரின் பிறப்பிடம்

போதனர் பிறந்த ஊரைப் பற்றியும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஒரு சாரார் இவர் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள பம்மெர கிராமத்தில் பிறந்தவர் என்று கருதுகின்றனர். மற்றொரு சாரார் இவர் கடப்பா மாவட்டத்தில் உள்ள 'ஒண்டிமிட்டா' என்னும் இடத்திற்கு உரியவர் என்று கருதுகின்றனர். இவற்றுள் பின்னையோர் கருத்தைக் காலஞ்சென்ற பூராணம் அயகிரீவ சாஸ்திரி என்பவர் தோற்றுவித்தார். வால்மீகி இராமாயணத்தைத் தெலுங்கில் மொழியாக்கம் செய்து புகழ்பெற்ற காலஞ்சென்ற வாவிலிகொலனு சுப்பா ராவ் என்பவர் இக்கருத்தை மிகுதியும் ஆதரித்தார். போதனர் தம்முடைய பாகவதத்தில் குறிப்பிட்டுள்ள 'ஏகசிலா நகர'மும் மேற்கூறிய ஒண்டிமிட்டாவும் ஒன்றுதான் என்ற கருத்தின் அடிப்படையில் இக்கொள்கை எழுந்தது. இதனை அறிஞர் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏகசிலா நகரம் என்பது வாரங்கலைக் (ஒரு கல்லு) குறிக்கிறது. எனவே வாரங்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பம்மெராவில்தான் போதனர் பிறந்தார் என்பது இவ் அறிஞர்களின் கருத்து. பம்மெர கிராமம் வாரங்கலில் இருந்து முப்பது கல் தொலைவில் உள்ளது. தாம் வாழும் ஊர்ப்பெயரைத் தம் பெயருக்கு அடைமொழியாக வைத்துக் கொள்ளும் மரபு

புதியதன்று. மேலும் அவ்வூரின்கண் இன்றும் காணப்படுகின்ற சில சான்றுகள் போதனர் அங்கு வாழ்ந்தார் என்பதற்கு ஆதாரமாக உள்ளன.

தெலுங்கு நாட்டின் பெரும்பகுதியைக் காகதிய மன்னர்கள் ஒருகல்லு நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தனர். 'ஏகசிலா நகரம்' என்னும் பெயர் ஒருகல்லு நகருக்குப் பதிலாகக் கல்வெட்டுகளிலும் வரலாற்றிலும் வழங்கப்படுகிறது.

கொரவி கோபராஜு என்பவர் 'சிம்ஹாசனத்வாத்ரிம் சிகா' என்னும் தம்முடைய புகழ்பெற்ற பாடலில் ஒருகல்லு, ஏகசிலா நகரம் என்ற பெயரில் புகழ்பெற்று விளங்கியது என்றும், அந்நகரில் காகதிய மன்னர்களின் அரண்மனைச் சிறப்பும் செல்வமும் தழைத்தோங்கின என்றும் கூறுகிறார். 'மிட்டா' 'மெட்டா' என்னும் சொற்கள் தெலுங்கு மொழியில் 'உயர்ந்த மேடான இடம்' என்று பொருள் படும். 'சிலா' என்றால் 'கல்' எனப் பொருள்படும். எனவே 'ஏகசிலா' என்பதற்குரிய நேரான பொருள் ஒருகல்லு என்பதேயாம்; ஒண்டிமிட்டா என்பதன்று. இந்தப் பாகவதத்தை நிறைவு செய்த கங்கனர், சிங்கனர், நாராயா ஆகிய மூன்று தெலுங்காணு கவிஞர்களும் போதனரின் நண்பர்களாகவோ சீடர்களாகவோ விளங்கினார்கள். போதனர்பால் தமக்கிருந்த பக்தியினாலோ அல்லது அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்விக்கக் கருதியோ இவர்கள் இந்நூலின் சில பகுதிகளை இயற்றி நிறைவு செய்திருக் கலாம். போதனர் தெலுங்காணுவைச் சேர்ந்தவர் என்ற கருத்துக்கு மேற்கூறிய செய்தி அரண் செய்கிறது. சைவ மதத்தைச் சேர்ந்த பெருங்கவிஞராகிய பாலகுரிகி சோமநாதர் பிறந்த ஊராகிய பாலகுரிகி, பம்மெராவிலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. சைவம், வைணவம் என்னும் இருபெரும் சமயங்களும் பரவுவதற்குக் காரணமாய் அமைந்த இச் சிறந்த நூல்களைப் படைத்த இப் பெருங்கவிஞர்கள் இருவரும் ஒரே பகுதியைச் சார்ந்தவர்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இப் பெரும் புராணத்தை எத்தகைய சூழ்நிலையில் இயற்றினார் என்பதைப் போதனர் தம் பாகவதத்தின் தொடக்கப் பகுதியில் மிகத் தெளிவாக விவரித்துள்ளார். இவர் வீரசைவக் குடியிற் பிறந்திருப்பினும், வடமொழிப் பாகவதத்தினையும், பிற வடமொழி நூல்களையும் கற்றதன் விளைவாகத் திருமாலிடத்துப் பக்தி பூண்டு ஒழுகலானார்.

''முற்பிறவியில் செய்த தவத்தின் பயனாகவும், இப்பிறவியில் வடமொழிப் பாகவதத்தைப் பயின்றதின் விளைவாகவும் நாரணனின் அருட்கதைகளைப் பாடப் பெரிதும் விரும்பினார். அதன் பொருட்டுச் சந்திர கிரகணமும் பௌர்ணமியும் கூடிய ஓர் இரவில் வானுயர எழுகின்ற புனித அலைகளையுடைய கங்கையாற்றில் நீராடி வெண்மணற்கரையில் அமர்ந்து மகேசுவரக் கடவுளைத் தியானம் செய்தார். அப்போது இராமச்சநதிரக் கடவுள் சீதாப் பிராட்டியுடன் அவர்முன் எழுந்தருளிப் பாகவதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்க்குமாறு பணித்து மறைந்தார். தியானத்திலிருந்து மீண்ட போதனர் பாகவதத்தின் பெருமையையும் தாம் திருமாலின் அருளைப் பெற்றதையும் உணர்ந்து மகாபாகவதத்திற் காணும் பாரிஜாதமரத்தின் திருவடைக்கலம் பெற்றுத் தம் ஊர் திரும்பினார். ஏகசிலா நகரம் வந்தடைந்த சில நாட்களுக்குப் பிறகு சான்றோர், உறவினர் ஆகியோரின் ஆணைப்படி இப் பாகவதத்தை இயற்றத் தொடங்கினார்.''

மேற்கண்ட செய்தியினால் போதனர் கிரகண நாளில் ஆற்றில் நீராடிப் பம்மெரா திரும்பினார் என்பதும், சில நாட்கள் கழித்து ஏகசிலா நகரம் சென்றார் என்பதும், அங்கே பாகவதத்தை இயற்றினார் என்பதும் தெளிவாகின்றன. அவரால் குறிப்பிடப்படும் கங்கையாறு கோதாவரிதான், பாகீரதி அன்று. நன்னயா தம்முடைய பாரதத்தில் கோதாவரியைத் தென் கங்கை (தட்சிண கங்கா) என்று வருணிக்கிறார். கோபராஜு ''திரியம்பகா மலை முகட்டிலிருந்து பிறந்த'' என்னும் அடை கொடுத்துக் கோதாவரியைக் கங்கை என்கிறார். கோதாவரியைக் கங்கை எனக் குறிக்கும் மரபு கோதாவரிக் கரையில் உள்ள தெலுங்கானாப் பகுதியில் இன்றும் உண்டு. எனவே கிரகண நாளன்று போதனர் நீராடிய ஆறு கோதாவரியே என்பது தெளிவாகிறது. சிலர் பத்திராசலத்தருகில் அவர் நீராடியிருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் இது வெறும் ஊகம்தான். எவ்வாறாயினும், மேற்கண்ட செய்தியினால் போதனர் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள பம்மெராவில் பிறந்து வாழ்ந்தார் என்பது உறுதிப்படுகிறது.

போதனரின் காலம்

போதனரின் காலம் குறித்தும் கருத்து வேறுபாடு இருப்பினும் அவர் வாழ்ந்த நூற்றாண்டைப் பொறுத்தமட்டில் அறிஞர்களிடையே ஒன்றுபட்ட கருத்து நிலவுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார் என்று சிலரும் அதே

நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார் என்று சிலரும் கருது கின்றனர். போதனர், கவி சர்வ பௌம ஸ்ரீநாதருக்குச் சமகாலத் தவர் என்றும், அவர்கள் இருவருக்கும் குடும்ப உறவு கூட இருந்தது என்றும் கூறுகிற கதைகளும் இந்நாட்டில் நிலவு கின்றன. ஸ்ரீநாதருக்குச் சற்று இளையவராகப் போதனர் இருந் திருக்கக்கூடும் எனறு நம்புதற்குரிய காரணங்கள் இருப்பினும் அவர்கள் மாமன் மைத்துனர் உறவு முறையினர் என்னும் நம்பிக்கைக்குத் தக்க சான்றுகள் இல்லை இராசகொண்ட அரசராகிய சிங்கபூபாலரின் அவைக்குச் செல்லுமுன் கலை மகளின் அருள்வேண்டி ஸ்ரீநாதர் பாடிய பாடலை அனைவரும் அறிவர். ரேச்சர்ல பரம்பரையைச் சேர்ந்த இராசகொண்ட அரசர் களுள் சிங்கபூபாலன் என்னும் பெயரில் மூவர் இருந்தனர். அவர் களுள் ஸ்ரீநாதர் சந்தித்த சிங்கபூபாலரும், போதனரின் போகினி தண்டகத்துடன் தொடர்புடையவரும் ஒருவரேயாவர். இந்தச் சிங்கபூபாலர் 'சர்வக்ஞ' என்ற விருதுடையவரும், வசந்தாவனீ நாதரின் சகோதரருமாகிய ராவுசிங்க மன்னரின் பெயரர்' குமாரான்ன போத அரசரும் போசமாம்பாவும் இவருடைய பெற்ருேர்கள். கி. பி. 1430 முதல் 1475 வரை அரசோச்சிய இவரை மும்மடி சிங்கபூபாலர் என்றும் அழைப்பர். போதன ரும் ஸ்ரீநாதரும் இவ் வாட்சிக் காலத்தே வாழ்ந்தவராக இருக்க லாம். ஸ்ரீநாதரைவிடப் போதனர் இளையவராகையால், 15ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் நெடுங்காலம் ஸ்ரீநாதரும், இந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் நெடுங்காலம் போதனரும் வாழ்ந் தனர் எனக் கொள்ளலாம்.

போதனர் கி. பி. 1450 முதல் 1510 வரை வாழ்ந்திருக்க லாம் என்று காலஞ்சென்ற சாகண்டி சேஷய்யாவும், கி. பி. 1400 முதல் 1470வரை வாழ்ந்திருக்கலாம் என்று பிறரும் கருது கின்றனர். இந் நூற்றுண்டின் முற்பகுதியில் சில காலமாவது போதனர் வாழ்ந்தார் என்று கொண்டால்தான் இவர் ஸ்ரீநாத ருக்குச் சமகாலத்தவர் என்று கருத முடியும். எனவே ஏறக் குறைய கி. பி. 1430இல் பிறந்து அந் நூற்றுண்டிறுதி வரையில் போதனர் வாழ்ந்தனர் என்று கொள்வதுதான் பொருத்த மானது.

இம் முடிவை ஆதரிக்கும் வேறு பிற சான்றுகளும் உள்ளன. தாட்சயானி பரிணயம் என்னும் தங்களுடைய கவிதையைக் குரிஜல சினமல்லன சோமயாஜிக்கு அர்ப்பணித்த கவிஞர் களாகிய கேசனர், மல்லனர் ஆகிய இரு கவிஞர்களும் போத னரின் பேரர்கள். மேற்குறித்த சோமயாஜியின் கொள்ளுப்

பேரனுன பர்வதீஸ்வரரின் மகனுகிய பேரமந்திரி என்பவருடைய ஆணைப்படி 1756, அக்டோபர் 18 ஆம் நாள் [தாத, அஸ்வயுஜ பத்தாம் நாள். திங்கட்கிழமை) போதுரி பெத ராமாமாத்யா என்பவரால் தாட்சயானி பரிணயம் படியெடுக்கப்பட்டது என்று ஓலைச்சுவடிகளால் அறிகிறோம்.

கேசனர், மல்லனர் என்ற கவிஞர்கள் போதனருக்கு நான்கு தலைமுறைகள் பிற்பட்டவராவர். இக் கவிஞர்களுக்குச் சமகாலத்தவரான சோமயாஜிக்கு ஐந்து தலைமுறைகள் பிற்பட்டு வாழ்ந்தவர் பேரமந்திரி. ஒரு தலைமுறைக்கு 30 ஆண்டுகள் என்று கொண்டால் பேரமந்திரிக்கு 270 ஆண்டுகள் முற்பட்டவர் போதனர் என்பது தெளிவாகிறது. கிபி. 1756இல் பேரமந்திரி வாழ்ந்ததால் போதனர் 1486இல் (1756-270) வாழ்ந்தவர் என்ருகிறது. பாகவதத்தின் ஆறு, பதினொன்று, பன்னிரண்டாவது காண்டங்களைத் தனியே இயற்றிய ஹரிபட்டு என்ற கவிஞர் கி.பி.1510இலும், சிருங்கார சாஸ்தாகமு என்னும் பெயரில் ஆரும் காண்டத்தை ஆக்கிய இரட்டைப் புலவர்களான நந்திமல்லயர், கண்டசிங்கனர் இருவரும் கி.பி 1480இலும் வாழ்ந்தவர்கள் என அறிகிறோம். பாகவதத்தை இயற்றிய போதனர் இவர்கள் காலத்திற்கு முந்தியவர் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை இதனுலும் போதனர் ஏறக்குறைய கி.பி 1430 முதல் 1500 வரை வாழ்ந்தவர் என்னும் முடிபு உறுதியாகிறது.

போதனரின் குடும்பம்

போதனரின் 'வீரபத்ர விஜய'த்திலும் பாகவதத்திலும் இவருடைய குலமரபு பற்றிய பாடல்கள் உள்ளன. போதனரின் பாட்டனுராகிய எல்லனரின் இரு தம்பியர், இரு தமையன்மார் அவருடைய தந்தையின் சகோதரர்கள் ஆகியோரைப் பற்றி வீரபத்ரவிஜயம் குறிப்பிடுகிறது. இதில் பீமனரின் தந்தையாகிய மல்லயரிலிருந்து அவர்தம் குல மரபு தொடங்குவதாக உள்ளது. பாகவதத்தில் குறிப்பிடப் பெறும் குலமரபுச் செய்திகள் மிகவும் சுருங்கியனவாயினும் வீரபத்ரவிஜயத்திலிருந்து மாறுபட்டனவல்ல. இவற்ருல் போதனரின் குடும்பம் கௌண்டினிய கோத்திரத்தையும் ஆபஸ்தம்ப சூத்திரத்தையும் சேர்ந்தது என அறிகிறோம். பாகவதத்தில் காணப்படும் தொகுப்புரையில் இவர் பெயருடன் ஆமாத்யா என்ற பெயரும் காணப்படுதலின் இவர் நியோகி அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர் என அறிகிறோம். கேசனர், லக்கமா ஆகியோர் இவருடைய பெற்ருேர் எனவும்

தமையன் திப்பனர் எனவும், பாட்டனர் எல்லனர் எனவும் கொள்ளுப் பாட்டனர் சோமனர் எனவும் அறிகிறோம். கௌரமாவும் அன்னயாவும் சோமனரின் பெற்றோர். பீமனர் அவருடைய பாட்டனர் எனவும், மல்லயர் கொள்ளுப்பாட்டனர் எனவும் அறிகிறோம்.

போதனர் தம் தந்தை சைவ தத்துவத்தை அறிய விரும்புபவர் என்று வீரபத்ரவிஜயத்தில் கூறுகிறார். பாகவதத்திலும் சைவ சமயத்திலும் நல்ல தேர்ச்சியுள்ளவர் என்று குறிப்பிடுகிறார். பல்வேறு நற்பண்புகள் நிறைந்த இவருடைய தாயார் லக்கமா என்பவர் அருந்ததி, கங்கை, சசீ, கௌரி, பூமி, பாரதி, லக்குமி, குந்தி ஆகியோரைப் போன்றவர். இவ்வம்மையார், தம் கணவனின் கட்டளையை மீறுதவர்; பிற ஆடவரின் நற்பண்புகளை எடுத்துக் கூறுதவர்; தம் வாயிற்படியைக் கடவாதவர்; அன்புடைமையும், தாராள மனப்பான்மையும் குறைவற நிறைந்தவர். ஏழ்மையால் துன்புற்றோருக்குப் பொருள் பல நல்கி துயர் துடைக்கும் தாய் எனவும், பெருந்தன்மை, நாணம், மானமுடைமை, அறிவு நுட்பம், விருந்தோம்பல் போன்ற நற்குணங்களின் இருப்பிடம் எனவும் சிவனை வணங்குவதில் பவானிக்கு ஒப்பானவர் எனவும் பாகவதத்தில் பாராட்டப் பெறுகிறார். தம்முடைய தமையனார் ஈசுவரனை வணங்குவதில் பேரவா உடையவர் எனப் பாகவதத்தில் குறிப்பிடுகிறார். வீரபத்ரவிஜயத்தில் அவருடைய தோற்றப் பொலிவையும், அன்பு, அறிவு போன்ற நற்பண்புகளைப் பற்றியும் போதனர் மிக விரிவாக வருணிக்கிறார். போதனருக்கு மல்லனர் என்று ஒரு மகன் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் இதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. தாட்சயாணி பரிணயம் என்ற நூலில் பண்டைய புலவர்களைப் புகழ்ந்து பாடுமிடத்துப் போதனரைத் தம் பாட்டனரெனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் போதனரை அவர்களுடைய முப்பாட்டனராகக் கருதுகின்றனர். அவர்களுடைய தந்தையார் புரோத சரஸ்வதி என்பவர்.

புரோத சரஸ்வதி என்பவருக்கு அப்பலம்மா, வீரம்பா என இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் அப்பலம்மாவுக்குக் கேசனரும் வீரம்பாவுக்கு மல்லனரும் பிறந்தனர். புரோத சரஸ்வதி போதனரின் பெயரராக இருந்திருப்பின் அவர் மல்லனரின் மைந்தர் எனவும், தம் தந்தையின் பெயரைத் தம் மக்களில் ஒருவருக்கு இட்டு வழங்கியிருக்கலாம் எனவும் கருத இடமுள்ளது. ஆனால் மேற்கூறிய கவிஞர் இருவரும் போதனரைத் தம் பாட்டனர் எனத் தெளிவாகக் கூறுவதால் அவரை முப்

பாட்டனர் எனக் கருதும் கொள்கை ஏற்புடையதாக இல்லை. புரோத சரஸ்வதி, என்னும் விருது பெற்ற கவி கேசனருக்கும் அவர் மனைவி அப்பமாவுக்கும் பிறந்த எல்லமா வழித் தனக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர் என்று அஜ்ஜரபு பேரயலிங்க கவி, தம் ''ஒட்டயநம்பி விலாசம்'' என்ற நூலில் கூறுகிறார். இதி லிருந்து கேசனரே புரோத சரஸ்வதி என்ற பட்டத்தைப் பெற் றிருந்தார் என்று துணிய நேருகிறது. ஆனல் கேசனர், மல்லனர் ஆகிய இரண்டு கவிஞர்களும் தாங்கள் புரோத சரஸ்வதிக்கு அவருடைய இரண்டுமனைவியர்வழிப் பிறந்த மக்கள் என்று தெளி வாகக் கூறுகின்றனர். அவர்களுடைய கூற்றை நம்ப மறுப்பதற்கு உரிய காரணங்கள் எதுவும் இல்லை. போதனருக்குப் புரோத சரஸ்வதி என்ெருரு மகனர் இருந்தார் என்பது இதனல் பெறப் படுகிறது. இதனை உறுதியாகக் கொள்ள இயலாவிடினும், போதனருக்குப் பின்னரும் அவருடைய குடும்பத்தில் கவிதைப் பெருக்கு இடையருது ஓடிக்கொண்டிருந்தது எனக் கூறலாம்.

தம் குருவாகிய இவடூரி சோமசேகரரின் அறிவுரைப்படி, வீரபத்ரவிஜயம் என்னும் நூலை இயற்றியதாகப் போதனர் கூறுகிறார். வேதம் மற்றும் 'ஆராத்ய' மரபினைச் சார்ந்த வீரசைவ சமயத்தைப் பரப்பியவர்களிடையே இவடூரிகுடி அறிஞர்கள் பெரும் புகழ்பெற்று விளங்கினர். தம் பெற்ருேரும் தமையனும் சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டவர்கள் என்று போதனர் கூறுகிறார். இதனல் தம் பெற்ருேரைப் போலவே போதனரும் சிறுவயதுப் பருவத்தில் சைவ சமயப் பற்றுடையவராய் விளங்கினர் என்று அறிகிறோம். வயதும் அநுபவமும் முதிரமுதிர இறைவன் என்னும் முழுமுதலைப் பற்றிய உண்மைப் பொருளை உணர்ந்திருக்கக் கூடும். அதனல் தான் இவர் பிற்காலத்தே 'சிவகேசவ அத்வைதம்' என்னும் கொள்கையைத் தழுவினர். பாகவதத்தை இயற்றும்போது சிவன் கேசவன் ஆகிய இரு கடவுளர்பாலும் வேறுபாடற்ற பக்தி பூண்டு ஒழுகும் சமரச மனப்பான்மையைப் போதனர் பெற்றிருந்தார் என அறிகிறோம். ''சிவனை வணங்காதவனும், திருமாலின் புகழை உளமாரப் பாடாதவனும் தன்னையீன்ற தாய்க்கு வெறும் சுமையாவான்'' என்னும் அவரது புகழ்மிக்க பாடற்கருத்தும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஒருமுறை போதனர் கோதாவரியின் கரையில் அமர்ந்து சிவனை நினைத்து வழிபட்டார். அப்போது அவருக்குத் திருமாலின் அவதார மாகிய இராமபிரான் திருக்காட்சி அருளினர் என அறிகிறோம். இதனல் இவ்விரு இறைவடிவங்களிலும் போதனருக்கு இருந்த இனிய ஒருமித்த ஈடுபாட்டை நன்கு அறியலாம்.

தமக்கு எழுத்தறிவித்த இறைவன் தம் தந்தையார் என்றும் கவிதை இயற்ற அருளியவர் வீரபத்ரக் கடவுள் என்றும போதனர் தம்முடைய வீரபத்ர விஜயத்தில் குறிப்பிடுகிருர். தாம் ஒரு பிறவிக்கவிஞர் என்றும் கவிதைக் கலைவன்மை தமக்கு பரமேஸ்வரக் கடவுளின் அருளால் கிட்டியது என்றும் இவர் தம்முடைய பாகவதத்தில் கூறுகிருர். சிறு வயது முதற் கொண்டே இவர் தம் தந்தையாரிடமே வடமொழி, தெலுங்கு ஆகிய இரண்டையும் கற்றிருக்க வேண்டும். இவடூரி சோம சேகரர் இவருடைய சமயகுருவாக இருந்திருக்கலாம். 'சகஜ பாண்டித்ய' என்னும் பட்டத்தால், போதனர் கவிப் புலமையைப் பிறவியிலேயே பெற்ருர் என்ருே இப்புலமை தானே அவரை வந்தடைந்தது என்ரு கூற இயலாது. தம் தந்தையாரிடம் வடமொழியும் தெலுங்கும் கற்று வந்த போதே தத்துவ நூல்கள் பலவற்றைத் தாமே முயன்று கற்று வந்தவராதல் வேண்டும். ஶ்ரீநாதர் போன்ற ஆசிரியர்களிடமிருந்து சாஸ்திர நூல்களைப் போதனர் கற்றிருக்க முடியாது. வடமொழிப் புராணங்களிலேயே பாகவத புராணம் தான் மிகமிகக் கடினமானது. தம்முடைய அரிய முயற்சியாலும் பிற அறிஞர்களின் துணையாலும் போதனர் அதனைச் செவ்வை யாகக் கற்று உணர்ந்திருக்கக் கூடும். கவித்ரயம், நாச்சன சோமனர், பாலகுரிகி சோமநாதர், நன்னசோடர், பாஸ்கரர் போன்ற புலவர் பெருமக்களின் நூல்களைப் போதனர் நன்கு ஆழ்ந்து கற்றிருக்கவேண்டும். இப் புலவர்கள் இயற்றிய நூல்களின் செல்வாக்கைப் போதனரின் பாகவதத்தில் தெளி வாகக் காணலாம். தம்முடைய பெருமுயற்சியோடு இறை யருளும் குறைவறப் பெற்றவர் போதனர். சிறு வயது முதற் கொண்டே சிறந்த பக்தராக விளங்கிய போதனருக்கு இறைவன் திருவருளில் ஊற்றமான நம்பிக்கை இருந்தது. அதனுலதான் தம் கவிச்சிறப்புக்கு இறையருளே காரணம் என்று அடிக்கடி போதனர் குறிப்பிடுகிருர். முதனூல் காணும் திறம் அல் 'து மேதைமைத் தன்மை இறையருளால் கைகூடுவதேயன்றி ஒருவருடைய செய்வினை முயற்சியால் பெறப்படுவது அன்று.

வேளாண் தொழில்

தம் இளம் பருவத்தில் பம்மெர கிராமத்தில் வாழ்ந்திருப் பினும் தம கவிப்புலமையை வளர்த்துக் கொள்வதற்காகப் பெரும் புலவர்களையும் அறிஞர்களையும் சந்தித்துப் பழகும் நோக்குடன் அருகிலிருந்த ஓருகல்லு, ராசகொண்டா ஆகிய

நகரங்கட்கும் போதனர் அடிக்கடி சென்றிருக்கலாம். காலஞ்சென்ற கொம்மராஜு லக்ஷ்மணராவ் பந்துலு அவர்கள் சுட்டிய தற்கேற்ப போதனரின் தமையனார் தம்மூர் கர்ணம் பணியைச் செய்துகொண்டிருக்க, தம் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டி அறிஞரும் நல்ல கவிஞருமாகிய போதனர் அருகிலிருந்த அந் நகரங்கட்குச் சென்றிருக்கலாம் எனக் கருதலாம். அல்லது அறிஞர் ஆருத்ராவின் கருத்துப்படி தம் குடும்பத் தொழிலாகிய கர்ணம் பணியிலும் தேர்ச்சி பெற்றிருந்த போதனர் குடும்ப வருவாயினைப் பெருக்குதற் பொருட்டும் கணக்கராக அங்குச் சென்றிருக்கலாம். ஆன்மீகத்திலும் பக்திநெறியிலும் போதனரின் ஆர்வம் நாளுக்குநாள் மிகுந்தது. எனவே நகர வாழ்க்கையின் நாகரிகப் போக்கில் வெறுப்புற்றுத் தம்மூர் திரும்பி வேளாண் தொழிலை மேற்கொண்டு அதில் கிடைக்கும் வருவாயே போதுமென்று வாழ்ந்திருந்தார் எனவும் கருதலாம். பெருங்கவிஞராகிய ஸ்ரீநாதர் ஒருமுறை பெம்மெராவுக்கு வந்து போதனரைக் கண்டனர் எனவும் அப்போது ''வேளாண் தொழிலினர் நலமா'' எனக் கேலி செய்து தக்க சுடுவிடை பெற்றனர் எனவும் வழங்கும் கதை யாவரும் அறிந்த ஒன்று.

காகதிய வீழ்ச்சிக்குப் பின்னர் தெலுங்கு நாட்டை விசய நகர அரசர்களும் கொண்டவீடு ரெட்டிகளும், ராசகொண்டாவைச் சேர்ந்த வேலமா மன்னர்களும், கட்டாக்கைச் சேர்ந்த கஜபதிகளும் தமக்குள் பகிர்ந்துகொண்டனர். இவர்கள் தமக்குள் அடிக்கடி போரிட்டுக்கொண்டிருந்தனர். இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பாமினி சுல்தான்கள் இவர்களுடைய நாட்டின் பெரும் பகுதியை எளிதில் கைப்பற்றிக்கொண்டனர். ராசகொண்ட அரசர்கட்கும் பாமினி சுல்தான்கட்கும் இடையில் நிகழ்ந்த இடையறாத போர்களின் விளைவாக நாட்டில் அமைதி குன்றிக் குழப்பம் மேலிட்டது. கட்டாக் நாட்டுக் கஜபதிகளின் துணையோடு ஓருகல்லு, புவனகிரி போன்ற கோட்டைகளை ராசகொண்ட அரசர்கள் மீட்டுக் கைப்பற்றினரேனும் அவற்றை நீண்டகாலம் பாதுகாக்க இயலவில்லை. கி. பி. 1475இல் இரண்டாம் முகம்மதுஷா ராசகொண்ட மற்றும் தேவரகொண்ட அரசுகளைக் கைப்பற்றிக் கொண்டார். இத்தகைய போர்களால் தெலுங்கானா நாட்டில் மக்கள் பாதுகாப்பும் அமைதியுமின்றி வாழ்ந்தனர். போதனருடைய பாகவதத்தின் சில பகுதிகள் சிதைந்து அழிந்தமைக்கு இத்தகைய அமைதியற்ற அரசியல் குழப்பங்கள் காரணமாக இருந்திருக்கலாம் என்று காலஞ்சென்ற மல்லம்பள்ளி சோமசேகர சர்மா கருதுகிறார்.

வேத தர்மத்தை நிலைநிறுத்த விசயநகர அரசர்கள் பெரும் பாடுபட்டனர். சாயண என்பவர் வேதங்கட்கு மிகச்சிறந்த தொரு விளக்கவுரை எழுதி வேத சமயத்தின் செல்வாக்கு பரவு வதற்குத் துணை செய்தார். ஆயினும் அக் காலத்தே இருந்த 'மகானுபவ' பிரிவைச் சார்ந்த வைணவர்கள், வீர சைவர்கள், பௌத்தர்கள், சைனர்கள் ஆகியோர் வேத சமயத்தையும் அம் மரபையும் விரும்பவில்லை. இவர்கட்கிடையே நிகழ்ந்த பொரு ளற்ற பூசல்களைக் கண்ட போதனர், திக்கனர் என்பவர் உரு வாக்கிய அரிகராத்வைதம்தான் மிகச் சிறந்த சமயநெறி என்று துணிந்தார். வேதாந்த தேசிகரின் மகனாராகிய நைனாசார்யா என்பவர் ராசகொண்ட பகுதிக்குச் சென்று பிறமத வாதிகளை வென்று சிங்கய மாத வேந்திரரை வைணவராக்கினார் என்ற செய்தியை வைணவ நூல்களால் அறிகிறோம். வைணவ சம யத்தைப் பரப்ப எழுந்த இந்த நிகழ்ச்சியும் போதனர் திருமால் அன்பராக மாறுவதற்கு ஓரளவு காரணமாக இருந்திருக்கலாம்.

கி. பி. 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த் சைதன்யர், வல்லபர் ஆகிய இருவரும் வட இந்தியாவிலும் வங் காளத்திலும் கிருஷ்ண பக்தியைப் பரப்பி வைணவ மதப் பிரசாரம் செய்தனர். இவ்விருவரில் சுத்தாத்வைதம் அல்லது புஷ்டி மார்க்கத்தைத் தோற்றுவித்த வல்லபர் ஒரு தெலுங்குப் பிராமணர். சைதன்யரும் ஆந்திர நாட்டிற்கு விசயம் செய் திருக்கலாம் என்று கருதச் சில ஆதாரங்கள் உள்ளன. இவ்விரு சமய அறிஞர்களுக்கும் பாகவதமே சிறந்த நூலாதலின், போத னரின் சிறந்த தெலுங்கு மொழியாக்கத்தை இருவரும் நன்கு கற்றவராகவோ அல்லது அதுபற்றிக் கேள்விப்பட்டவராகவோ இருந்திருக்கலாம். இவ்விரு சமயக் குரவர்களால் ஈர்க்கப்பட்ட போதனர் தம் புராணத்தின் பத்தாம் காண்டத்தை நாயக நாயகிபாவப் பக்திப் (மதுர பக்தி) பெருங்கடலாகப் பாடி யருளினார் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

இயல் இரண்டு

போதனரின் படைப்புகள்

வீரபத்ர விஜயம்

போதனர் தம்முடைய பாகவதத்தை இயற்றத் தொடங்கியபோது சமயப்பற்று மிக்கவராய் இருந்ததுடன், சமயப் பொறை உடையவராகவும் இருந்தார். சிவன், திருமால் ஆகிய இருவர்பாலும் பக்தி உடையவராய்த் திகழ்ந்தார். தொடக்க காலத்திலிருந்தே இத்தகைய பண்பினராக இவர் இருந்திருப்பார் என்று கூறுவதற்கில்லை. இவருடைய பெற்றோரும் சமய ஆசிரியரும் வீரசைவ பரம்பரையைச் சேர்ந்தவராதலின் போதனரும் இளமையில் அதே சமயத்தை மேற்கொண்டு ஒழுகி இருத்தல் வேண்டும். இவர் வடமொழி, தெலுங்கு இலங்கியங்களில் தேர்ச்சி பெற்றிருந்ததையும் கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்ததையும் அறிந்த இவருடைய குரு சோம சேகரர் இவரை ''வீரபத்ர விஜயம்'' என்ற நூலை இயற்றுமாறு ஊக்கினார்.

''சிறந்த நூல்கள் பலவற்றைக் கற்கவில்லை என்றும், மிகவும் இளைஞனாய் இருக்கிறேன் என்றும் அஞ்சற்க: என் ஆசியினால் நல்ல கவிதை இயற்றும் ஆற்றல் உனக்குக் கைகூடும். மேலும் வீரபத்ர கடவுளின் அருளாசி உனக்கு நிறைய உண்டு'' என்று கூறித் தன் மாணவனுக்கு நல்லாசி வழங்கினார். இயல்பாகவே சிவபக்தியினை மிகுதியாகப் பெற்ற போதனர், தம் குருவின் ஆணையினால் ''வீரபத்ர விஜயம்'' என்ற நூலை இயற்றினார்.

பாகவதத்தை இயற்றி முடித்த பின்னர் போதனர் வீரபத்ர விஜயத்தை இயற்றினார் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அச்சேறிய படிகளில் மட்டும் காணப்பட்டு ஓலைச்சுவடிகளில் காணப்படாமல் இருக்கும் கீழ்வரும் ஒரு பாடல் இத்தகைய கருத்திற்கு இடமளிக்கிறது. ''பாகவதத்தை இயற்றும்போது தக்கன் இயற்றிய வேள்வியைப் பற்றிக் குறிப்பிடுகையில் இறை நலம் சாராத இழுக்குடைய சில கருத்துக்களை வெளியிட்டேன். அப் பாவத்திற்குக் கழுவாயாகச் சைவ சமயத்தின் ஆகமங்களில் ஒன்றாகக் கருதத்தக்க வீரபத்ர விஜயத்தை இப்போது நான் இயற்றுகிறேன்.''

பாகவதத்தின் நான்காம் காண்டத்தில் வரும் தக்கயாகக் கதையில் தக்கன் கூற்ருக வைத்துச் சிவபெருமானை இகழ்ந்து கண்டித்த பாவத்திற்குக் கழுவாயாகப் போதனர் வீரபத்ர விஜயத்தை இயற்றினுர் என்பது இச்செய்யுளால் தெளிவாகிறது. இக்கூற்று உண்மையானுல், பாகவதத்திற்குப் பின்னரே வீரபத்ர விஜயம் இயற்றப்பட்டிருக்கவேண்டும் எனக்கொள்ளவேண்டும். ஆனுல் பல திறனுய்வறிஞர்கள் மேற்காட்டிய செய்யுளை இடைச் செருகல் என்று கருதுகின்றனர். நான்காம் காண்டத்தில் வரும் தக்கனின் சிவநிந்தனை பழிப்பதுபோலப் புகழும் வஞ்சப் புகழ்ச்சியாக அமைந்துள்ளது என்பதைப் போதனரே குறிப்பிடுவதால், கழுவாயாக அவர் வீரபத்ர விஜயத்தை எழுதவேண்டிய அவசியமில்லை என்பது அவ்வறிஞர்களின் முடிபு.

இதனுலும் பாகவதத்திற்கும் வீரபத்ர விஜயத்திற்கும் இடையே உள்ள கவிதை நடை வேறுபட்டாலும் வீர பத்ர விஜயத்தைப் போதனர் இயற்றவே இல்லை என்று சிலரும், போதனர் குடும்பத்தைச் சேர்ந்த அதே பெயருடைய வேருெருபுலவர் அதனை இயற்றியிருக்கலாம் என்று வேறு சிலரும் எண்ணுகின்றனர். ஆனுல் தம் குரு சோம சேகரரின் விருப்பப்படி போதனர் வீரபத்ர விஜயத்தை இயற்றினுர் என்று தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. பாகவதத்தில் கூறப்பட்டுள்ள குலமரபும் வீரபத்ர விஜயத்தில் உள்ள குலமரபும் ஒன்ருேடொன்று பொருந்தியுள்ளன. பாகவதத்தைப் போன்று செவ்விய நடையுடைய தன்ருயினும் வீரபத்ர விஜயத்தின் கவிதை நடையில் போதனரின் கவிதைப் பண்பு காணப்படுகின்றது. மேலும் தம் இளமைப் பருவத்தே போதனர் வீரசைவ மரபைப் போற்றி ஒழுகி வந்தார். இன்னேரன்ன காரணங்களால் வீரபத்ர விஜயத்தை இயற்றியவர் போதனர்தான் என்று கொள்ளுவதே பொருத்தமானது.

''சிறந்த நூல்கள் பலவற்றைக் கல்லாதவன் என்றும், மிகவும் இளைஞனுய் இருக்கிறேன் என்றும் அஞ்சற்க'' என்று கூறி வீரபத்ர விஜயத்தை இயற்றுமாறு சோமசேகரர் தெளிவாக ஆணையிட்டார். வீரபத்ர விஜயத்தில் காணப்படும் சில சொல்லாட்சிகளும், இலக்கணப் பிழைகளும் புதுமையான சில யாப்பு முறைகளும் பண்படாக் கவிதை நடையும், போதனர் தம் இளமைப் பருவத்தே இதனை இயற்றியிருக்க வேண்டும் என்பதை உறுதிப் படுத்துகின்றன. மேலும் முந்தைய சைவப் புலவர்களின் செல்வாக்கும் இந்நூலில் காணப்படுகிறது. எனவே இது போதனரின் முதல் கவிதைப் படைப்பு எனத் துணியலாம்.

பாகவதத்தை இயற்றும் போது போதனரின் அகவையும் அறிவும் நன்கு முதிர்ச்சியுற்றிருந்தன என்பதில் கருத்து வேறு பாட்டிற்கு இடமில்லை.

வீரசைவப் பற்று

வீரபத்ர விஜயத்தில் நான்கு காண்டங்கள் உள்ளன. அச் சேறிய படியில் உள்ள நான்காம் காண்டமும் தம்மிடம் உள்ள ஓலைச்சுவடியின் நான்காம் காண்டமும் வேறுபடுகின்றமையால் இந் நான்காம் காண்டத்தைப்போதனர் இயற்றி இருக்கமாட்டார் என்று காலஞ்சென்ற மணவல்லி இராமகிருஷ்ணகவி ஐயுறுகிறார். ஆனால் இந்நூலின் நான்கு காண்டங்களையும் ஒன்றோடொன்று தொடர்புறுத்திக் காட்டி இவை போதனரின் படைப்புதான் என்றும், இந் நான்காம் காண்ட பாடுபொருளினை வாயு புராணம், பிரம்மபுராணம் ஆகிய இரண்டிலிருந்தும் போதனர் பயன்படுத்தியுள்ளார் என்றும் காலஞ்சென்ற சாகண்டி சேஷய்யா அவர்கள் நிறுவியுள்ளார். இந்நூலின் தொடக் கத்தே சிவன், வீரபத்ரன், கணபதி, கலைமகள் ஆகிய கடவுளர் களைப் போதனர் வணங்கியுள்ளார். மேலும் வியாசர், வால் மீகி, காளிதாசர், பாணர், மாகர், சிவபத்ரர், பாரவி, போஜர் ஆகிய வடமொழிப் புலவர்களையும், நன்னயர், திக்கனர் வேமுலுவாட பீமகவி, ரங்கநாதர் போன்ற தெலுங்குக் கவி ஞர்களையும் போதனர் புகழ்ந்து போற்றியுள்ளார். தெலுங்குப் புலவர்களுள் ஒருவராகச் சிருங்கார கவிநாதர் என்ற ஒரு பெய ரைப் போதனர் குறிப்பிடுகிறார். இத் தொடர் ரங்கநாதர் என்ற கவிஞருக்கு அடைமொழியாகப் பயன்படுத்தபட்டுள் ளதே தவிரச் சில திறனாய்வறிஞர்கள் கருதுவது போல் ஸ்ரீநாத ரைக் குறிப்பிடவில்லை. நன்னசோடர், எர்ரனர், நாசன சோமனர், பாஸ்கரர் போன்ற தெலுங்குக் கவிஞர்களைப் பெயர் விதந்து போதனர் குறிப்பிடாவிடினும் அவர்தம் நூல்களையெல் லாம் நன்கு கற்றுள்ளார் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

''அசைவர்களைக் காணுமலும், சிவபெருமானின் திருவடித் தாமரைகளை வணங்கியும் பற்றுக்களை அகற்றிக் கொண்ட பக்திக் கவிஞர்களையும் சிவனை வணங்கி அவனருள் பெற்ற கவி ஞர்களையும் நான் நெஞ்சாரப் புகழ்கிறேன்'' எனப் பொருள் படும் இவருடைய பாடலொன்றே இளமைப் பருவத்தே போத னருக்கு வீரசைவ மதத்தின்பால் இருந்த பேரார்வத்திற்குச் சான்று பகர்கிறது.

வீரபத்ர விஜயத்தின் கதை

வீரபத்ர விஜயத்தில் போதனர் கூறும் கதைப் போக்கு பிரம்ம புராணத்தைவிட வாயு புராணத்தோடு பெரிதும் பொருந்தியுள்ளது.

ஒரு காலத்தே சிவனும் பார்வதியும் கயிலைமலையில் அரசு வீற்றிருந்த போது கௌதமர், காசியபர் போன்ற முனிவர்கள் சிவன் புகழ்பாடி கயிலைக்குச் சென்று வணங்கினர். தக்கனும் அப்போது கயிலை சென்றிருந்தான். தம்முடைய மாமனர் ஆயினும் சிவபெருமான் தக்கனுக்குத் தனி மரியாதை எதுவும் செய்யாது பிறரைப் போலவே தக்கனையும் வரவேற்று உபசரித்தார். இதனுல் மனம் புண்பட்ட தக்கன் தன் நாடு சென்றதும் பெரியதொரு வேள்வி செய்தான். அதற்குச் சிவனைத் தவிர பிற எல்லாக் கடவுளர்களையும் முனிவர்களையும் அழைத்துச் சிறப்புச் செய்தான். இதனையறிந்த நாரத முனிவர் கயிலைக்குச் சென்று தக்கன் மகளிடம் இது பற்றிக் கூறினுர். வியப்பால் அதிர்ச்சியடைந்த அவள் சிவனிடம் வேண்டி அனுமதி பெற்றுத் தக்கனிடம் சென்ருள். தக்கன் அவளை வரவேற்று உபசரியாததுடன் சிவனைப் பலவாருகத் தூற்றினுன். சிவபெருமானின் பெருமைகளைப் பலவாருக அவள் எடுத்துரைத்தும் தக்கன் அவளைப் பொருட்படுத்தவில்லை. எனவே யோகாக்கினியில் மூழ்கி அவள் இறந்தாள். இதனைக் கேள்வியுற்ற சிவன் வெகுண்டு வைவஸ்வத மனுவின் காலத்தே தக்கனை அழிப்பதாகச் சூளுரைக்கிருர். தாட்சாயினி இமவான் மகளாகப் பிறந்து சிவனையே மணக்க விரும்புகிருள். இமயமலையில் தவமிருக்கும் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்யுமாறு தன்மகள் பார்வதியை (தாட்சாயினி) இமவான் அனுப்புகிருன். சிவபெருமானும் அதனை உவந்து ஏற்றுக் கொள்கிருர்.

தாரகா சுரனின் கொடுமைகளைத் தாங்க இயலாமல் தேவர்கள் பிரமனிடம் சென்று தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினுர்கள். சிவனுக்கும் பார்வதிக்கும் பிறக்கும் மகனுல் தான் அச்சூரனை அழிக்க முடியும் என்று பிரமன் கூறுகிருன். எனவே தவநிலையில் இருக்கும் சிவனுக்கு பார்வதிமேல் காதல் ஏற்படுமாறு செய்ய மன்மதனை அனுப்புகிருன் இந்திரன். மன்மதனின்மனைவி இரதிதேவி அவனைப் போகவேண்டாமென்று தடுக்கிருள். அவளைப்புறக்கணித்துச் சென்ற மன்மதன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணுல் வெந்து சாம்பலாகிருன். கணவனை இழந்து

வருந்தும் இரதிக்கு அசரீரி ஆறுதல் கூறுகிறது இமவான் தன் மகள் பார்வதியைத் திரும்ப அழைத்துக்கொண்டு போகிறான். சிவபெருமான் நற்குறி சொல்லும் ஆருடனாகப் பார்வதி வீட்டுக்குச் சென்று அவளைக் கண்டு சிவனைக் கணவனாக அடைவதற்குத் தவம் செய்யுமாறு கூறுகிறான். பார்வதி தவம் செய்கிறாள். ஒரு பிரம்மச்சாரி வேடம் பூண்டு அங்குச் சென்ற சிவபெருமான் அவளை மணக்க விரும்புவதாகக் கூறுகிறான்.

பார்வதிக்கும் சிவனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெறுகிறது. இல்லற வாழ்க்கையில் இருவரும் திளைத்து இருக்கையில் தாம் நீலகண்டனாக மாறியது எவ்வாறு என்று விளக்கும்படி பார்வதி சிவனை வேண்டுகிறாள். சிவனும் பாற்கடலைக் கடைந்ததையும் அதில் தோன்றிய நஞ்சையுண்டு தான் நீல கண்டனாக மாறியதையும் பற்றிய கதைகளைப் பார்வதிக்குக் கூறுகிறான.

வைவஸ்த மனுவின் காலம் தொடங்கியதும் தக்கன் மீண்டும் வேள்வி செய்யத் தொடங்கி, சிவனைத் தவிரப் பிற தேவர்களையும் முனிவர்களையும் அழைக்கிறான். ததீசி முனிவர் சிவபெருமானின் பெருமைகளை எடுத்துக் கூறி அவனருள் பெறாத வேள்வி பயனற்றது என்று தக்கனுக்கு அறிவுறுத்துகிறார். தக்கன் சிவனையும் ததீசி முனிவரையும் ஒருங்கு இகழ்ந்து தூற்றுகிறான். ததீசி கயிலை சென்று தக்கனின் வேள்வி பற்றிச் சிவபெருமானுக்கு உரைக்கிறார். இதனைக் கேள்வியுற்றதும் சிவனுக்கும் பார்வதிக்கும் எழுந்த சினத்தால் முறையே வீரபத்ரரும் பத்ரகாளியும் தோன்றுகின்றனர். சிவகணங்களுடன் சென்ற வீரபத்ரர் தக்கன் வேள்வியை அழித்து அவன் தலையையும் கொய்துவிடுகிறார். வேள்வியைக் காத்து நின்ற திருமால் வீரபத்ரருடன் போர் செய்ய, திருமாலின் சக்கரப் படையினைத் தூள் தூளாக்கிப் பிற தேவர்களின் செவியையும் மூக்கையும் வீரபத்ரர் துண்டித்து விடுகிறார். தோற்ற தேவர்களையும் கைப்பற்றி வெற்றியுடன் கயிலாயம் மீள்கிறார் வீரபத்ரர். திருமாலை வரவேற்றுச் சிறப்பு செய்த சிவபெருமான் பிற தேவர்களுக்கும் அவர்களுடைய இழந்த உருவங்களைத் திரும்பப் பெறுமாறு அருள் செய்கிறார். தக்கனும் அன்புடன் உபசரிக்கப் படுகிறான். வீரபத்ரரின் வெற்றி குறித்துச் சிவபெருமான் பெரு மகிழ்வு எய்துகிறார்.

மேற்கண்ட வீரபத்ர விஜயத்தின் கதைப் போக்குப்படி தக்கன் இருமுறை வேள்வி செய்கிறான். முதல் வேள்வி சதியின்

உடல் அழிவிலும் இரண்டாம் வேள்வி வீரபத்ரரால் நேரும் தக்கனின் அழிவிலும் முடிகின்றன. வீரபத்ரரின் வெற்றியைக் கூறும் இரண்டாம் வேள்வி நிகழும் நான்காம் காண்டத்தால் தான் இந்நூல் இப்பெயர் பெறுகிறது. எனவே முதல் வேள்வியைக் குறிப்பிடும் முதற் காண்டத்திற்கும் நான்காம் காண்டத்திற்கும் தொடர்பு உள்ளது. இடையில் உள்ள இரு காண்டங்களில் கூறப் பெறும் கதைப் போக்கிற்கும் வீரபத்ர விஜயம் என்னும் நூற்பெயருக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை.

பிற கவிஞர்களின் செல்வாக்கு

இக் கதைப்பகுதி காளிதாசரின் குமார சம்பவத்திலும் வாயு புராணத்திலும் இருப்பதால் அதனைப் போதனர் தம் நூலிலும் அமைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. கடலைக் கடையும் கதையும் விடமுண்ணும் கதையும் பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டில் வழங்கும் கதையின்படி சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடப்பதற்கு முன்னரே தக்கன் வேள்வி அழிக்கப்படுகிறது.

தெலுங்கு இலக்கியத்தின் முதல் சைவ சமயக் கவிஞராகிய நன்னசோடர் தம்முடைய குமார சம்பவத்தில் தக்க வேள்வி அழிக்கப்படுவதை விவரிக்கிறார். தன் தாயை இகழ்ந்த தக்கனைப் பழிக்குப் பழி வாங்கும் வகையில் கணபதி தன் தந்தையின் அனுமதியோடு தக்கன் வேள்வியை அழித்து அவனைச் சிறை செய்தான் என்று நன்னசோடர் கூறுகிறார். புராணங்களிற் கூறப்படும் வீரபத்ரரைப் பற்றி இவர் எதுவும் குறிப்பிடவில்லை. வீரபத்ரரைக் குறிப்பிடாமல் கணபதிதான் தக்கன் வேள்வியை அழித்தான் என்று நன்னசோடர் கூறுவது புராணமரபுக்கு ஒவ்வாத தவறு என்று கருதிய சோமசேகர குரு, போதனரைப் புராணத்தின் அடிப்படையில் வீரபத்ரரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுமாறு தூண்டியிருக்கலாம் என்று சில திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். இவர்களுடைய கருத்து ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

போதனரின் வீரபத்ர விஜயத்தில் உள்ள பல பாடல்களில் பண்டிதாராத்யர், நாசன சோமனர், ஸ்ரீநாதர் ஆகிய கவிஞர்களின் சாயல் இருப்பதைக் காண்கிறோம். சிவனுடைய தவத்தைக் கலைக்கச் செல்லுமுன் இரதிக்கும் மன்மதனுக்கும் இடையே நடப்பதாக அமைந்துள்ள உரையாடல் பல விதங்

களில் நன்னசோடரின் உரையாடலைப் போன்று அமைந்துள்ளது. வீரபத்ர விஜயத்தில் சதி தன் தந்தைக்கெதிராகச் சினந்து பேசுவதாக உள் பகுதியில் விவேகத்தைவிட உணர்ச்சிப் பெருக்கே மிகுதியும் வெளிப்படுகிறது. பண்டிதாராத்யர் தக்கன் வீழ்ச்சியைக் 'கந்த'யாப்பில் பாடியுள்ளார். சிவ பெருமான் மீது மலரம்புகளை ஏவக் கருதும் மன்மதனை வருணிக்கும் போதனரின் பாடல், சத்தியபாமா நரகாசுரனுடன் போரிடும் நிகழ்ச்சியை வருணிக்கும் நாசன சோமனரின் அற்புதமான பாடலை ஒத்துள்ளது. ததீசி முனிவர் தக்கனைப் பழிப்பதாக அமைந்த ஸ்ரீநாதரின் காசிக்காண்டப் பாடல் சில மாறுதல்களுடன் வீரபத்ர விஜயத்தில் காணப்படுகிறது ஓலைச்சுவடிகளை எழுதியவர்கள் ஸ்ரீநாதரின் பாடலைத் தக்க இடத்தில் சேர்த்திருக்கலாம்.

மணமுறைகள்

ஒரு காலத்தில் சைவர்களால் நாள் தோறும் பாராயணஞ் செய்யப்பட்டு வந்த நீல கண்ட தோத்திரப்பகுதி மூன்றும் காண்டததில் பசப்படுகிறது. சிவபெருமான் முனிவர் எழுவரை மணம் பேசுமாறு அனுப்பிவைத்தல், தன் கணையாழியைத் தந்துவிட்டுப் பாற்சோறு உண்டு மீளுமாறு அவர்களுக்குக் கூறுதல், முகூர்த்த நேரத்தைக கணிக்கக் கடிகையொன்றை வேதிகைமீது சமைத்தல், மகளிர் நல்லிசை முழங்க மணமகனுக்கு உரியோர் மணமகளுக்கு வரிசைப் பொருட்களைக் கொண்டு செல்லுதல், மணமக்கட்கிடையே திரையிடுதல், கூறைப்புடவை அளித்தல், மணமக்கள் ஒருவருக்கொருவர் மங்கல அரிசி தெளித்துக் கொள்ளுதல், மணமகளை மணமகனுக்குக் கொடுத்தல் ஆகிய நிகழ்ச்சிகளைப் போதனர் மிக விரிவாகவும் அழகாகவும் வருணித்துள்ளார். இத்தகைய பண்டைக் கால மணமுறைகள் இன்றும் ஆந்திர நாட்டில் வழங்கி வருகின்றன.

வீரபத்ர விஜயத்தில் இங்குமங்குமாகக் காணப்படும் சில தொடர்களும் மிகைச் சொற்களும் போதனரின் நிறைவுறுத கவிதைப் புலமையைக் காட்டினும், அவருடைய பாடல்களின் இனிய ஓசையமைப்பும், பிற கவிதைச் சிறப்பியல்புகளும் பின்னர்த்தோன்றும் பெருநூலாகிய மகாபாகவதத்திற்கு வித்திடுவனவாய் அமைந்துள்ளன. தக்க வேள்வியைப் பற்றிப் பாகவதத்திலும் போதனர் பாடியுள்ளர். வடமொழிப் பாகவதத்தைத் தழுவி இயற்றப்பட்ட போதனரின் மகாபாகவதம் அவருடைய வீரபத்ர விஜயத்தினும் முதிர்ந்த கவிதைப்பெருமையும் சிறப்பும் உடையது.

போகினி தண்டகம்

தண்டகம் (தண்டக) என்பது ஒரு வகைத் தெலுங்கு யாப்பு இதில் இயற்றப்பட்ட பாடல்களும் 'தண்டக' என்றே அழைக்கப்படுகின்றன. தெலுங்கு இலக்கியத்தின் முதற்கவிஞராகிய நன்னயர் தம்முடைய கிராதார்ஜுனியத்தில் அருச்சுனன் சிவபெருமானைப் புகழ்ந்து பாடும் பகுதியைத் தண்டக யாப்பில் புனைந்துள்ளார். எர்ரனர் என்ற புலவரும் தம்முடைய நரசிம்ம புராணத்தின் ஐந்தாம் காண்டத்தில் தண்டக யாப்பில் ஒரு பாடலை எழுதியுள்ளார். ஸ்ரீநாதரின் நைடதத்திலும் காசிக் காண்டத்திலும் தண்டகப் பாடல்கள் உள்ளன. இவையெல்லாம் அவ்வந் நூல்களிற் காணப்படும் தனித்தனிப் பாடல்களேயன்றி இந்த யாப்பிலேயே இயன்ற முழு நூல்கள் அல்ல. இவ்வகையில் தனக்கென ஒரு கதைப் பொருளைக்கொண்டு முழுவதும் தண்டக யாப்பிலேயே இயன்ற முதல் முழுநூல் போதனருடைய போகினி தண்டகம்தான். இதன் பின்னர்ப் பல தண்டக நூல்கள் இயற்றப்பட்டன. தெலுங்கு இலக்கியத்தில் உள்ள அளவுக்குத் தண்டக நூல்கள் வேறெந்த இந்திய இலக்கியத்திலும் காணப்படவில்லை.

சர்வக்ஞ சிங்கபூபாலனும் ஒரு ஆடற் கணிகையும் போகினி தண்டகத்தின் தலைவனும் தலைவியும் ஆவர். இந்தச் சிங்க பூபாலன் போதனர், ஸ்ரீநாதர் ஆகியோருக்குச் சமகாலத்தவன் கோபாலக் கடவுளுக்காக எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொண்ட சிங்கபூபாலனைக் கண்ட ஒருத்தி அவன்மீது காதலுற்று அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருமாறு தன் தாயைத் தூண்டுகிறாள். 'சிங்கபூபாலன் நமக்கெட்டாத உயர் தகுதியுடையவன்; ஆதலின் அவனை அடையும் ஆசையை மறந்துவிடு' என்ற தாயின் சொற்கள் அவள் செவியில் ஏறவில்லை. மகளின் வற்புறுத்தலால் வேறுவழியற்ற தாய் சிங்க பூபாலனைக் கண்டு தன் மகள் அவன்பால் கொண்ட பெருங் காதலை எடுத்துக்கூறித் தன் மனைக்கு வருமாறு வேண்டுகிறாள். சிங்கபூபாலன் அவள் காதலை ஏற்றுக் கொண்டதோடு அமையாது, அக் கணிகைக்குப் 'போகினி' என்ற விருதையும் நல்குகிறான். இதுதான் இத் தண்டகத்தின் கதைச் சுருக்கம்.

'தண்டக' ஆசிரியர் போதனரே

"பகைவர் செருக்கை அடக்கியவனும் வள்ளற் பண்பு பொருந்தியவனும் ஆகிய சிங்கபூபால இராசனுக்குக் காணிக்கை

யாகப் 'போகினி தண்டக' என்ற நூலைப் புலவர் புகழும் பொற்புடைய பம்மெர போதனர் இயற்றியுள்ளார். 'ஞாலத்து விளங்கும் ஞாயிறும் திங்களும், பிற விண் மீன்களும், குவலயம் காக்கும் குலவரைகளும் நிலை பெறும் வரையில் இப்புலவரின் போகினி தண்டகமும் நிலைபெற்று நிற்கும்' என்னும் பொருள் தரும் பாடலொன்று இந்நூலின் இறுதியில் அமைந்துள்ளது. இதனால் இத்தண்டகத்தை இயற்றியவர் போதனர் என்பது தெளிவாகிறது. இப்பாடலில் அமைந்துள்ள ஈற்று மோனையும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஆனால் மானுடம் பாடுதலை வெறுக்கும் பண்புடையவரும் இறைவன் மீது இடையறாத பக்தியுடையவரும் ஆகிய போதனர், சிங்கபூபாலன் ஒரு பரத்தையின் மீது காதல் கொள்வதை விவரிக்க ஒரு தண்டகம் எழுதியிருப்பாரா என்று சில திறனாய்வாளர்கள் ஐயுறுகின்றனர். போதனர் ஒரு பெரும் பக்தராக இருந்து பாகவதத்தை இயற்றினார் என்பது உண்மையேயாயினும் தம் வாழ்க்கையில் தொடக்க காலத்திலேயே இவர் அப்படியிருந்திருப்பார் என்று கொள்ளத் தேவையில்லை.

பக்தராக இருப்பினும் போதனரும் ஒரு மனிதர்தான். எனவே தம் இளமைக் காலத்தே சிங்கபூபாலனின் ஆதரவையும் உதவியையும் பெற வேண்டி இத் தண்டகத்தைப் பாடியிருக்கலாம். நாளடைவில் குறிக்கோளும் குறைநயப்பும் மாறி ஆசைகளைத் துறந்து மன்னரைப் பாடுவதில் வெறுப்புற்றிருக்கலாம். மேலும் சிலர் எண்ணுவதுபோல் பக்தியும் காதலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. தாம் பக்தராக மாறியபின் இயற்றிய பாகவதத்திலேயே காதற்சுவை பொருந்திய பாடல்கள் பலவற்றைப் போதனர் பாடியுள்ளார். பத்தாம் காண்டத்தின் இறுதியில் அமைந்த தருமரின் இராசசூய வேள்விப் பகுதியில் வரும் மகளிர் வருணனையே இதற்குச் சான்றாகும். எனவே பிற்காலத்தே பெரும் பக்தராக விளங்கிய காரணத்தாலேயே போதனர் போகினி தண்டகத்தை இயற்றியிருக்க மாட்டார் என எண்ணுவது பொருந்தாது.

போகினி தண்டகத்தில் காணப்பெறும் ஈற்றுமோனை முதலிய சொல்லலங்காரங்களும், சில தேர்ந்த சொல் வழக்குகள் ஆகிய கவிதை நடைப் பண்புகளும் இவருடைய பாகவதத்திலும் காணப்படுகின்றன. இவ்விரு நூல்களுக்கிடையே நடையொப்புமையோடு சில கருத்து ஒப்புமைகளும் உள்ளன. சிங்கபூபாலன் தன் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டான்; மாரன் கணையால் மயங்கிய என் மனம் என்னிடம் மீளவில்லை. சிவன் பிரம்மா, ஏன் மன்மதன் போன்ற கடவுளர்களைக்கூட என் மனம

விரும்பவில்லை' என்று போகினி தன் தாயிடம் கூறுமிடத்துக் கீழ்வரும் உவமையைப் போதனர் பயன்படுத்துகிறார்.

மந்தார மலரை நுகரும் வண்டு ஊமத்தைப் பூவை மொய்க்குமோ? இதே உவமையைப் பிரகலாதன் வாயிலாகத் தம் பாகவதத்தே அமைக்கிறார் போதனர். சிங்க பூபாலனைக் கண்டு காதலுற்ற கணிகை அவன் பிரிவாற்றாது பின்வருமாறு இரங்கிக் கூறுகிறாள்;

> ''தாமரை மலராக பிறந்திருந்தால் சிங்கபூபாலனின் திருக்கரங்கள் என்னைத் தீண்டியிருக்கும்; மணியாரமாகப் பிறந்திருந்தால் அம் மன்னவனின் மணிமார்பை அணி செய்திருப்பேன். ஏன் பிறந்தேன் இவ்வாறு?''

இதே கருத்தமைந்த பாடல்கள் பாகவதத்திலும் கண்ணனைக் கண்டு காதலுற்ற பெண்கள இரங்கிக் கூறுவதாக அமைக்கப் பட்டுள்ளன. வேறொரு நூலின் பகுதியாக இன்றித் தனி நூலாகவே அமைந்திருப்பதும் பக்திப்பரவசத்திற்குப் பதிலாகக் காதற் சுவையால் நிறைந்த கதையமைப்பைப் பெற்றிருப்பதும் இப் போகினி தண்டகத்தின் தனிச்சிறப்புகள் எனலாம்.

பெண் வயிற்சேறல் பேதைமை என்றெண்ணிப் போகினியின் காதலை ஏற்கத் தயங்கினான் சிங்கபூபாலன். அவனைத் தெளிவித்தற் பொருட்டுப் போதனர் பாடியதாகக் கருதப்படும் பாடல் ஒன்று அச்சேறிய படியின் முன்னுரையில் காணப்படுகிறது.

> ''மாரனைப் போன்ற அழகுடைய சிங்கபூபாலனே, நல்லன நுகரும் நம்பி ஒரொருகால் மகளிர்க்கு மடங்குதல் மறுவன்று
> பூட்டும் நாணுக்குப பொருவில் வளைந்துகொடுப்பதில்லையா?''

என்பது அப்பாடலின் பொருள். இது போதனர் பாடல் என்பதற்குப் போதிய சான்றில்லாமையால் இப்பாடற் செய்தி எவ்வளவு தூரம் உண்மையென்று நமக்குத் தெரியவில்லை. இது உண்மையாயிருப்பின், போகினி தண்டகத்தின் ஆசிரியர் போதனரே என்ற கருத்தை இச்சான்று மேலும் வலுப்படுத்தும்.

நாராயண சதகம்

பாகவதத்தை இயற்றும் முன் நாராயண சதகம் என்னும் பக்தி நூலைப் போதனர் இயற்றினார் என்று கூறப்படுகிறது. 'தர சிம்ஹாசனமை' என்று தொடங்கும் புகழ் பெற்ற பாடல் இந்தச் சதகத்தில்தான் காணப்படுகிறது. தசரா நாட்களில்

கையில் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு செல்லும் போது சிறுவர்கள் இந்தப் பாடலைப் பாடுவர். இந்நூலில் அமைந்துள்ள பக்திச் சுவையினையும் தேனினும் இனிய தீஞ் சொற்பாடல்களை யும் துய்க்கும் எவரும் இதனைப் போதனரின் படைப்பு என்றே துணிவர். இதில் காணப்படும் தனித்த சில சொல்வழக்குகளும் புதுமையான சொற்கோவைகளும் இவருடைய பாகவதத்தில் உள்ளன.

''தர்மபுரியில் எழுந்தருளியுள்ள லட்சுமி நாராயணனே, நீ என்னைக் காப்பாய் என்ற நம்பிக்கையில் நான் பிறவி தொட்டே பல பாவங்களைச் செய்துள்ளேன். என்னைக் காப்பவன் நீ ஒரு வனே. எமன் கவராதவாறு என்னைக் காப்பாயாக. நின் கரு ணைக்கு நான் மிகவும் ஏற்றவனுவேன்'' என்று பொருள்படும் ஒரு பாடலின் இறுதியில் தர்மபுரி என்ற பெயரைக் கவிஞர் குறிப்பிடுகிமுர். எனவே கரீம் நகர் மாவட்டத்தில் உள்ள தரும புரியைச் சேர்ந்த பக்தர் ஒருவர் இதனை எழுதியிருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். செய்யுளாக முடியும் சதகநூல் வழக்குக்கு மாருக உரை நடை வடிவில் போதனர் என்ற பெயர் இச்சதக இறுதியில் காணப்படுகிறது. எனவே மேலும் வலுவான சான்றுகள் கிடைக்கும்வரை இந்த நாராயண சதகத்தைப் போதனர்தான் எழுதிஞர் என்று துணிய இயலாது.

இயல் மூன்று

ஸ்ரீமத் பாகவதம்

வியாச பாகவதம்

போதனரின் பெருபுகழுக்குக் காரணமாக இருப்பது அவருடைய ஆந்திர மகாபாகவதம்தான். இது சம்புவடிவில் வடமொழியில் அமைந்த பாகவதத்தின் தெலுங்கு மொழிபெயர்ப்பாகும். ஆன்மீகப் பேருண்மைகளை விளக்குவதாலும், சிறந்த கவிதை நடையினைப் பெற்றிருப்பதாலும் பதினெண் புராணங்களுள் ஸ்ரீமத் பாகவதமே சிறந்து விளங்குகிறது. சில திறனாய்வாளர்கள் பதினெண் புராணங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படுவது தேவி பாகவதம் என்றும்,இந்தப் பாகவதம் உபபுராணங்களுள் பதினேழாவதாக உள்ளது என்றும் கருதுகின்றனர். இந்தப் பாகவதத்தின் ஆசிரியரைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. பிற புராணங்களை இயற்றிய கிருஷ்ணத்வைபாயன வியாசரே இதனையும் இயற்றினார் என்பது பெரும்பான்மையான கருத்து. ஹேமாத்ரி அரசனின் அவைப் புலவரும் கோபால சமயத்தைச் சேர்ந்தவருமான போபதேவர் இதனை இயற்றினார் எனச் சிலர் கருதுகின்றனர். இன்னும் சிலர் வேதவியாசரின் ம ,ன் சுகமுனிவரே இதன் ஆசிரியர் என்றும், வேறு சிலர் வியாசர் என்னும பெயருடைய வேறொரு புலவர் இப் பாகவதத்தை இயற்றினார் என்றும் கருதுகின்றனர். பலவாறாகக் கூறப்படும் இக் கருத்துக்களுக்கு வலுவான சான்றுகள் இல்லை. வெறும் ஊகங்களாகவே உள்ளன. திறனாய்வாளர்களுள் பலர் கிருஷ்ணத்வைபாயன வியாசரே இதன் ஆசிரியர் என்று நம்புகின்றனர்.

இப் பாகவதம் எந்தச் சூழ்நிலையில் வியாசரால் இயற்றப்பட்டது என்ற செய்தி இந்நூலின் தொடக்கத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது. வேதங்களை நான்காகத் தொகுத்த பின்னர், வேதங்களைக் கேட்கத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்ட பெண்டிர், சூத்திரர், மூவருணத்தார் ஆகியோரின் நலன் கருதி மகாபாரதத்தைப் படைத்தார். உலக நன்மைக்குத் தாம் செய்த தொண்டுகளால் மனநிறைவுறாத வியாசர் சரஸ்வதி யாற்றின் கரையில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அப்போது அங்கு வந்த நாரதர் வியாசரின் கவலைக்கான கார

ணத்தை வினவினார். மூவுலகும் முக்காலமும் உணர்கின்ற அறி வினை உடைய நாரதரின் பெருமையைப் புகழ்ந்த வியாசர் அவரையே தம்கவலையின் காரணத்தை விளக்குமாறு வேண்டினார். அப்போது நாரதர், ''தர்மத்தின் கூறுகளையெல்லாம் புராணங் களில் விளங்க விவரித்துள்ள தாங்கள் திருமாலின் பெருமைகளைப் பேசவில்லை. தம் இறைமைப் பண்புகளைப் புகழாமல் வெறும் தர்மங்களை விளக்கிக் கூறுவதால் திருமாலின் உள்ளம் நிறைவுறாது. வியாசமுனிவரே தங்கள் கவலைக்குக் காரணம் இதுதான்'' என்று கூறி உலக பந்தங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் திருமாலின் திருவிளையாடல்களைப் பக்திச் சுவை குன்றாமல் பாடு வீராக என்று அறிவுறுத்தினார். இதற்கேற்ப வியாசர் பாகவ தத்தை இயற்றித் தம் மகன் சுகருக்கு அதனைக் கற்பித்தார்.

சமீகரின் மகன் சிருங்கியால் தனக்கு ஏற்பட்ட சாபத்தைக் கேள்வியுற்ற பரீட்சித்து அரசன் உலக இன்பங்களைத் துறந்து கங்கையாற்றின் கரையில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக் கச் சென்றான். இதனைக் கேள்வியுற்ற விசுவாமித்திரர், மைத்ரேயர், பிருகு, வசிஷ்டர் ஆகிய முனிவர் பெருமக்கள் தம் சீடர்களுடன் பரீட்சித்தைக் காண விரைந்தனர். அவர்களை வரவேற்றுச் சிறப்பு செய்த பரீட்சித்து தான் வீடு பேறு அடை யத்தக்க வழிகளைக் கூறுமாறு வேண்டினான். அவனுக்குத் தக்க வழிகளைக் கூற முனிவர் பெருமக்கள் சிந்தித்துக் கொண்டிருந்த போது சுக முனிவர் அங்கு வந்தார். அவரை வணங்கி வர வேற்ற பரீட்சித்து தன் வேண்டுகோளை அவருக்கும் தெரிவித் தான். அவனுடைய பணிவைக் கண்டு இரங்கிய சுக முனிவர் அவன் வீடு பேறு அடையத் தக்க வழியாக அவனுக்குப் பாகவ தத்தைக் கூறியருளினார்.

பாகவதத்தின் சிறப்பு

பாகவதம் என்றால் பகவானுடன் தொடர்புடையது என்று பொருள். அடைமொழியின்றிக் குறிக்கும் போது கீதை, சகஸ்ரநாமம், இராமாயணம் என்பன முறையே பகவத்கீதை யையும், விஷ்ணு சகஸ்ரநாமத்தையும் வான்மீகி இராமாயணத் தையும் குறிப்பிடுவதுபோல் பாகவதம் என்றாலே விஷ்ணு பாகவதத்தைத்தான் குறிக்கும். காயத்ரி மந்திரம், அயகிரீவ பிரம்மவித்யா ஆகிய இரண்டின் விரிவுரைதான் பாகவதம் என மத்ஸ்யபுராணமும், கருடபுராணமும், ஸ்கந்த புராணமும் கூறுகின்றன. பகவான் நாராயணனின் அவதாரச் சிறப்பு களையும் திருவிளையாடல்களையும் கூறுவதால் இந்நூல் பாகவதம்

என்று பெயர் பெற்றது. பொதுவாக எல்லாப் புராணங்களுமே பேருண்மைகளை விளக்குவனவாயினும் பாகவதம் இவ்வகையில் பெருஞ்சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. உலக பந்தங்களி லிருந்து விடுபட விரும்புவோர் சுகமுனிவர் கூறிய பாகவதத்தைப் படிக்க வேண்டும் அல்லது பிறர் கூறக் கேட்கவேண்டும் என்று பத்ம புராணத்தில் கௌதம முனிவர் அம்பரீஷனுக்கு உணர்த்து கிறார். பரீட்சித்து அரசன் தொடர்ந்து ஏழு நாட்கள் பாக வதத்தைக் கேட்டதனாலேயே வீடுபெற்றான் என்ற உண்மையே இந் நூலின் தனிப் பெருமைக்குச் சான்று பகர்கிறது.

இதனைப் பற்றிய கதை ஒன்று உண்டு; பரீட்சித்து அரசன் சுக முனிவரிடம் பாகவதம் கேட்க வந்த போது, இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுடைய தேவாமிர்தம் நிறைந்த குடங்கள் பலவற்றைக் கொண்டுவந்து சுகனிடம் கொடுத்து அவற்றைப் பரீட்சித்துக்கு அளித்துவிட்டு அதற்கீடாகப் பாகவதாமிர்தத்தைத் தங்கட்கு அளிக்குமாறு வேண்டினர். அவர்களுடைய பக்தி இன்னும் அதற்குரிய பக்குவ நிலையை அடையவில்லை என்று கூறிச் சுகமுனிவர் அவர்தம் வேண்டு கோளை மறுத்துவிட்டார் என்பது அக் கதை. பரீட்சித்து முக்தியடைந்த செய்தியைக் கேள்வியுற்ற பிரம்மா பாக வதத்தின் பெருமையைத் தக்க முறையில் சீர்தூக்கிப் பார்த்து பிற எல்லாவற்றையும்விடப் பாகவதத்தின் பெருமையே சிறந்தது என்று அறிவித்ததாக வரும் மற்றொரு கதையும் உலவுகிறது.

இக் கதைகள் கட்டுக்கதைகள் போலத் தோன்றினும் பாக வதத்தின் பெருமையை இவை தெளிவாகக் காட்டுகின்றன. கீதை, உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்றும் கைவராத ஞான வைராக்கிய பக்தி நிலைகள் பாகவதக் கதைகளைக் கேட்ப தாலேயே எளிதில் கைகூடும் என்று பத்ம புராணம் கூறுகிறது. இம்மை மறுமை இன்பங்களை ஒருங்கு அளிக்கும் பெருமை பாக வதத்திற்கு உண்டு. சாதி, சமயம், வயது, ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றி எல்லோரும் பாகவதத்தின் துணையால் இறையின்பமாகிய பேரின்ப நிலையை அடையலாம்.

புராண இலக்கணம்

பஞ்சலட்சணம் என்னும் சொல் புராணத்தின் இலக்கணம் கூறுவதோடு அமையாது அதன் பரியாயப் பெயராகவும் விளங்கு கிறது. ஒரு புராணத்தின் ஐவகைச் சிறப்புக் கூறுகளாகச் சர்கம் (படைப்பு), ப்ரதிசர்கம் (துடைப்பு), வம்சம் (அரச

பரம்பரை) மன்வந்தரங்கள் (மனுக்களின் காலம்), வம்சானு சரிதா (குலமரபு வரலாறு) ஆகியவற்றைக் கூறுவர். எல்லாப் புராணங்களிலும இவை அமைந்துள்ள காரணத்தால் அறிஞர்கள் புராணத்திற்குப் பஞ்சலட்சண இலக்கணத்தை வரையறுத்தனர். இவ் ஐவகைப் பண்புகளும் நிறைந்த ஒரு இலட்சியப் புராணமாகப் பாகவதத்தைக் கூறலாம். இதன் இரண்டாம் காண்டத்தில் உலகத் தோற்றமும், மூன்றும் காண்டத்தில் இயக்கர்கள் (யக்ஷர்கள்) பிற தேவர்களின் படைப்பும், ஒன்பதாம் காண்டத்தில் சந்திர சூரிய வம்சத்து அரசர்களின் குலமரபு வரலாறும், பன்னிரண்டாம் காண்டத்தில் நால்வகைப் பிரளயங்களின் இயல்பும் கூறப்படுகின்றன. இவை தவிர திருமாலின் அவதாரங்களும் இவ் அவதாரங்களுள் நிகழ்ந்த மனுக் காலங்களும் பாகவதத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சில தருமங்களை விளக்கவும் சில கொள்கைகளை வலியுறுத்தவும் ஆங்காங்கே கதைகளும் கிளைக் கதைகளும் கூட இதில் இடம் பெற்றுள்ளன. இப் பாகவதத்தின் பத்தாம் காண்டத்தின் பிற்பகுதியில் அமைந்த கதைக்கும் உத்தர அரிவம்சததில் உள்ள கதைக்கும் மிக நெருங்கிய ஒப்புமை காணப்படுகிறது.

இருவகை அவதாரங்கள்

பகவான் நாராயணனின் பத்து அவதாரங்களை நாடு நன்கறியும். இவ் அவதாரங்களின் முறை வைப்பு உயிர்களின் பரிணாம வளர்ச்சியைக் குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர். பாகவதத்தில் நாராயணப் பெருமானின் இருபத்தொரு அவதாரங்கள் பேசப்படுகின்றன. முதல் காண்டத்தில் முனிவர்க்குச் சௌதி கூறுவதாக உள்ள இருபத்தொரு அவதாரங்கட்கும் இரண்டாம் காண்டத்தில் பிரம்மா நாரதருக்குக் கூறுவதாக உள்ள இருபத்தொரு அவதாரங்கட்கும் இடையே முறைவைப்பு, பெயர்கள் ஆகியவற்றில் வேறுபாடு காணப்படுகிறது. இவற்றுள் சில அம்சாவதாரங்கள் எனவும் சில பூர்ணாவதாரங்கள் எனவும் கருதப்படுகின்றன. கிருஷ்ணாவதாரம் பகவானே என்றும் ஏனையவை எல்லாம் அம்சாவதாரங்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இக் கருத்தை அடியொற்றிக் கிருஷ்ணாவதாரம் முழு அவதாரமாகக் கருதப்படுகிறது. இதனால்தான் போலும் கண்ணனின் பிறப்பு, திருவிளையாடல்கள், வெற்றிகள் போன்றன மிக விரிவாகப் பத்தாம் காண்டத்தில் விளக்கப்படுகின்றன. பிற அவதாரங்கள் இறைவனின் அருட் செயல்களுக்கு ஏற்ப மிக விளக்கமாகவோ, சுருக்கமாகவோ பேசப்படுகின்றன.

பாகவத சாரத்தை நான்கே சுலோகங்களிற் சுருக்கிக் கூற முடியும் என்றும், அதில் பத்து வகைச் சிறப்புகள் அடங்கியிருக்கும் என்றும் இரண்டாம் காண்டத்தில் சுகமுனிவர் பரீட்சித்துக்குக் கூறுகிறார். அமரசிம்மனல் குறிக்கப் பெறும் சிறப்புகள் சில இதில் அடங்கியுள்ளன. சர்கம், விசர்கம், ஸ்தானம், போஷனம், உதிகள், மனுக்காலங்கள், ஈசானு சரிதை, நிரோதம் முக்தி ஆஸ்ரயம் என்பன இப்பத்து வகைச் சிறப்புக் கூறுகள். மஹத் அகங்காரம் தன் மாத்திரைகள் ஐந்து, ஐம்பூதங்கள், இந்திரியங்கள் ஆகியவற்றை இறைவனுள் காண்பது 'சர்கம்' எனப்படும். விராட புருடனில் இருப்பது பிரம்மா பிறப்பதும் அவனுல் அவ்வுலகப் பொருட்களும் உயிர்களும் படைக்கப்படுதலும் விசர்கமாக அமையும். தீயோரை அழித்து உலகைக் காக்கும் வைகுந்த நாதனின் வெற்றியைப் பேசுவது 'ஸ்தானம்' ஆகும். திருமால் பக்தர்களைக் காப்பது 'போஷனம்' ஆகும். மனத்தில் தன்னை யறியாது படிந்த இருவகை வினைகளின் முத்திரைகள் 'உதிகள்' எனப்படும். நாரணன் அருளால் உலகை ஆளும் ஆணைபெற்ற மனுக்களின் காலப் பிரிவுகள் அவதாரக் கதைகள், ஈசானு கதைகள் என்பன 'மனவந்தரங்கள்' எனப்படும். அரவணையில் திருமால் அறிதுயில் கொள்கையில் உயிர்கள் சலனமற்றிருக்கும், அப்போது நிகழும் பல்வேறு சூழல்கள் 'நிரோதம்' எனப்படும். இறைவடிவும் மணமும் கொண்டு உயிர்கள் அரியுடன் சேர்தலே முக்தியாகும். உலகத்தோற்றம், நிலைபேறு, அழிவு ஆகியவற்றுக்கு மூலகாரணமாக உள்ள பிரம்மம் அல்லது பரமாத்மா 'ஆஸ்ரயம்' எனப்படும்.

போதனரின் பாகவதம்

ஒரு நூல் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகியவற்ருேடு தொடங்க வேண்டும் என்பர் அணி இலக்கணவாதிகள். வடமொழிப் பாகவதம் 'ஜன்மாத்யாஸ்ய' என்னும் சுலோகத்துடன் தொடங்குகிறது. இதில் காயத்ரி மந்திரத்தில் உள்ள 'தீமஹி' என்னும் வினைச்சொல் அமைந்துள்ளமையால் அம் மந்திரத்திற்கு இணையானது பாகவதம் என்று கருதப்படுகிறது. இப் பாடல் பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் திறனுடைய பரம்பொருளைப் புகழ்கிறது. போதனர் இந்தச் சுலோகத்தை மொழியாக்கம் செய்து தம் நூலில் ஆண்டுள்ளார். ஆனல் அப்பாடலுக்கு முன்னர்த் தம்முடைய கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாகவதத்தின் முதற் பாடலாக வைத்துள்ளார்.

''வீடு பேறு அடைவான் வேண்டி நான் யசோதையின் குழந்தையைத் தொழுகிறேன். அவனே உலகங்களைப் புரப்பவன்; தன் பக்தர்களைக் காக்கும் கலையில் பெரு விருப்புடையவன்; அரக்கர்களின் அகந்தையை அழிப்பவன்; தன் விளையாட்டுப் பார்வையாலேயே உலகங்களைப் படைப்பவன்''

என்பது போதனரின் பாடற்பொருள்.

யசோதைக்கும் நந்தனுக்கும் குழந்தையாகப் பிறந்து பல அற்புத விளையாடல்களைச் செய்த கண்ணபிரானின் வாழ்த்தாக இது அமைந்துள்ளது. யசோதைக்கும் நந்தனுக்கும் பிறந்த குழந்தை என்ற தொடரால் பாகவதத்தின் உயிர்ப் பகுதியான பததாம் காண்டம் குறிக்கப்படுகிறது. இதுபோலவே இப்பாட்டில் அமைந்துள்ள பிற அடைமொழிகளும் பிறபகுதிகளைச் சுட்டுவனவாக உள்ளன. நாராயண பகவான் உலகைக் காத்தல் தொழிலிலேயே எப்போதும் ஈடுபட்டுள்ளார். தீய அரக்கர்களைக்கொன்று தம் பக்தர்களைக் காப்பதுதான் அவருடைய அவதாரங்களின் குறிக்கோள். இரணியகசிபு, கம்சன் போன்ற அரக்கர்களைக் கொன்று பிரகலாதன், அம்பரீஷன், கஜேந்திரன் போன்ற பக்தர்களைக் காத்தார் என்று பாகவதக் கதைகள் நமக்குக் கூறுகின்றன. மேற்காட்டிய பாடலில் உள்ள 'தன் பக்தர்களைக் காக்கும் கலையில் பெரு விருப்புடையவன்; அரக்கர்களின் அகந்தையை அழிப்பவன்' என்ற தொடர்கள் இதனைக் குறிக்கின்றன 'தன் விளையாட்டுப் பார்வையால் உலகங்களைப் படைப்பவன்' என்ற செய்தி சாந்தோக்கிய உபநிடதத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது. இரண்டாம் காண்டத்தில் விவரிக்கப் பட்டுள்ள பிரபஞ்ச உற்பத்தியை இது குறிப்பிடுகிறது.

இவ்வாறு இவ் வாழ்த்துப் பாடலில் அமைந்துள்ள அடைகளும் தொடர்களும் பாகவதக் கதைகளின் உட்பொருளைத் தம்முள் செறிவாகக் குறித்து நிற்பதைக் காணலாம். சுக முனிவர் பரீட்சித்துக்குக் கூறிய புராணச் சிறப்புக்களுள் சில இப் பாடலில் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளன. தம் நூற்பொருளைக் கூறுவதோடு தம் வழிபடு கடவுளையும் போதனர் இப்பாடலில் வணங்குகிறார். பிற கவிஞர்களும் தம் நூல் தொடக்கத்தில் தம்தம் கடவுளரை வாழ்த்துகின்றனர். ஆனால் போதனரின் கடவுள் வாழ்த்து இரண்டு சிறப்புக்களைப் பெற்றுள்ளது. ஒன்று தன் வழிபடு கடவுளை வணங்குவது; மற்றொன்று யாருக்

குத் தந்நூலை அர்ப்பணிக்கிருரோ அவருடைய பண்பு நலன் களைப் புகழ்வது. இம்முறையில் கண்ணபிரானே இவ்விரு செயல் கட்கும் உரியவராகிருர். இப்பாடலின் முதலடி கவிஞரின் உள்ள வேட்கையை வெளிப்படுத்துகிறது. உலக இன்பங்களைத் துவரத் துய்த்தற் பொருட்டுப் போதனர் இறைவனை வணங்கவில்லை. மாருக, வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோளாகிய கேவல நிலையை அடையும் தகுதியைப் பெறவே போதனர் கண்ணனை வழுத்துகிருர். இறைவனை வணங்குபவர்களும் அவனது திருவவதார விளையாட்டைக் கூறும் பாகவதத்தைப் படிப்பவர் களும் வீடுபேறு அடையும் தகுதியைப் பெறுவர் என்ற உண்மை யினையும் இப்பாடல் ஒருவாறு உணர்த்துகிறது.

இயல் நான்கு

போதனரின் மொழியாக்க முறைகள்

பிற தெலுங்கு மொழியாக்கங்கள்

தெலுங்கு இலக்கியத்தின் தொடக்க கால நூல்களில் பெரும்பாலன வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்பாகவே உள்ளன. வேறு பிற மொழிகளில் இருந்தும் தெலுங்குக்கு மொழிபெயர்த்துக் கொள்ளும் முயற்சிகள் அன்று தொட்டு இன்று வரை நடைபெற்ற வண்ணம் உள்ளன. எனினும் தெலுங்கு மொழியில் தோன்றும் முதனூல்களின் எண்ணிக்கையும் படிப்படியாக வளர்ந்து வருகிறது.

மொழியாக்கம் செய்யும்போது தெலுங்குக் கவிஞர்கள் மூவகையான முறைகளைக் கையாண்டுள்ளனர். அவையாவன: கதையை மொழிபெயர்த்தல், கருத்தை மொழி பெயர்த்தல், சொற்களை மொழிபெயர்த்தல் என்பன. இவற்றுள் முதலாவதான கதையை மொழிபெயர்ப்பது பெரும்பாலும் கதை தழுவலாக அமைவது. 'கவித்ரய' என்றழைக்கப்படும் முக்கவிஞர்களின் பாரத மொழியாக்கம் இவ்வகையைச் சார்ந்தது. நன்னயர், திக்கனர், எர்ரனர் ஆகிய இம் மூன்று கவிஞர்களும் வடமொழிப் பாரதத்தின் மூலக்கதையைத் தழுவிக் கொண்டனர். ஆயினும் தேவையற்றவை எனக்கருதிய பகுதிகளை நீக்கியும், தேவையெனக் கருதிய புதுப் பகுதிகளைச் சேர்த்தும், தம் மரபுக்குப் பொருத்தமற்றனவற்றை மாற்றியும் மொழியாக்கம் செய்துள்ளனர். எனவே இவர்களுடைய பாரதம் தெலுங்கு மொழியில் இயன்ற முதனூல் போலவே தோன்றுகிறது.

இரண்டாவது முறை, கருத்தை மொழியாக்கம் செய்வது. ஸ்ரீநாதரின் நைடத மொழியாக்கம் இவ்வகையைச் சேர்ந்தது. சில வடமொழிச் சுலோகங்களை இவர் மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டார் என்பதும் சில புதிய கருத்துக்களைத் தெலுங்குப் பாடல்களை இயற்றிச் சேர்த்துக் கொண்டார் என்பதும் உண்மைதான். ஆனால் இத்தகைய இடங்கள் மிகச் சிலவே. வடமொழி நூலில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் இவர் மொழிபெயர்க்கவில்லையாயினும் முதனூலின் கதைப்

பகுதியையோ இன்றியமையாத கருத்துக்களையோ இவர் விட்டு விடவில்லை. பொருத்தமின்மை கருதி மாற்றிய செய்திகள் சில உள. எனவே இவருடைய மொழியாக்கம் மூலத்தின்நேருக்கு நேரான மொழி பெயர்ப்பும் அன்று. மூலத்திலிருந்து மிக விலகி நிற்கும் தழுவலும் அன்று; மூன்றாவது முறை சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பது. இக்காலத் தெலுங்கு மொழி பெயர்ப்புகள் பல இவ்வகையைச் சார்ந்தனவாய்த் தோன்றுகின்றன. இத்தகைய ஆசிரியர்கள் மூல நூலின் கதை, கருத்து ஆகியவற்றை மட்டுமின்றி பல்வகைச் சொற்களையும் மொழிபெயர்க்கின்றனர். இவர்கள் மூல நூலை ஏறக்குறைய நேருக்கு நேர் மொழி பெயர்க்கின்றனர் எனலாம்.

போதனர் ஸ்ரீநாதரின் காலத்தைச் சேர்ந்தவர். முக்கவிஞர் களின் மொழிபெயர்ப்பு முறையையும் ஸ்ரீநாதரின் முறையையும் அவர் நன்கறிந்திருந்தார். அதனால்தான் போலும் இவருடைய பாகவதத்தில் அவ்விருவகை முறைகளும் கையாளப்பட்டுள்ளன. வடமொழி நூலில் வரும் ஒழுக்க விதிகள், தத்துவம், ஒழுகலாறு பற்றிய பகுதிகளையெல்லாம் முக்கவிஞர்கள் குறைத்து விட்டனர், அல்லது அறவே நீக்கிவிட்டனர். எனவே அவர்களுடைய மொழி யாக்கம் முதனூலில் பாதியாகச் சுருங்கிவிட்டது. பாகவத மொழியாக்கமோ முதனூலை விட இருமடங்கு பெருகிவிட்டது. இப் பெருக்கத்திற்குக் காரணங்களாவன:

(1) கடவுட் பண்புகளைப் புகழ்ந்து பேசும் பகுதிகள், பக்திச் சுவையை விளக்கும் பகுதிகள் ஆகிய இடங்களில் வரும் முதனூல் கருத்துக்களோடு தம்முடைய சொந்தக் கருத்துக்களையும் போத னர் சேர்த்துக் கூறுகிறார்.

(2) தத்துவார்த்தமான பகுதிகளை விளக்குமிடத்து ஸ்ரீதரரின் உரையில் கண்ட கருத்துக்களையும் சேர்த்துக் கூறுகிறார்.

(3) பொதுவான கதைகளைக் கூறுகையில் விஷ்ணுபுராணம் அரிவம்சம், நரசிம்ம புராணம் ஆகியவற்றில் உள்ள பகுதிகளையும் தம் மொழியாக்கத்தில் சேர்த்து அமைத்துக் கொள்கிறார்.

1 போதனர் விரித்தோதிய பகுதிகள்

நரசிம்ம புராணத்தின் பாடுபொருள் பிரகலாதன் கதை தான். எனவே பிரகலாதன் கதையைக் கூறுமிடத்து அப்புராணக் கருத்துகள் சிலவற்றைத் தம் நூலுள் சேர்த்துக்கொண்டுள்ளார். அவ்வாறே நரகாசுரன் கதையைக் கூறும்போது அரிவம்சம்,

விஷ்ணு புராணம் ஆகியவற்றின் கருத்துக்களை எடுத்துக்கொள்கிறார். இவ்விடத்தே மூலநூலில் இல்லாத சத்யபாமா—நரகாசுரன் போரை மிக விளக்கமாகக் கூறுகிறார். இவ்வகையில் நாசன சோமனருடைய உத்தர அரிவம்சத்தைப் போதனர் பயன்படுத்துவதைத் தெளிவாகக் காண்கிறோம்.

போதனர் பிற ஆசிரியர்களின் கருத்தை வாங்கித் தம் நூலில் ஆளும் பகுதி இது ஒன்றுதான். இந்திரன் வேண்டுகோளை ஏற்று நரகாசுரனின் தலைநகராகிய பிரக்ஜோதிஷ நகர்க்குக் கண்ணன் தன் மனைவியோடு கருட வாகனத்தில் சென்றான் என்று மட்டுமே வடமொழிப் பாகவதத்தில் காணப்படுகிறது. நரகனுடன் சத்யபாமா போரிடுவதாக உள்ள கிளைக்கதை இதில் காணப்படவில்லை. போதனர் இதனை மிக விளக்கமாகக் கூறுகிறார். நரகனுடன் போரிடக் கண்ணன் புறப்படும்போது சத்யபாமா தன்னையும் உடனழைத்துச் செல்ல வேண்டினாள் என்றும், முதலில் தடுத்தாலும் அவளுடைய வற்புறுத்தலால் பின்னர் அவளையும் அழைத்துச் சென்றான் என்றும் போதனர் கூறுகிறார். சத்யபாமா நரகாசுரனுடன் மிகவும் வீரமாகப் போரிடுகிறாள். கண்ணனுக்கும் நரகாசுரனுக்கும் நிகழ்ந்த உரையாடலும் வடமொழி மூலத்தில் காணப்பெறவில்லை.

II பிற நூல்களில் இருந்து வாங்காமல் போதனர் தாமாகவே விரித்தோதிய பகுதிகள்.

1. "பிரகலாதனைத் தன் மடி மீது இருத்திக் கொண்ட இரணியகசிபு ஆசிரியர்கள் அவனுக்குக் கற்பித்ததைக் கூறுமாறு கேட்கிறான். அப்போது 'ஸ்ரவணம்' முதலிய ஒன்பது வகைப் பக்தியைக் கற்றுக்கொண்டேன் எனப் பிரகலாதன் கூறுவதாக வடமொழிப் பாகவதம் கூறுகிறது. இவ் வினுவிடைப் பகுதியைப் போதனர் மிக விரிவாக்கிக் கூறுகிறார். அரியைப் பற்றிய புதுமையான கருத்துக்களை உனக்கு யாராவது கற்பித்தார்களா அல்லது உன்னுடைய சொந்தக் கற்பனையா என்ற ஆசிரியரின் வினுவிற்குப் பிரகலாதன் கூறும் விடையாக அமைந்த பாடலின் பொருள் பின் வருமாறு :

"மந்தார மலரின் மதுவின்பத்தில் திளைக்கும் தேனீ ஊமத்தைப் பூவை நாடிச் செல்லுமா?" இப்பகுதியில் அமைந்த பாடல்களும் கருத்தும் முற்றிலும் போதனரின் புதுப்புனைவாக உள்ளன.

2. கஜேந்திரனின் வேண்டுதலைக் கேட்டுப் பிரம்மன் முதலிய தேவர்கள் வாளா இருக்கவும், தன் பக்தனை முதலைவாயி லிருந்து காப்பாற்ற நினைந்தார் திருமால். இப்பகுதியை வட மொழிப் பாகவதம் பின் வருமாறு கூறுகிறது :

கஜேந்திரனின் வேண்டுதலைக் கேட்டதும் கருடன் மீதி வர்ந்து கஜேந்திரனிடம் வந்தார் திருமால். அவரைக் கண்ட கஜேந்திரன், "அன்பர்களைக் காக்கும் நாராயணா, உன்னை வணங்குகிறேன்" என்று கூறி துதிக்கையால் வணங்கியது. பின்னர்த் திருமால் தேவர்கள் காணத் தம் சக்கரப் படையால் முதலையின் தலையைக் கொய்து கஜேந்திரனை நீரினின்று வெளி யேற்றி அருளினார். இப் பகுதியைப் போதனர் பக்திச் சுவை நிறைந்த பத்துப் பன்னிரண்டு இனிய பாடல்களில் கூறுகிறார். விரிவும் இனிமையும பொருந்திய இப் பகுதி போதனரின் தனிப் பெரும் பக்திச் சுவையை நன்கு விளக்குகிறது.

3 பலியின் தேவருலகப் படையெடுப்பை வடமொழிப் பாகவதம் பன்னிரண்டு சுலோகங்களில் விவரிக்கிறது. இதனையே விரிந்த அளவில் சொல்லணிகள் மிக்க நீண்ட உரைநடையாக அமைத்து விளக்குகிறார் போதனர். மூல நூலில் இல்லாத பல செய்திகளைக் கொண்டிருத்தலால் இப் பகுதி பெரும்பாலும் போதனரின் சொந்தப் படைப்பாக உள்ளது. இவ் உரைநடைப் பகுதியைச் சில ஓலைச்சுவடிகள், சுவர்க்க வாணன வசனு" (வானுலகை வருணிக்கும் உரைநடை) எனத் தனித் தலைப் பிட்டுக் குறிக்கின்றன.

4 அதிதி என்பாள் பகவான் நாராயணனை மகவாகக் கருக்கொண்டிருந்தாள் என அறிந்த பிரம்மன் அவளைப் புகழ் வதாக மூல நூல் வாமனவதாரக் கதையில் கூறுகிறது. போத னரோ கருவுற்ற பெண்ணை வருணிக்கிறார். இவ் வருணனை இயற்கையோடு பொருந்தியதாகவும் போதனரின் வருணனைத் திறத்தை விளக்குவதாகவும் உள்ளது. மேலும் பிள்ளைமொழி பேசித் துள்ளி விளையாடும் குழந்தை வாமனனைக் கண்டு மகிழ்ந்த தாயாகிய அதிதியின் சொற்களையும் செயல்களையும் போதனர் பல பாடல்களில் வருணிக்கிறார்.

5. பலியினுடைய வேள்விச் சாலையில் நுழைந்து வாமனன் நிகழ்த்திய விளையாட்டுச் செயல்களையும், தன் கையை உயர்த்திப் பலியை வாழ்த்திய முறையினையும் போதனர் மிக விளக்கமாகக் கூறுகிறார். "ஓ, பிரம்மச்சாரியே, உம் பெயரென்ன ? நீர் யாருக்குச் சொந்தமானவர் ? உமக்கு என்ன வேண்டும் ?" என

வினவிய பலிக்கு வாமனன் அளித்த விடை பகவான் நாராயண னின் அளவிறந்த ஆற்றல்களைக் குறிப்பாகக் கூறுகின்றமை யால் மிக்க சுவையும் ஆழ்ந்த பொருளும் உடையதாய் இருக்கக் காண்கிறோம்.

6. கண்ணன், பலராமன் ஆகிய இருவருடைய பிள்ளைத் திரு விளையாடல்களையும், குறும்புகளையும் கோபியர் யசோதையிடம் கூறி முறையிடுவதாக வடமொழிப் பாகவதம், பத்தாம் காண் டத்தின் எட்டாம் அதிகாரத்தில் கூறுகிறது. இப்பகுதியைப் போதனர் மிகவும் விரித்துக் கூறுகிறார். கண்ணனின் குறும்பு விளையாட்டுக்களை அழகிய 'கந்த' யாப்பில் அமைத்துப் போதனர் பாடிய சுவைமிக்க பாடல்களை ஆந்திரர் எல்லோரும் நன்கறிவர்

7. பத்தாம் காண்டத்தின் முப்பதாவது அதிகாரத்தில் கண்ணனின் பிரிவால் வருந்தி அவனைத் தேடி அலையும் கோபியரின் செயல்களை மூலநூல் எடுத்துக் கூறுகிறது. இத் தொடர்பில் போதனர் தம் சொந்தக் கருத்துக்கள் பலவற்றைச் சேர்த்துப் படைத்துப் பாகவதத்தை மேலும் சுவைபடச் செய்துள்ளார்.

8. ருக்குமணியின் உறவினர்கள் அவளைக் கண்ணனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ருக்குமணி யின் சகோதரனான ருக்குமி என்பான் கண்ணனை வெறுப்பவ னாதலின் அவளைச் சிசுபாலனுக்குத் தர விரும்புகிறான். ருக்குமணி திருமணம் மூலநூலில் இவ்வாறு தொடங்குகிறது. இதனைக் கூறவந்த போதனர், ருக்குமணியின் குழவிப் பருவம், இளமை எழில் ஆகியவற்றை நான்கைந்து செய்யுளால் விவரிக்கிறார். இவ்வாறே கண்ணன் ருக்குமணி மீது கொண்ட காதலையும் குறிப்பிடுகிறார். கண்ணனுக்கு ருக்குமணி செய்தி யனுப்புவதாக உள்ள பகுதியில் போதனரின் சொந்தக் கருத்துக் கள் பல பொதிந்துள்ளன. இந் நூலின் சிறந்த பகுதிகளில் இதுவும் ஒன்று. ருக்குமணியின் ஒப்பற்ற அழகை ஓர் அந்தணன் கண்ணனிடம் புகழ்ந்து கூறுவதாக அமைந்த பாடற்கருத்தும் மூலநூலில் காணப்பெறவில்லை

இவ்வாறு மூலநூலில் உள்ள சுருங்கிய பகுதிகளைப் போத னர் விரித்தோதியும், இடத்திற்கேற்பப் பாடல்கள் பலவற்றைத் தாமே புனைந்தும் இயற்றிய இடங்கள் பல தெலுங்கு பாகவதத் தில் உள்ளன. இந் நூலின் தொடக்கத்தே உள்ள நைமிசாரண்

யம் பற்றிய வருணனையிலும், ஒன்பதாம் காண்டத்தில் கங்கை நிலவுலகிற்கு வருதலை விளக்கும் பகுதியிலும் ஆரவாரச் செல்லணிகள், சிலேடை முதலிய பொருளணிகள் என்பன செறிந்துள்ளன. இவை போதனரின் வருணனைத் திறத்தையும் ஆழ்ந்த புலமையையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

III. ஸ்ரீதரரின் உரையைத் தழுவி அமைந்த பகுதிகள்

அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் மூவகைச் சமயக் கோட்பாடுகளைத் தழுவிப் பல அறிஞர்கள் பாகவதத்திற்கு உரை வகுத்துள்ளனர். அவற்றுள், அத்வைதக் கோட்பாட்டிற்கேற்ப ஸ்ரீதரரால் எழுதப்பட்ட 'பாகவத பாவார்த்த தீபிகை'தான் மிகவும் புகழ் வாய்ந்தது. மூல பாகவதத்தின் பொருள் விளங்காப்பகுதிகளை மொழிபெயர்க்கும் போது போதனர் இவ்வுரைத் தொடர்களையே மொழியாக்கம் செய்து அமைத்துக் கொண்டுள்ளார். பெரும்பாலும் தத்துவத் தொடர்பான பகுதிகளுக்குத்தான் போதனர் இவ்வாறு உரையையே மொழியாக்கம் செய்துள்ளார்.

1. முதல் காண்டத்தில் அருச்சுனனால் துரத்தப்பட்ட அசுவத்தாமன் 'உருத்திரனுக்கு அஞ்சி ஓடிய பிரம்மாவைப் போல்' ஓடினன் என்று மூல பாகவதம் கூறுகிறது. இப் பகுதிக்கு உரை வகுத்த ஸ்ரீ தரர், 'மானாக மாறித் தன் மகளுடன் விளையாடக் கருதியே பிரம்மன் உருத்திரனுக்கு அஞ்சி ஓடி விட்டான்' என்று கூறுகிறார். இவ்வுரைப் பகுதியைப் போதனர் முழுவதுமாக மொழி பெயர்த்துக் கொண்டார்.

2. ஆவரணம், பூதம், ஆஸ்வாயனம், குணம் போன்றவற்றை வடமொழிப் பாகவதம் சப்தாவரணங்கள், ஐம்பூதங்கள் என்று தொகைப்படுத்திக் கூறுகிறது. இவற்றிற்கு ஸ்ரீதரர் அமைத்த உரையின் துணைகொண்டு போதனர் இவற்றை மிக விளக்கமாகத் தம் நூலுள் கூறுகிறார்.

3. இரண்டாம் காண்டத்தில் பிரம்மன் இவ் உலகத் தோற்றத்தைப்பற்றி நாரதருக்கு விளக்குவதாக அமைந்த வடமொழிச் சுலோகமாவது,

> த்ரவ்யம் கர்ம ச காலஸ்ச் ச ஸ்வபாவோ ஜீவ ஏவச
> வாசுதேவாத் பரோ ப்ரஹ்மன் ந சான்யோ ருதோ அஸ்தி
> தத்வதஹ (2-5-14).

இச்சுலோகத்தில் வரும் 'த்ரவ்யம்', 'கர்ம', 'கால', 'ஸ்வபாவா' போன்ற சொற்களின் பொருளை உரையின் துணைகொண்டு போதனர் மிகவும் விரிவுபடுத்திக் கூறியுள்ளார்.

4. பத்தாம் காண்டத்தின் முற்பகுதியில் கவியணின் மனைவியர் கண்ணனைப் பல சுலோகங்களில் புகழ்கின்றனர். இவற்றுள் முதல் சுலோகத்திற்கு ஸ்ரீதரர் மிக விரிவாக உரை எழுதியுள்ளார். இவ்விளக்கவுரையை அடிப்படையாகக் கொண்டு போதனர் மேற்கூறிய சுலோகங்களை விரித்து ஓதியுள்ளார்.

IV மூலத்தில் உள்ள சில எளிய சொற்கள் ஆழ்ந்த பொருள்தருமாறு போதனர் உரையின் துணையின்றித் தாமே விரித்தோதிய பகுதிகள்.

1. முதல் காண்டத்தில் குந்தி புகழ்வதாக வரும் சுலோகம் பின்வருமாறு:

விஷான் மஹாக்னேஹ் புருஷாத தர்ஷனாத்
அசத் சபாயஹ் வனவாச க்ருச்சரத்
ம்ருதே ம்ருதே அநேக மஹா ரதாஸ்த்ர தோ
த்ரௌண்யஸ்த்ரத ஸ்சாஸ்ம ஹரே அபிரக்ஷிதாஹ
(1-3-24)

இதன் பொருளாவது:

நஞ்சு, தீ, அரக்கர்களின் பார்வை, சூதாடுவோர் ஆகியோரிடம் இருந்தும், வனவாசத் தொல்லையில் இருந்தும், வீரர்களின் கணைகளிடமிருந்தும், அசுவத்தாமனின் பிரம்மாஸ்திரத்திடமிருந்தும் நாங்கள் காப்பாற்றப்பட்டுள்ளோம்.

இச் சுலோகத்தின் ஒவ்வொரு சொல்லையும் போதனர் ஒவ்வொரு செய்யுளாக விரித்துப் பாடியுள்ளார். 'ஜதுகிரிஹத்' என்ற தொடரை விரித்து, "அரக்கு மாளிகையில் மடிந்து போகாதவாறு என்னையும் என் மக்களையும் காப்பாற்றினாய்" என்று பாடியுள்ளார்.

2. வீடுமன் கண்ணனைப் புகழ்ந்து பாடுவதாகப் பல சுலோகங்கள் முதல் காண்டத்தில் வருகின்றன. அவற்றுள் ஒன்று கீழ் வருமாறு:

ஸ்வுதிகடம் அபஹாய மத்ப்ரதிக்ஞாம்
ருதம் அதிகர்த்தும் அவப்லுதோ ரதஸ்தஹ
த்ருத ரத சரணோ அப்யயாச் சலத்குர்
ஹரி ரிவ ஹந்தும் இபம் கதோத்ரீயஹ (1-9-37)

இதன் பொருளாவது :

தன்னுடைய சூளுரையை மறந்து, என்னுடைய சூளுரையை மெய்பிக்கத் திருவுளங்கொண்டு அமர்ந்திருந்த தேரை விட்டுச் சக்கரப் படையுடன்நீங்கி, நிலம் நடுங்க மேலாடை நழுவுவதும் அறியாது, யானையைக் கொல்ல முயலும் சிங்கம் போன்று என்னைத் தாக்கிய முகுந்தனே எனக்குத் துணையாவான். இந்தச் சுலோகத்தின் சொற்கள் சிலவற்றை நீக்கிவிட்டுத் தாமாகச் சிலவற்றைச் சேர்த்துக் "குப்பிஞ்சி எகசின குண்டலம்புல காந்தி" எனத் தொடங்கும் புகழ்பெற்ற 'சிசாப்' பாடலாக யாத்துள்ளார்.

V ஒரு சில இடங்களில் மூல பாகவதத்தில் விரிவாக உள்ள வற்றைப் போதனர் சுருக்கியும் அமைத்துள்ளார்.

1. வாமன சரிதத்தில் தம் குரு பிரகஸ்பதியின் அறிவுரைப் படி அரக்கர்கள் தாம் கைப்பற்றிய தேவர் தலைநகரை நீத்து வேறிடத்தில் ஒளிந்து கொண்டனர். தன் மக்களின் துயரத்திற் காக அதிதி வருந்திக் கொண்டிருந்தாள். கசியப்ப முனிவர் அவளைக் கண்டு நலம் விசாரித்தார். இவ்விடத்தில் அவள் கூறும் செய்தியை மூல பாகவதம் மிக விரிவாகக் கூறுகிறது. போதனர் மிகச் சுருக்கமாக "நான் என்னவென்று கூறுவேன்? திதியின் மக்களும் அவர்தம் மக்களும் சிறிதும் அன்பின்றி என் மக்களை விரட்டிவிட்டு அமராவதியை ஆள்கின்றனர்" என்று கூறித் தன் மக்களை வாழ்த்துமாறு வேண்டுவதாகக் கூறுகிறார்.

2. கசியப்ப முனிவர் கடவுளை வழிபட்டு அவன் அருளைப் பெறுமாறு அதிதிக்குக் கூறுகிறார். வழிபாட்டின் விவரத்தையும் அதற்குரிய மந்திரங்களையும் தனக்குக் கூறுமாறு அவள் அவரை வேண்டுகிறாள். முனிவர் கூறிய உண்ணாநோன்பையும், அதனை இயற்றும் முறையையும் மூல நூல் 40 சுலோகங்களில் விவரிக் கிறது. இவ் விவரங்களையெல்லாம் விடுத்துப் போதனர் சுருக்க மாக, இயற்ற வேண்டிய நோன்பு, மந்திரங்கள், தானங்கள் போன்றவற்றை மட்டும் கூறிச் செல்கிறார். இப் பகுதி விரதம் முதலிய விவரங்களால் சுவையற்று வறட்சியாய் இருந்தமையால் போதனர் இதனைச் சுருக்கினார் எனக் கொள்ளலாம்.

3. அதிதியின் உண்ணா நோன்பைக் கண்டு மகிழ்ந்த திருமால் அவள் முன் எழுந்தருளினார். அவரைப் பலவாறாகப் புகழ்ந்து ஏத்திய அதிதி தன் மக்களின் துயரைத் துடைக்குமாறு வேண்டுகிறாள். தானே அவளுக்கு மகனாகத் தோன்றித் துயர் நீக்குவதாக ஆறுதல் கூறுகிறார். வடமொழிப்பாகவதம் இதனை எட்டுச் சுலோகங்களில் விவரிக்கிறது. போதனார் இச் சுலோகங்களின் கருத்தை மட்டும் சுருக்கி மொழி பெயர்க்கிறார்.

VI தகுதி கருதிப் போதனர் செய்த மாற்றங்கள்

1. பக்தி மார்க்கம் ஏனை இரண்டினும் சிறந்தது என்று சுகமுனிவர் பரீட்சித்துக்குக் கூறுகிறார். இதனை மூலநூல், இறைவனுடைய தொண்டரடிப் பொடியைத் தொட்டு வணங்காதவன் 'நடைப்பிணம்' என்றும், திருமாலின் திருப் பாதங்களில் இருக்கும் திருத்துழாய் மாலையை முகராதவன் 'உயிர்ப்பிணம்' என்றும் கூறுகிறது. இரண்டும் ஒரே வகை உவமையாய் அமைந்திருக்கும் பொருத்தமின்மை கருதிப் போதனர் அதனை "திருமாலைப் பரவாத கைகள் பிணத்தின் கைகள்" என்றும், "அவன் திருத்துழாய் மாலையின் மணத்தை முகராத மூக்கு 'பன்றியின் மூக்கு' என்றும் மாற்றிப் பாடியுள்ளார்.

2. வாமனனுக்கு மூன்றடி நிலம் தர பலிமன்னன் உடன்பட்டபோது சுக்ர முனிவர் பலியை நோக்கி, "ஓ, மூடனே, எல்லாவற்றையும் திருமாலுக்கு அளித்து விட்டு நீ எவ்வாறு வாழ்வாய்" என்று கூறுவதாக வடமொழிப் பாகவதம் கூறுகிறது. 'மூடனே' என்ற விளி பொருத்தமற்றது எனக் கருதிய போதனர் அதனைத் தம் மொழிபெயர்ப்பில் இடம்பெறாமல் நீக்கிவிட்டார்.

3. பலியரசன் தேவர் மீது படையெடுத்தான். அப்போது பிருகு முனிவர் அளித்த தேரின் மீது ஏறிச்சென்றான். இக் காட்சியை வருணிக்குமிடத்து, யாககுண்டத்தில் ஒளிரும் தீயாக அவனை உவமிக்கிறது மூலபாகவதம். போதனர் இவ் உவமையை மாற்றி, 'அரக்கர் கோன் மலைமுகடு இவர்ந்த மாபெருந் தழல்' என்று கூறுகிறார். தேரின் மேலிருக்கும் ஒருவனுக்குக் குண்டத்தின் உள்ளிருக்கும் ஒருபொருளை உவமிப்பது பொருத்தமற்றது எனப் போதனர் உணர்ந்திருக்கலாம். மேலும் போதனருடைய உவமை பலியின் வீரத்தை நன்கு விளக்குவதையும் காணலாம்.

VII போதனரின் சொந்தக் கருத்தமைந்த இடங்கள்

ஒரு தெலுங்குப் பாடலை முற்றுவிக்கும் அளவுக்கு வட மொழிச் சுலோகத்தின் கருத்து போதுமானதாக இல்லாத விடத்துப் போதனர் தம் கற்பனையைப் பயன்படுத்திச் சில கருத்துக்களைச் சேர்த்து அப்பாடலை முற்றுவிப்பார். 'கோபியர் கீதங்கள்' என்ற பகுதியில், கண்ணனால் தாம் பெற்ற நன்மைகளை எண்ணிப் பார்க்கும் போது, ''நஞ்சு கலந்த பொய்கைகள், அசுரர்கள், புயல், நெருப்பு போன்ற பல பேராபத்துக்களில் இருந்து எங்களைப் பலமுறை நீ காப்பாற்றி அருளினாய்'' எனக் கோபியர் கூறுகின்றனர். இதைப் போதனர், ''நச்சுப் பொய்கைகள், அசுரர்கள் கல்மாரி, நெருப்பு போன்ற பல அபாயங்களில் இருந்து காப்பாற்றிய நீ இறுதியில் எங்களைக் காமனின் தீக்கு இரையாக்குவது தகுமா'' என்று மொழியாக்கம் செய்துள்ளார். இதில் வடமொழிச் சுலோகத்தின் கருத்தைத் தெலுங்குப்பாடலின் முதல் மூன்று அடிகளில் வெளிப்படுத்தி எஞ்சியுள்ள நான்காவது அடியை, ''கொடிய பல ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றிய எங்களை மலரம்புகளை ஏந்தி நிற்கும் மன்மதனுக்கு இரையாகுமாறு விட்டுவிட்டாய்'' என்று பொருள்படுமாறு தம் சொந்தக் கருத்தைச் சேர்த்து மொழிபெயர்த்துள்ளார். இக் கருத்து மூலநூலின் கருத்திற்கு அணி செய்வதோடு அதன் பொருளுக்குப் பொலிவூட்டுவதையும் காண்கிறோம். தெலுங்கு பாகவதத்தின் பல பாடல்கள் இவ்வாறு முற்பகுதி மூலநூல் கருத்தையும் பிற்பகுதி அல்லது இறுதியடிகள் போதனரின் சொந்தக் கருத்தைக் கொண்டும் முற்றுப்பெற்றுள்ளன.

VIII மூலநூலின் கருத்திற்கொப்பப் போதனர் மொழியாக்கம் செய்த பகுதிகள்:

மேலே காட்டிய பகுதிகளால் எல்லா இடங்களிலுமே போதனர் இவ்வாறு சுருக்கியும் விரித்தும் மாற்றியும் மொழியாக்கம் செய்துள்ளார் என்று கருதிவிடக் கூடாது. தம் காலத்தவராகிய ஸ்ரீநாதரைப் போன்றே மூல நூலுக்கு முற்றிலும் பொருந்துமாறு போதனரும், மொழிபெயர்த்த இடங்கள் பல உண்டு. கீழ்வரும் பகுதிகளைச் சான்றாகக் கூறலாம்.

ஸ்ரீயஃபதிர் யக்ஞபதிஃ ப்ரஜாபதிர்
தியாம்பதிர் லோகபதிர் தராபதிஃ
பதிர்கதிஸ் சந்தக வ்ருஷ்ணி சாத்வதாம்
ப்ரசீததாம் மே பகவான் சதாம்பதிஃ. (2-4-20)

இச் சுலோகத்தைத், ''திருமகள் கேள்வனும், வேள்வித் தலைவனும், மக்கள் இறைவனும், அறிவின் தலைவனும், உலகங்களின் தலைவனும், நிலமகளின் தலைவனும், இடையர் தம் இறையும், என்னுடைய புகலிடமும் ஆகிய அருந்திறல் இறைவனை நான் தொழுகிறேன்'' (2–65) எனப் போதனர் மூலநூற்பொருள் முழுதும் வெளிப்படுமாறு மொழிபெயர்த்துள்ளார்.

2. யதா ப்ராம்யத்யயோ ப்ரஹ்மன்
ஸ்வய மாகர்ஷ சந்நிதௌ
ததா மே பித்யதே சேதஹ்
சக்ரபாணேர் யத்ரிச்சய (7-5-14)

இவ் வடமொழிப் பாகவதச் சுலோகத்தைப் போதனர், ''ஓ, அந்தணர் செம்மலே, காந்தத்தால் சுண்டி விதிர்த்து இழுக்கப்படும் இரும்பு போல என் மனமும் சக்ரபாணியைச் சுற்றிச் சுண்டி இழுக்கப்படுகிறது'' (7–141) எனப்போதனர் மூலநூலின் உவமைச் சிறப்பை அதன் சுவை குன்றுது திறம்பட மொழிபெயர்த்நள்ளார்.

IX மூலத்தோடு ஒன்றுத பகுதிகள்

ஏதேனும் ஒரு நோக்கம் கருதியோ அல்லது பிழையாகவோ மூல நூலிலிருந்து வேறுபடும் வகையில் போதனர் சில இடங்களை மொழிபெயர்த்துள்ளார்.

1. ய யதேன புமாந் நித்யம்
ஸ்துத்வா ஸ்தோத்ரேண மாம் பஜத்
தஸயான்வஹம் ப்ரஸீதேயம்
ஸர்வ காம வரேஸ்வரஹ. (3–9-40)

மூல பாகவதத்தின் இந்தச் சுலோகத்தைப் போதனர், ''தன் தோத்திரத்தால் என்னைப் புகழும் தொண்டர்களின் விருப்பங்களையெல்லாம் மகிழ்ந்து நிறைவேற்றுவேன்'' என்று மொழியாக்கம் செய்கிருர். ''ஸர்வகாம வரேஸ்வரஹ'' என்னும் மூலநூல் தொடருக்கு ஸ்ரீதரர், ''எல்லா ஆசைகளையும் தந்து'' எனப் பொருள் கூறினர். போதனரோ, ''எல்லா ஆசைகளையும் அடைந்து'' எனப் பொருள்படுமாறு மொழிபெயர்த்தமை மூலத்தோடு மாறுபடுகிறது.

2. வயம் வ்ரதைர் யச்சரணபவித்தாம்
ஆஸாஸ்மஹே அஜாம் பத புக்தபோகம். (3–14–26)

இந்தச் சுலோகத்தில் உள்ள 'சரணுபவித்தாம்' என்னும் தொடருக்கு ஸ்ரீதரர், "காலால் சற்றுத் தொலைவில் எறியப்பட்ட" என்று உரை வகுத்தார். போதனர் இதற்குக் 'காலில் பிறந்த' என மொழிபெயர்த்துள்ளார். இம் மொழிபெயர்ப்பு மூலத்தோடு மாறுபடுகிறது

3. மனஸஸ் சந்த்ரமா ஜாதோ
புத்திர் புத்தேர் கிராம்பதிஹ
அகங்கா ரஸ்த்தோ ருத்ரஸ்
சித்தம் சைத்யஸ் ததோ அபவத் (2-26-61)

இந்த மூல பாகவதச் சுலோகம், "ஹ்ருதயத்தில் இருந்து மனமும், மனத்தில் இருந்து சந்திரன், புத்தி என்பனவும், புத்தியிலிருந்து பிரம்மனும், அகங்காரத்தினின்று ருத்ரன், சித்தம் என்பனவும், சித்தத்தில் இருந்து சைத்யமும் பிறக்கின்றன" என்று கூறுகிறது. போதனரின் மொழிபெயர்ப்போ சித்தத்தில் இருந்து பிரம்மம், சைத்யம் ஆகிய இரண்டும் பிறப்பதாகக் கூறுகிறது.

4. "சலத்ய் அசக்தோ அபி நிராஸ்ரமோதகே" (3-30-22) என்னும் வடமொழித் தொடரில் உள்ள 'நிராஸ்ரமோதகே' என்னும் கூட்டுப் பெயர், 'தப்தவாலுகே 'பதி' என்னும் தொடருக்கு அடையாக வருகிறது. இவை முறையே, 'நீரோ தங்கும் இடமோ இல்லாதது,' 'சுடுகின்ற மணல்வழியில்' என்று பொருள்படும். இதனைப் போதனர், "ஆதரவற்ற நீரில் நீந்தியும் மிதந்தும்" என்று பொருள்படுமாறு மொழிபெயர்க்கிறார். இப்பொருள் மூலநூற் கருத்தோடு மாறுபடுகிறது.

பாடபேதங்களின் காரணத்தாலும், தவறுதலாகவும் இத்தகைய வேறுபாடுகள் விளைந்துள்ளன. அருகிக் காணப்படும் இவற்றை நீக்கி மொத்தமாகப் பார்க்குமிடத்துப் போதனரின் மொழியாக்கம் அறிஞர்க்கும் பிறர்க்கும் பெருமகிழ்வும் இனிமையும் அளிக்கும் பயனுடைய படைப்பாக இருக்கக் காணலாம்.

இயல் ஐந்து

பாகவதத்தில் அமைந்த கதைகளும் துணைக்கதைகளும்

ஆக்யானமும் உபாக்யானமும்

நேரிற்கண்ட நிகழ்ச்சியை ஒருவர் பிறர்க்குக் கதையாகக் கூறுவது ஆக்யானம் என்றும், பிறரிடம் கேட்டு அறிந்த ஒருவர் அதனைக் கதையாகப் பிறர்க்குச் சொல்வது உபாக்யானம் என்றும் வரையறுப்பர். சுக முனிவர் பரீட்சித்து அரசனுக்குக் கூறிய பாகவதக் கதையைச் சூதர் பிற முனிவர்களுக்குக் கூறினர். பாகவதக் கதை நிகழ்ச்சிகளைச் சுகரோ சூதரோ நேரில் நடந்த போது கண்டதில்லை. இருவரும் பிறரிடமிருந்தே அதனைக் கேட்டறிந்தனர். எனவே பாகவதம் முழுவதையுமே உபாக்யானம் என்று தான் கருதவேண்டும். பெரிய கதை ஒன்றைச் சொல்லும் போது இடையிடையே சிறுசிறு துணைக்கதைகளைச் சொல்லும் மரபும் உண்டு. இத்துணைக்கதையும் உபாக்யானம் என்று பெயர் பெறும். திருமாலின் பல்வேறு அவதாரங்களைப் பற்றிக் கூறுவது பாகவதத்தின் பெருங்கதை அல்லது தலைமைக்கதை என்றும், இத் தலைமைக் கதைக்கு இடையில் இங்குமங்குமாகக் கதைப்பொருத்தம் கருதிக் கூறப்படும் சிறு கதைகள் உபாக்யானங்கள் என்றும் கருதப்படுகிறன என அறிகிறோம். உபாக்யானங்களிலும் திருமால் வருவதாகக் கதைகள் அமைக்கப்படினும் திருமாலின் அவதார நோக்கம் அதுவன்று. இவ்வாறு காணுமிடத்துத் துருவன், கஜேந்திரன், குசேலர் போன்றோருடைய கதைகள் உபாக்யானங்களாகவே கொள்ளத்தக்கன என்பது தெளிவாகிறது.

பாகவத நோக்கம்

இறைவனின் தலைமைச் சிறப்பை உணர்ந்து அவன் புகழைப் பாடிக் களிக்கும் பக்தி மார்க்கத்தால் முக்தி அடைய முயல வேண்டும். இம்முயற்சிக்குரிய இறைப்பற்றைப் படிப்போர் உள்ளத்தே தோற்றுவிப்பதுதான் பாகவதத்தின் தலையாய நோக்கம். இறைவனிடத்தே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு தன்னைத் தொழுவோர்க்கு இறைவன் அருள் செய்கிறான் என்பதில் ஐயமில்லை. இத்தகைய நம்பிக்கையைக் கற்போர் உள்ளத்தில் ஒரு சிறிதாவது பாகவதம் தவறாது தோற்றுவிக்கும். உலகைத்

துன்புறுத்தும் அரக்கர்களையும் தீயோரையும் அழித்து நல்லோரைக் காத்து உலகை மேம்படுத்த இறைவன் திரு அவதாரம் செய்வார்.

> "பரித்ராணாய சாதூநாம் விநாஸாய ச துஷ்க்ருதாம்
> தர்மஸம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே"

என்னும் கீதையின் சுலோகம் இவ் உண்மையைத் தெளிவாக்குகிறது.

எனவே இறைவனுடைய அவதார நோக்கம் அறத்தை நிலை நிறுத்துவதோடு மட்டும் நில்லாது நல்லோரையும் பக்தர்களையும் காப்பதாகவும் அமைந்துள்ளது. மீமானுடத் தன்மையனாதலின் இறைவனின் அவதார நிகழ்ச்சிகள் பல உலகியல் தருக்க முறைப்படி இயற்கையிறந்தனவாகவும் தொடர்பற்றனவாகவும் தோன்றலாம். பக்தியின் சிறப்பையும், அடியாரைக் காத்து அருள் செய்ய வேண்டும் என்னும் இறைவனின் திருவுள்ளத்தையும் அவனது வரம்பில் ஆற்றலையும் கற்போர்க்கு உணர்த்தவே இவையெல்லாம் இயற்றப்பட்டுள்ளன, வெறும் கலையழகுக்காக மட்டும் இயற்றப்படவில்லை என்பது உளங்கொளத் தக்கது. சமயப் பரப்புதலுக்கும் நீதிகளைப் புகட்டுவதற்கும் கலை துணை செய்கிறது. எனினும் கவிஞனின் கவிதைத் திறத்தால் கதையைச் சுவைபடக் கூறுதல் போன்ற சிறப்புகள் பல இதனுள் சிறந்து விளங்கக் காண்கிறோம்.

வராக அவதாரம்

இறைவன் எடுத்த இருபத்தோர் அவதாரங்களுள் வராக அவதாரமும் ஒன்று. கடலுள் அமிழ்ந்து கிடந்த நிலவுலகை அதனின்று மீட்பதற்காகத் திருமால் பன்றியுருவத்தில் தோன்றுகிறார். செருக்குற்ற இரணியாக்கனைக் கொன்றொழிப்பது இவ் அவதாரத்தின் மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி. தனக்குச் சமமாகப் போரிடக் கூடிய வீரன் ஒருவனை உலகெங்கும் தேடியும் காணாத இரணியாக்கன் வருணனிடம் செல்கிறான். வைகுந்தத்தில் இருக்கும் முகுந்தன் ஒருவன்தான் அவனுக்கு இணையான எதிரி என்று வருணன் அவனுக்குக் கூறுகிறான். முகுந்தனைத் தேடி வைகுந்தம் செல்லும் வழியில் நாரதர் எதிர்ப்பட்டு முகுந்தன் வராக வடிவம் கொண்டு ரசாதல உலகில் இருப்பதாக அறிவிக்கிறான். இரணியாக்கன் ரசாதலம் சென்று வராகத்துடன் போரிடுகிறான். வராகன் அவனைக்கொன்று உலகைத்

கடலினின்று மீட்டுக் காப்பாற்றுகிறான். செருக்கும் இறுமாப்பும் ஒருவனுக்கு அழிவைத் தரும் என்பதை இரணியாக்கனின் கதை தெளிவாகக் காட்டுகிறது. முதலில் சுருக்கமாகவும் பின்னர் மிக விளக்கமாகவும் மூன்றாம் காண்டத்தில் இருமுறை இக்கதை கூறப்படுகிறது.

நரசிம்ம அவதாரம்

திருமால் நரசிம்மாவதாரம் எடுத்த கதை ஏழாம் காண்டத்தில் மிகவும் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. பிரம்மாவிடம் பெற்ற வரங்களினால் மிகவும் செருக்குற்று இருந்த இரணியகசிபுவை நரசிம்மம் கொன்று விடுகிறது. தன் சகோதரன் இரணியாக்கனைக் கொன்றதாலும், தனக்கெதிராக நின்ற தன் மகன் பிரகலாதனைக் காப்பாற்றியதனாலும் இரணியகசிபு அரியின் மீது வெறுப்புற்று இருந்தான். எவ்வளவு வல்லமை படைத்தவர்களாயினும் பக்தர்களைத் துன்புறுத்த இயலா தென்றும், ஆயிரங்கண்ணனான இறைவனின் பார்வை எப்போதும் தன் பக்தர்கள் மீது நிலைத்திருக்கும் என்றும், இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பான் என்றும் அவனுடைய தாமரை புரையுங் காமர் சேவடிகளைநினைந்திருப்போர் பிறர் தமதீச் சொற்களுக்கு இரையாகார் என்றும் இக்கதை நமக்கு அறிவுறுத்துகிறது.

இறைவன் எல்லாமாய் எங்கும் நிறைந்துள்ளான என்று பிரகலாதனும், அவன் எங்குமே இல்லையென இரணியகசிபும் வாதிடும்போதே இறைவன் சராசரங்களில் எல்லாம் நரசிங்க வடிவில் நிறைந்து நின்ற தன்மையால் அவன் அடியாரைக் காக்கும் அருள் உள்ளம் கொண்டவன் என அறிகிறோம். தன் தாயின் கருவிலிருக்கும் போதே நாரதன் வாக்கால் நாரணன் பெருமையை உணர்ந்தவனாதலால் பிரகலாதன் பிறவிப் பக்தனாக விளங்கினான். பக்தியால் இறைவனை வணங்கும் பெருமையை விளக்கிப் பிரகலாதன் தன் தந்தையிடம் துணிந்துரைப்பதும், இறவாத இறையுண்மை இன்னதென்று அவன் தன் வகுப்புத் தோழர்கட்கு எடுத்துரைப்பதும் இந்நூலின் மிகச் சிறந்த பகுதிகளாகும்.

வாமன அவதாரம்

பகவான் நாராயணன் எப்போதும் தேவர்களைக் காப்பதில் பெருவிருப்புடையவன். அரக்கர்கள் வலிமைமிக்குத் தேவர்களை வென்று தேவருலகைக் கைப்பற்றிக் கொண்டபோதெல்லாம்

நாராயணன் அசுரர்களைக்கொன்று தேவர்க்கு அவருலகை மீட்டருள்வான். பலி என்னும் அரசன் தேவர்களை வென்று தேவருலகைக் கைப்பற்றிக் கொண்டபோது செய்வதறியாது அஞ்சிய தேவர்கள் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டனர். அவர்களுடைய துயரைப் பொருத அதிதி தன் கணவரின் துணையால் உண்ணுநோன்பு மேற்கொண்டு தவமிருந்தாள். தனக்குக்காட்சி நல்கிய நாரணனை வேண்டி அவனையே குழந்தையாய்ப் பெறும் வரத்தைப் பெற்ருள். அதிதிக்கு வாமனன் என்னும் குழந்தையாய்ப் பிறந்த நாரணன் யாகஞ் செய்து கொண்டிருந்த பலியை அணுகி மூன்றடி மண்ணைத் தானமாகப் பெற்று ஓரடியால் அவனைப் பாதலத்தில் அழுத்திக் கொன்ருன். அவனருளால் இந்திரன் மீண்டும் தேவருலக ஆட்சியைப் பெற்ருன். இந்த அவதாரத்தின் தலையாய நோக்கமே இந்திரனுக்கு அவனுடைய ஆட்சியை மீட்டுத் தருவதுதான்.

இராமாவதாரம்

ஒன்பதாம் காண்டத்தில் இராமனுடைய கதை சொல்லப் படுகிறது. சூரிய வம்சத்து அரசர்களின் வரலாறு கூறுமிடத்து இராமாவதாரத்தைக் குறிப்பிட நேருகிறது. இராவணன் முதலிய அரக்கர்களைக் கொன்று தேவர்களையும் முனிவர்களையும் காப்பதுதான் இந்த அவதாரத்தின் நோக்கம். இராமனின் கதை இவ்விடத்தில மிகச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

கிருஷ்ணுவதாரம்

பத்தாம் காண்டம்தான் பாகவதத்தின் உயிர்ப்பான பகுதி. யசோதைக்கும் வாசுதேவனுக்கும் கண்ணன் என்ற பெயரில் குழந்தையாகத் திருமால் அவதாரம் செய்வதும், நந்தனுடைய கோகுலத்தில் கண்ணன் வளர்வதும், கம்சன் முதலிய அரக்கர்களைக் கொன்றழிப்பதும் ஆகிய செயல்கள் இதனுள் பேசப்படுகின்றன. கண்ணனின் பிள்ளைக் குறும்புகளையும் கோபியரின் நாயகிபாவ பக்தியையும் போதனர் இக் காண்டத்தில் மிக்க சுவையுடன் பாடியுள்ளார். இலக்குமியின் அவதாரமாக விளங்கும் ருக்குமணியின் திருமணம் இக் காண்டத்தில் பேசப்படும் மற்ருெரு சுவையான பகுதியாகும். கண்ணன் மீது ருக்குமணி கொண்ட காதல் புனிதமும் தூய்மையும் உடையது. உண்மைக் காதல் இறுதியில் வெற்றியுறும் என்னும் கொள்கையை விளக்க வல்ல நல்லதொரு எடுத்துக்காட்டாக ருக்குமணியின் கதை விளங்குகிறது. வாணுசூரனின் செருக்கைப் போக்குவதும், சிசுபாலன், கம்சன், நரகன் போன்ற அசுரர்களை அழிப்பதும்

ஆகிய கண்ணபிரானின் வீரச்செயல்கள் இதனுள் பேசப்படு கின்றன.

நல்லோரைக் காப்பதும் தீயோரை ஒறுத்தலும் ஆகிய தலையாய அவதாரச் சிறப்புகள் இதுவரை கூறப்பட்டன. இவை தவிர இறைவன் பக்தர்களைக் காத்த பிற நிகழ்ச்சிகளும் உள்ளன. இத்தகைய கதைகளும் பிற கிளைக்கதைகளும் அறமும் தத்துவமும் தழைக்க இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. இவைகள் எல்லாம் உபாக்யானங்கள் என்னும் வடிவத்தில் இந்நூலுள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றின் உட்பொருளை இங்கே விளக்கலாம்.

தக்கன் கதை

தக்கனின் சந்ததியை விவரிக்கும் தொடர்பில் நான்காம் காண்டத்தில் தக்கயாக அழிவு விளக்கப்படுகிறது. தன்னுடைய ஆணவத்தால் சிவபெருமானின் இறைத் தன்மையையும் தன்னுடையஉண்மை நிலையினையும் உணரத் தவறிய தக்கன் சிவபெருமானை இழிவுபடுத்த எண்ணி யாகம் செய்கிறான். தன் யாகத்தைக் காண வந்த தன்மகளை அன்பால் வரவேற்காது அவமதிக்கிறான். அவனுடைய ஆணவமும் செருக்கும் அவனுக்கு மட்டுமின்றி அவனுக்குத் துணையாக வந்த தேவர்களுக்கும் இன்னலைத் தந்தன. தன் சுயகௌரவம் பாதிக்கப்பட்டதும் அதனைத் தாங்க இயலாத சதி (பார்வதி) யோகத் தீயில் மூழ்கித் தன்னுடலை நீத்தாள். ஆணவம் அழிவுக்கு வித்தாகிறது என்பதையும், தன்மானம் உள்ளவர்கள் பிறரால் இழிவு படுத்தப்படுவதைவிடத் தம் உயிரை மாய்த்துக் கொள்வதையே விரும்புவர் என்பதையும் இக் கதை நமக்கு நன்கு விளங்குகிறது.

துருவனின் கதை

சிறுவனான துருவனின் கதையும் நான்காம் காண்டத்தில் கூறப்படுகிறது. ஊழி இறுதியைப் பற்றிக் கூறிய பின்னர் மைத்ரேயர் இக் கதையை விதுரனுக்குச் சுருக்கமாகக் கூறுகிறார். ஸ்யாயம்புவ மனுவுக்கும் அவன் மனைவி சதரூபைக்கும் பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் மக்கள் இருவர் இருந்தனர். உத்தான பாதருக்குச் சுநீதி, சுருசி என இருமனைவியர் இருந்தனர். சுநீதிக்குத் துருவன் என்றொரு மகன் பிறந்தான். இவன் சிறுவனாயினும் மிகவும் தன்மானம் உள்ளவனாக இருந்தான். ஒரு நாள் தன் தந்தையின் மடியில் உட்காரச் சென்ற சிறுவன் துருவனை அவனுடைய மாற்றாந் தாயாகிய சுருசி என்ப

வள் தடுத்து, "என் வயிறறிற் பிறக்காமல் யாரோ ஒருத்திக்குப் பிறந்த உனக்கு உன் தந்தையின் மடியில் அமரும் நல்லூழ் இல்லை. போய்ப் பகவான் நாராயணனின் திருவடிகளைத் தொழுது எனக்கு மகனுகப் பிறக்கும் வரம் வாங்கிக் கொண்டு வா எனக் கடிந்து கூறினுள். அவனுடைய தந்தையும் மகனை அருகழைத்து அணைக்காது வாய்மூடி இருந்தான். மாற்றுந் தாயின் சொற்களால் சிறுவனுகிய துருவனின் மனம் மிகவும் புண்பட்டு விட்டது. அவனுடைய தாய் அவனைத் தேற்றித் திருமாலை வழிபடுமாறு கூறினுள். உடனே துருவன் தவம் செய்வதற்காகக் காட்டை நோக்கிச் சென்றுன். நாரதர் அவனை வழியிற் கண்டு, 'நாராயணனை யோகிகள்தாம் அணுக முடியும். உன்னைப் போன்ற சிறுவர்கள் அவனைக் காண இயலாது. எனவே திரும்பிச்செல்" என்று அறிவுறுத்தினுர். இதனைக் கேட்டுச் சிறிதும் கலக்கமடையாத துருவனின் உறுதியைக்கண்ட நாரதர் தவஞ்செய்யும் முறைமைகளை அவனுக்குக் கற்பித்தார். அவர் கூறியவாறே கடுந்தவம் புரிந்த துருவனுக்குக் காட்சியளித்த திருமால் பிறரால் எய்தற்கரிய மிக உயர்ந்த பதவியை (துருவபதவி) அவனுக்கு அளித்து அருளினுர்.

துருவபதம் எவ்வளவுதான் உயர்ந்ததாயினும் இறையருள் இன்பத்தின் எல்லையாகிய வீடுபேற்றை வேண்டிப்பெறவில்லையே என நினைந்து துருவன் மிகவும் வருந்தினுன். அழியக்கூடிய வெறும் பதவியும் போகமும் வேண்டிப் பெறுவதை விடமனிதன் குறிக்கோளாகப் பெற வேண்டிய வரம் வீடுபேறுதான் என்பது இதனுல் விளக்கமாகிறது. மேலும் பக்திக்கும் வயதுக்கும் தொடர்பில்லை என்பதும், உள்ளன்போடு வழிபட்டால் சிறுவர்களும் இறைவனை மகிழ்வித்து அவனருள் பெறலாம் என்பதும் இதனுல் விளங்குகின்றன. தன்மானம் மிக்கவர்களை மனம் புண்படுமாறு இழித்துப் பேசுவது அரியசெயல்கள் பலவற்றைச் செய்யுமாறு தூண்டுவதால் அதுவும் அவர்கட்கு மறைமுகமான நன்மையாகவே முடிகிறது என்பதும் இக்கதையால் விளக்கம் பெறுகிறது. நாரதர் முதலில் துருவனைத் தடுத்தது அவனைத் தவததின்பால் மேலும் உறுதியடையச் செய்வதற்காகத்தான். துருவனுக்குத் தவமியற்றும் முறைமையைக் கற்பிப்பதற்காக நாரதரை இறைவன் தான் அனுப்புகிருர், எனவே, தன்னை உளமார விரும்பி உறுதியாக நம்பும் பக்தர்களுக்கு இறைவனே தக்க வழிகாட்டி அருள் செயகிருர் என்பதை இக்கதையினுல் அறிகிறும்.

புரஞ்சனர் கதை

நாரதர் பிராசீனபர்ஹிக்குக் கூறுவதாக அமைந்துள்ள,

புரஞ்சனனைப் பற்றிய கிளைக்கதை நான்காம் காண்டத்தில் வருகிறது. மரபுதொட்டு வழங்கும் சடங்குகளைச் செய்வதில் தன் காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கும் பிராசீனபர்ஹியைக் கண்ட நாரதர், தீமையைக் களைந்து தம் விருப்பத்தை நிறைவேற்றத் தக்க பெருநன்மையை வெறும் சடங்குகள் தரமாட்டா என்று அவனுக்கு விளக்குகிறார். இதனைக் கேட்ட பிராசீனபர்ஹி வினைதீர்க்கும் மெய்ஞ்ஞானத்தை அடைதற்குரிய தூய வழியைக் காட்டுமாறு நாரதரை வேண்டுகிறான். அவன் யாகத்தில் கொன்ற எண்ணற்ற விலங்குகளைக் காட்டி, அவன் இறந்து மறுஉலகம் சென்றதும் அவன் உடலைத் தம் கொம்புகளால் குத்திக் குதறுவதற்காக அவை காத்திருக்கின்றன என்று நாரதர் பிராசீனபர்ஹிக்குக் கூறுகிறார். பின்னர் அவனை அத் துன்பத்திலிருந்து விடுவிப்பதற்காக நாரதர் அவனுக்குப் புரஞ்சனர் கதையைக் கூறுகிறார்.

பல ஆன்மீக மறைபொருளைக் கொண்டுள்ள இக் கதை ஒரு கதையுருவகமாக (allegory) அமைக்கப்பட்டுள்ளது. இக் கதையில் வரும் புரஞ்சன் 'புருடனை'யும் (புருஷன்), அவருடைய நண்பர் அவிக்ஞாதர் 'ஈஸ்வரனை'யும் குறிக்கின்றன. 'நகரம்' என்பது உடல், கண், மூக்கு, முகம், செவி போன்ற ஒன்பது வாயில்கள்; ஐந்தலை நாகம் என்பது ஐவகை அவத்தைகளை உடைய 'ப்ராணம்'. 'பிரமாதோத்துமம்' என்பது அறிவு: 'சந்தவேகம்' என்பது காலத்தைக் காட்டும் ஆண்டு; 'கந்தர்வர்கள்' நாட்களையும், 'யவனேஸ்வரர்' மரணத்தையும் குறிக்கும். 'குருடர்கள்' என்பன கை, கால்கள். 'அந்தப்புரமாவது' இதயம்; 'விசுசி' என்பது உள்ளம். இவ்வாறு இக் கதை முழுவதும் உருவக அமைப்பில் சொல்லப்படுகிறது, வினையாற்றுவது புருடார்த்தமன்று; இறைவன் மகிழும் செயல்களைச் செய்தலே நல்வினையாகும். இறைவனை நாடுமாறு செய்யும் அறிவே வித்யா எனப்படும்; எல்லா உயிர்கட்கும் ஆன்மாவாகவும் தலைவனாகவும் இருப்பவன் இறைவனே ஆவான். எனவே அவன் திருவடிகளே எல்லோர்க்கும் பாதுகாப்பான புகலிடம் என்று இவ் உருவகக் கதை கூறுகிறது.

சுயக்ஞன்

இரணியாக்கன் இறந்த பின்னர் அவனுடைய மனைவி மக்கட்கும் தாய்க்கும் இரணியகசிபு ஆறுதல் கூறுகிறான். அப்போது எமனுக்கும் இறந்தவனின் உறவினர்க்கும் இடையே நடக்கும் உரையாடலாக வரும் சுயக்ஞனின் கிளைக்கதையை இரணியகசிபு

ஏழாம் காண்டத்தில் கூறுகிறான். உசீனர நாட்டின் அரசன் சுயக்ஞன் பகைவரால் கொல்லப்பட்டு இறந்தபோது அவனுடைய மனைவியர் அழத் தொடங்கினர். அன்று மாலையில், எமன் ஓர் அந்தணச் சிறுவன் வேடம் பூண்டு இறந்த அரசனின் உறவினரிடம் வந்தான். அவன் அவர்களை நோக்கி, ''மக்கள் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. தாங்கள் எப்போதும் இறக்க மாட்டோம் என்று கருதுபவர்களைப் போல இறந்தவரின் உறவினர் அழுகின்றனர். பெற்றோரைப் பிரிந்து காட்டிற்குச் செல்லும் நாம வனவிலங்குகளின் தொல்லையின்றி வாழ்கிறோம். தாயின் கருவிலிருந்தபோது நம்மைக் காப்பாற்றிய இறைவன் காட்டிலிருக்கும்போதும் நம்மைக் காப்பாற்றுகிறார். படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய எல்லாத் தொழில்கட்கும் இறைவனே காரணமாகிறான். முற்பிறவியில் தாம் செய்த வினைகட்கேற்ப, மக்கள் ஐம்பூதங்களின் சேர்க்கையாலாய உடலினைப் பெற்று வாழ்ந்து, பின்னர் வினைப்பயன் முடியும்போது மடிகின்றனர். இவ்வாறு மடிவது உடல்தானே தவிர உயிரன்று. உடலும் உயிரும் ஒன்றோடொன்று இயல்பாகவே தொடர்புடையன அல்ல. வினைத் தொடர்பால்தான் இவை ஒன்றுசேர்கின்றன. அத் தொடர்பு அற்றதும் பிரிந்து விடுகின்றன. இதனை அறியாத மக்கள் இவற்றின் இயைபால் மகிழ்ந்து பிரிவால் வருந்துகின்றனர். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் எதற்கும் மகிழ்வதுமில்லை; வருந்துவதுமிலலை. எனவே இறந்த அரசனுக்காக நீங்கள் வருந்துவது பயனற்றது'' என்று கூறினான். பின்னர் அவன் 'வேடனும் குருவிகளும்' என்ற கதையை அவர்கட்குக் கூறினான்.

வேடனும் குருவிகளும்

வேடன் ஒருவன் வேட்டைக்குரிய கருவிகளுடன் காட்டிற்குச் சென்றான். அப்போது தன்முன்னர்ப் பறந்து சென்ற இரு சிட்டுக் குருவிகளைக் கண்டான். அவற்றுள் பெண் பறவையைத் தன் வலையால் பிடித்துப் பைக்குள் போட்டுக் கொண்டான். ஆண் பறவை தன் பேடையின் மறைவுககு வருந்தி இன்னும சிறகுகள் கூட முளைக்காமல் இருக்கும் தன் குஞ்சுகளின் நிலை குறித்து வருந்திக் கொண்டிருக்கும் போதே வேடன் அதன் மீது அம்பு எய்ய அதுவும் கீழே விழுந்து இறந்தது.

இக் கதையைக் கூறிய அந்தணச் சிறுவன் இறந்த அரசனின் உறவினர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், ''எவ்வளவு அறவோராயினும், உயர்ந்தோராயினும் காலம் வரும்போது

இறந்தே தீருவர். ஆதலின் அதற்காக அழுவதால் பயனில்லை'' என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்ட உறவினர்கள் உலக நிலையாமையை உணர்ந்து, இறந்த அரசனுக்கு ஈமக்கடன் களைச் செய்து வீடு திரும்பினர். பிறப்பும் இறப்பும் உயிர்கட்கு இயல்பென்பதும், இறந்தவர்க்காக அழுவதால் பயனில்லை என்பதும் சுயக்ஞனின் இக் கதையால் நன்கு விளங்குகின்றன. எபபோது என்ன நிகழும் என்பதை யாரும் அறிய இயலாது; காலம் வரும்போது இறப்பது தவிர்க்க இயலாதது. எனவே இறநதவர்க்காகவோ உயிரோடு இருப்பவர்கட்காகவோ வருந்தி யழுதல் பயனற்றது என்ற செய்தி, ''வேடனும் குருவிகளும்'' என்ற கதையால் விளங்குகிறது.

ஒருவர் இறந்தபோது அவருடைய உறவினர்கள் அழுது புலமபுவதும் வயது முதிர்ந்த பெரியோர் இவ்வுலக நிலையா மையை எடுத்துக் கூறி அவர்களுக்கு ஆறுதல் கூறுவதும்தான் உலக இயற்கை. இக் கதையில் எமன் ஓர் அந்தணச் சிறுவனாக வந்து முதியோர்போல் ஆறுதல் கூறுவது புதுமையாகத் தோன்று கிறது. சிறுவனின் கூற்றில் அமைந்துள்ள மெய்யுணர்வு கருத்து களைக் கேட்ட பெரியவர்கள் மனந்தெளிந்து அமைதி அடைந் தனர். மேலும் இவ்வளவு சிறியவன் ஆறுதல கூறும்போது நாம் இறந்த அரசனுக்காக அழுவது மிகவும் பேதைமை என்றும் உணர்ந்தனர். பெற்றோர் துணையின்றிக் காட்டில் வாழும் சிறுவர்களைக் கடவுள்தான் காப்பாற்றுகிறார் என்ற செய்தியும், அவரே இவ்வுலகத் தோற்றத்திற்கும், இருப்புக்கும், அழிவுக்கும் காரணமாகிறார் என்ற செய்தியும் எமனுடைய சிறுவன் வேடத் தால் நன்கு உறுதிப்படுகின்றன. செருக்கும் இறுமாப்பும் உடைய அரக்கனாய் இருப்பினும் இரணியகசிபு இக் கதையைக் கூறி ஆறுதல் சொல்வதிலிருந்து அவனுடைய தெளிந்த அறிவு நமக்குப புலனாகிறது.

கஜேந்திரன் வீடு பெற்றது

எட்டாம் காண்டத்தில் கூறப்படும் கஜேந்திரன் வீடுபேற டைந்த கதை யாவரும் அறிந்த ஒன்று. நான்காம் மனுவாட்சி யினபோது இக் கதை நிகழ்ந்தது. கஜேந்திரன் முற்பிறவியில் இந்திரத்துய்மன் என்ற பெயருடைய 'திராவில' நாட்டு அரச னாக இருந்த மிகச் சிறந்த வைணவ பக்தன். அகத்தியர் சாபத் தால் ஒரு யானையாகப் பிறந்தான். முதலை தன் காலைக் கவ்விய போது முதலில் தன் முழுவலிமையையும் பயன்படுத்தி அதன் பிடியில் இருந்து தப்ப அவன் முயன்றான். இப் போராட்டம்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வரை நீடித்தது. இப் போராட்டத்தில் தன் வலிமை குறைந்துகொண்டே வருவதையும் முதலையின் வலிமை மிகுந்துகொண்டே செல்வதையும் கவனித்த கஜேந்திரன், தன் முன்னைத் தவப்பயனாலும் அரிய உள்ளொளியாலும் இறைஞானம் உள்ளத்தே தோன்றப் பெற்றவனாய், ''வரமளிக்கும் வரதராசனே, உன்னைவிடப் பெரியவர்கள் யாருமில்லை. வீழ்ந்த என்னை மன்னிப்பாயாக. விரைந்து வந்து என்னைக் காப்பாயாக'' என்று கூறிப் பிரபஞ்சத் தலைவனும் இறைவனை வணங்கலானான். திருமாலும் விரைந்து வந்து தன் சக்கரப் படையால் முதலையைக் கொன்று அவனைக் காப்பாற்றி அருளினார். தன் உடல் வலிமையைக் கொண்டு போராடிய கஜேந்திரன் அதன் பயனின்மையை உணர்ந்து இறைவனை வணங்கலானான். தன்னை முழுவதுமாக அடைக்கலப் படுத்தும் இவ் வழிபாட்டாலும் பயன் விளையவில்லை. தன்னைத் துறந்து அவனை அழைத்ததும் பாதுகாப்பு கிடைத்தது.

யாவரே ஆயினும் தன்னை மறந்து இறைவன் திருவுள்ளத்தோடு தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொண்டால் அத்தகைபோரைத் திருமால் என்றும் காப்பாற்றி அருளுவார் என்பது தான் இக் கதையால் பெறப்படும் நீதி. இறைவனையே நினைந்து உருகும் எஞ்சுதலில்லாத பக்திதான் வேண்டப்படுவது. கஜேந்திரனின் கண்ணீரைத் துடைத்து அவனைக் கரையேற்றிக் காப்பாற்றிய கதையால் இறைவன் தன் அடியார்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு எப்போதும் தயாராய் இருப்பான் என்று அறிகிறோம். கஜேந்திரனைக் காக்க ஓடி வந்த திருமாலின் தோளில் இலக்குமியின் புடவைத் தலைப்பு ஒட்டியவாறே இருந்தது என்று கூறப்படுகிறது. தன் பக்தர்களின் இன்னல்களைக் களைவதில் இறைவனுக்கு உள்ள ஈடுபாட்டை இக் குறிப்பு தெளிவாக்குகிறது.

இக் கதையில் வரும் உருவகப் பொருளைக் கீழ்வருமாறு விளக்கலாம். கஜேந்திரன் சீவன், குளம் உலக வாழ்க்கை, குளத்தில் உள்ள நீர் வாழ்க்கை இன்பங்கள், முதலை மும்மலங்கள். உலக இன்பங்களை நுகருவதற்காகச் சீவன் உலகவாழ்க்கையில் ஈடுபடும்போது மும்மலங்களும் அவனைப் பற்றித் துன்புறுத்துகின்றன. சீவன் மெய்யுணர்வு பெற்றுத் துளங்காத பக்தி பூண்டு இறையடியைச் சரணாக அடைந்தால் உயிர்கள் மீது இரக்கம்கொண்ட இறைவன் சீவனின் மும்மலக் கட்டுக்களைத் தகர்த்து எறிந்து அவனுக்கு வீடு பேற்றை அருள்வான். தமக்கே உரிய இனிய கவிதைத் திறத்தால் சிறந்த பாத்திரங்

களைப் படைத்திருப்பதும், பக்திச் சுவையின் உயர்வைச் சுவை பட எடுத்துக் காட்டியிருப்பதும் போதனரின் தனிச் சிறப்புகளாகும். உள்ளன்போடு இறையன்பில் ஈடுபட்டு ஒழுகினால் மனிதரேயன்றி விலங்குகளும் இறையருளை எய்தலாம் என்றும் இதனால் அறிகிறோம்.

அம்பரீடன்

சூரிய சந்திர குலங்கட்குரிய பல அரசர்களைப் பற்றிய கதைகள் ஒன்பதாம் காண்டத்தில் பேசப்படுகின்றன. அவற்றுள் அம்பரீடன், ரந்திதேவன் ஆகியோர் கதைகள் சிறந்தவை. நாபாகனின் மகன் அம்பரீடன். அவன் திருமாலை நினைந்து இடைவிடாது தொழுது வந்தான். அவனுடைய பக்திக்கு மகிழ்ந்த இறைவன் தன் சக்கரப் படையை அம்பரீடனுக்கு அளித்தான். கடவுள் தன்மைமிக்க அப்படை பகவான் நாராயணனின் திருக்கரத்தில் மட்டும் வீற்றிருக்கும் சிறப்புடையது: இவ்வளவு சிறப்பு வாய்ந்த படையை அம்பரீடனுக்கு அளித்தமையால் அவனுடைய இறையன்பின் மேன்மையையும், தன் அடியார்பால் இறைவன் காட்டும் அருளின் சிறப்பையும் அறியலாம்.

அம்பரீடன் ஓராண்டுக் காலம் துவாதச நோன்பு இயற்றினான். நோன்பு முடியும் தருவாயில் துருவாச முனிவர் அவனிடம் விருந்தாக வந்தார். முகமலர்ந்து பணிவோடு அவரை வரவேற்று விருந்து உண்ணுமாறு வேண்டினான் அம்பரீடன். நீராடி வரச்சென்ற துருவாசர் தியானத்தில் ஆழ்ந்த காரணத்தால் மீண்டும் வர நெடுநேரம் ஆயிற்று. துவாதசி முடிவதற்குள் அம்பரீடன் தன் நோன்பை முடிக்க வேண்டும். எனினும் துருவாசர் வரும் முன்னர் அவ்வாறு செய்யின் ஒரு முனிவரைப் புறக்கணித்த குற்றம் வரும் என்று அஞ்சினான். எனவே தன்னருகிருந்த அறிஞர்களின் அறிவுரையை நாடினான். அவர்கள் நீரருந்தி நோன்பை முடிக்குமாறு கூறினர். அம்பரீடனும் அவ்வாறே செய்தான். ஆற்றிலிருந்து நீராடி மீண்ட துருவாசர் இதைச் கண்டு சீற்றம் அடைந்து தம் சடைமுடியில் இருந்து தீயசக்தி (க்ருத்யா) ஒன்றை உருவாக்கி அம்பரீடன் மீது ஏவினார். திருமால் அவனைக் காப்பாற்றும் பொருட்டுச் சக்கரப் படையை ஏவினார். துருவாசரின் தீய சக்தியைக் கொன்றழித்த அப்படை துருவாசரைத் தாக்கவே, அவர் தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டிப் பிரம்மன், சிவன் ஆகியோரிடம் சென்றார். அவர்கள் தங்கள் இயலாமையைக் கூறியதும் திருமாலிடமே

சென்றார் துருவாசர். திருமாலோ அம்பரீடனிடம் சென்று அவனையே வேண்டுமாறு கூறினார். அம்பரீடனிடம் ஓடிய துருவாசர் அவன் கால்களில் வீழ்ந்து வணங்கினார். அமைதியடைந்து துருவாசரைக் கொல்லாது மீண்ட சக்கரப்படையினை அம்பரீடன் வாயாரப் புகழ்ந்தான்.

முனிவரின சாபம் மாற்றற்கரியது; அழியாத ஆற்றலுடையது. எனினும் அத்தகைய சாபம் அழிவுற்றமைக்குக் காரணம், துருவாச முனிவரின் செருக்கும், காரணமற்ற கோபமும்தான். இதனால் தீய வெகுளியை விலக்க வேண்டும் என்பதும், தக்க காரணமின்றி நல்லோர் மீது செலுத்தப்படும் கோபம் செலுத்துவோரையே சுடும் என்பதும் பெறப்பட்டன. துருவாசர் பாதுகாப்பு வேண்டித் திருமாலைச் சரண் அடைந்தபோது, "என் நலத்தினும் என் அடியார் நலத்தில்தான் நான் மிகுதியான கருத்துடையவன். என்னுடைய அடைக்கலமே அவர்கள்தான். ஆவினைத் தொடரும் கன்றுபோல நான் அடியார்களைத் தொடர்ந்து செல்கிறேன். என்னுடைய ஆற்றல் நல்லடியார்பால் சூழ்ந்து நிறைந்துள்ளது. அவர்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களை அவ்வாற்றல் படையென நின்று அழிக்கிறது" என்று கூறினார். தாமே துருவாசரின் துயரைத் துடைக்கும் ஆற்றல் உடையவராயினும் தம் அடியாருடைய ஆற்றலை வெளிப்படுத்தித் தாம் வேறு தம் அடியார் வேறு அல்ல என்பதைப் புலப்படுத்துவதற்காகவே திருமால் துருவாசரை அம்பரீடனிடம் அனுப்பி அவனையே வேண்டுமாறு கூறினார். அவருடைய பக்தன் ஒருவன் செய்த செயலைப் பிரம்மா, சிவன் ஆகியோராலும் தடுக்க இயலவில்லை. அம்பரீடன் தன்னைத் துறந்து சக்கரப் படையை வணங்கினான் என்பதால் அவனுடைய பணிவும் சக்கரப் படைக்கு இரையாகாமல் தன் பகையாய துருவாசரையும் காப்பாற்றினான் என்பதால் அவனுடைய சாத்துவிகப் பண்பும் வெளியாகின்றன.

யயாதி மன்னன்

நகுடனின் மகனாகிய யயாதி மன்னனின் கதை மகாபாரதத்தில் மிக விரிவாகக் கூறப்படுகிறது. பாகவதத்தில் இடம்பெறும் யயாதியின் கதை அதிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. உலக இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்ற ஆசை முடிவில்லாதது: முதுமைப் பருவம் எய்திய ஒருவனைக்கூட வாழ்க்கைப் பற்றும், போக நுகர்வும் விடுவதில்லை என்பதும், தொடர்ந்து ஆரத் துய்த்த போதிலும் இன்ப நுகர்வில் மனநிறைவு உண்டாவ

தில்லை என்பதும் இக்கதையால் பாகவதத்தில் விளக்கப்படுகின்றன. இடையறாது இன்பம் துய்த்தும் நிறைவுறாத தன் ஆசையினால் தான் தனக்கு அழிவு நேர்ந்தது என அறிந்து வருந்திய யயாதி தன் வாழ்க்கையோடு ஒப்புமையுடைய ஒரு ஆட்டின் கதையைத் தேவயானைக்கு கூறுகிறான்.

நீரினைப் பயனால் ஒரு கிணற்றுள் வீழ்ந்து துன்புற்ற ஒரு பெண் ஆட்டைக் காட்டில் திரிந்துகொண்டிருந்த ஓர் ஆணாடு கண்டது அதன் மீது காதலுற்ற ஆண் ஆடு பக்க வழியொன்றை ஏற்படுத்திக் கிணற்றிலிருந்து அப் பெண்ணாட்டைக் காப்பாற்றியது. தன்னைக் காப்பாற்றிய ஆணாட்டைத் தன்னுடன் வாழுமாறு பெண்ணாடு வேண்டியது. அதனை ஏற்றுக்கொண்ட ஆணாடு மகிழ்ச்சியாக அக் காட்டில் அதனுடன் வாழ்ந்து வந்தது. பின்னர் வேறு சில பெண்ணாடுகளும் இவ் ஆணாட்டை விரும்பவே அவற்றோடும் அது இன்புற்று வந்தது. தன்னைவிட அழகான பெண்ணாட்டுடன் இன்புற்று வருவதால் ஆணாடு தன்னைப் புறக்கணிக்கிறது என்று கண்டுகொண்ட கிணற்றில் வீழ்ந்த பெண்ணாடு அதனை விட்டு விலகிச் சென்றது. அதனைப் பின்தொடர்ந்து சென்ற ஆணாடு எவ்வளவோ சமாதானம் கூறி அதனன்பை மீட்டும் பெற முயன்று தோல்வியுற்றது. பெண்ணாட்டின் உரிமையாளரான ஒரு முனிவர் அவ் ஆணாடு பிற பெண்ணாடுகளைத் தேடிச் செல்லாவண்ணம் அதனை மலடாக்கினார். அப்போது ஆணாடு அவர் கால்களில் வீழ்ந்து வணங்கியது. யோகப் பயிற்சிகளில் வல்லவரான முனிவர் அதனைக் கண்டு மனமிரங்கி மீண்டும் அதன் மலட்டுத் தன்மையை நீக்கி ஆண்மையை மீட்டருளினார். ஆண்மையைத் திரும்பப் பெற்ற ஆணாடு அப் பெண்ணாட்டுடன் கூடி இன்புற்றதாயினும் அதன் மனம் முழுநிறைவு அடையவில்லை.

இக் கதையில் வரும் ஆணாடு யயாதி; கிணற்றில் வீழ்ந்த பெண்ணாடு தேவயானை; அழகால் மயக்கிய பெண்ணாடு சர்மிஷ்டை; முனிவர் சுக்கிரன். ஆணாட்டின் ஆண்மை போக்கும் நிகழ்ச்சி சுக்கிர முனிவர் யயாதியை முதியோனாகுமாறு சபித்ததைக் குறிக்கிறது. ஆசை தீர இன்பம் நுகர்ந்த பின்னர் முதுமையை ஏற்றுக்கொள்கிறேன் என்ற யயாதியின் வேண்டுகோளைச் சுக்கிர முனிவர் ஏற்றுக்கொண்டார். இதனை ஆணாட்டிற்கு ஆண்மையை மீட்டுக்கொடுத்த செய்தி குறிப்பிடுகிறது.

விலங்குகளில் ஆடுதான் காமஇச்சை மிகுந்தது என்று கூறப்படுகிறது. எனவே காமஞ்செறிந்த யயாதி தன்னை ஓர்

ஆட்டோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். வடமொழியில் உள்ள 'அஜ' என்னும் சொல் 'பெண்ணாடு' எனப் பொருள் படுவதுடன், 'அறியாமை' என்னும் பொருளையும் உணர்த்துகிறது. அவித்தை அல்லது அறியாமையில் மூழ்கியிருக்கும் வரையில் யயாதி இன்ப நுகர்ச்சி ஒன்றையே விரும்புபவனாக இருக்கிறான். பின்னர் வெறுப்படைந்து இறைவனை உணர முயலும் ஆன்மீக நெறிக்குத திரும்புகிறான். தன் கணவன் கூறிய கதையின் உட்பொருளை உணர்ந்த தேவயானை உலகப் பற்றுக்களைத் துறந்து வீடுபேறு அடைந்தாள். அவித்தை அல்லது அறியாமையில் மூழ்கியிருக்கும் வரையில் மக்கள் காமவின்பம் போன்ற நுகர்வுகளில் ஆழ்ந்து வாழ்நாளை வீணாளாகக் கழிக்கின்றனர் என்றும் அறியாமை விலகியதும் வாழ்க்கையில் வெறுப்புற்று ஆன்மீக நெறிக்கு மீண்டு இறுதியில்லாத இறையின்பத்தை அடைகின்றனர் என்றும் இக்கதை தெளிவாகக் காட்டுகின்றது.

ரந்தி தேவர்

ரந்திதேவரின் கதை அளவால் மிகவும் சிறியதாயினும் அது உணர்த்தும் உண்மைகளால் மிகவும் சிறந்ததாக உள்ளது. ரந்தி தேவர் நாற்பது நாட்கள் உண்ண உணவும் அருந்த நீரும் இன்றிப் பசித்திருந்தார். நற்பேற்றால் கொஞ்சம் நீரும் உணவும் கிடைத்து உண்ணத் தொடங்குகையில் ஓர் அந்தணர் விருந்தாக வந்தார். தம் உணவில் பாதியை அவருக்கு வழங்கினார் ரந்தி தேவர். பின்னர் மிகவும் பசித்துக் களைத்த நிலையில் ஒரு சூத்திரன் அவர் முன் தோன்றித் தன் பசியைக் களையுமாறு வேண்டினான். ரந்திதேவர் தம்மிடம் இருந்ததில் பாதியை அவனுக்கு வழங்கினார். சிறிது நேரம் சென்றதும் ஒரு நாய்க்கூட்டம் அவரை அணுகியபோது தம்மிடம் எஞ்சியிருந்த உணவு முழுவதையும் அந்நற்கு அளித்துவிட்டார். பிறகு திடீரென அங்குத் தோன்றிய அரிசனன் ஒருவன், ''என் கொடிய தாகத்தைத் தீர்த்து யாரேனும் என்னைக் காப்பாற்றுரேரா'' என்று கூவிய வண்ணம் அங்கு வரத், தம்மிடம் எஞ்சியிருந்த நீரையும் ரந்தி தேவர் அவனுக்கு அளித்துவிட்டார். அவரது செய்கைக்குப் பெரிதும் உவந்த கடவுளர் ரந்திதேவர். முன் தத்தம் வடிவங்களில் தோன்றி 'இவையெல்லாம் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் உன்னுடைய ஆற்றலைச் சோதிக்கவே நிகழ்ந்தன' என்று கூறினர், எனினும் ரந்திதேவர் அவர்களிடம் எந்த வரமும் வேண்டிப் பெறவில்லை. பகவான் நாராயணனின் பக்தியில் ஆழ்ந்த உள்ளத்தினராய் இருந்து வீடுபேறு அடைந்தார்.

இத்தகைய அரிய தியாகத்தால் ரந்திதேவரின் மன உறுதியும், பிறஉயிர்கள்பால் அவர் கொண்ட பேரன்பும் வெளியாகின்றன. தமக்கு மிகமிகத் தேவையான நிலையிலும் தம்முன் தோன்றிய பிரம்மா முதலிய கடவுளரிடத்து எத்தகைய வரத்தையும் வேண்டிப் பெற முயலவில்லை என்பதால் பயன் கருதாத தொண்டுள்ளம் படைத்த தோன்றல் ரந்திதேவர் என்பது அங்கைநெல்லி யென விளங்குகிறது.

குசேலர்

பத்தாம் காண்டத்தின் பிற்பகுதியில் குசேலரின் கதை கூறப்படுகிறது. குசேலரும் கண்ணனும் வகுப்புத் தோழர்களாய் இருந்தனர். இருவரும் இளமையில் சாந்தீப முனியிடம் கல்வி பயின்றனர். கண்ணன் பிரபஞ்சத்தின் முழுமுதற் கடவுளாயிருந்தும் ஓர் ஆசிரியனிடஞ் சென்று கல்வி கற்றது மானுடத்தின் நன்மைக்காகத்தான். கண்ணனை விளித்துப் பேசும் இடங்களில் எல்லாம் குசேலரும் இவ் உண்மையைக் குறிப்பிடுகிறார். குசேலர் தன்னை நாடி வருவதைக் கண்ட கண்ணபிரான் தன்னமளி நீங்கி விரைந்து சென்று அரச மரியாதைகளுடன் குசேலரை வரவேற்கிறான். பின்னர் இருவரும் தாங்கள் சாந்தீப முனியிடம் பயின்றபோது நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து இன்புற்றனர். இப் பகுதியைப் போதனர் மிகவும் சுவைபடத் தன்மையணி அமையப் பாடியுள்ளார்.

நண்பனும் தோழனுமாகிய தனக்கு என்ன பரிசு கொண்டு வந்தார் எனக் கண்ணன் கேட்கவும் குசேலர் தாம் கொண்டு வந்திருந்த சிறு அளவு அவலை எடுத்து மிக்க நாணத்துடன் கண்ணனுக்குக் கொடுத்தார். இந்திரர் முதலான தேவர்களும் பெறுதற்கரிய பெருஞ்செல்வத்தைக் குசேலருக்கு அருளக் கருதிய கண்ணன் மிக்க ஆர்வத்துடன் குசேலர் தம் அழுக்குத் துணியின் ஒரு மூலையில் முடிந்து வைத்திருந்த ஒரு பிடி அவலை எடுத்துச் சுவைத்து உண்டான். மற்றொரு பிடி அவலை எடுத்து உண்ணத் தொடங்குகையில் ருக்குமணி ஓடி வந்து, 'குசேலருக்குச் செல்வம் அருள இப்போது உண்ட ஒருபிடி அவலே போதுமானது' என்று கூறித் தடுத்தாள். உள்ளன்போடு உவந்து படைக்கும் பொருள் ஓர் இலை, மலர், பழம் அல்லது கொஞ்சம் நீர் போன்று எவ்வளவு அற்பமானதாயினும் இறைவன் அதனை உவந்து ஏற்றுக்கொள்வான் என்னும் நீதி இக் கதையால் வெள்ளிடைமலையென இனிது விளங்குகிறது.

அவ்வாறே, உள்ளன்பின்றிப் படைக்கப்படும் பொருள் எவ்வளவுதான் விலையுயர்ந்ததாக இருப்பினும் இறைவன் அதனை ஏற்றுக்கொள்ளான் என்பதும் தெளிவாகிறது. தன் மனைவியால் தூண்டப்பட்டுக் கண்ணபிரானிடம் பொருள்பெறக் கருதியே வந்த போதிலும் குசேலர் அதுபற்றிக் கண்ணனிடம் பேசவே இல்லை. எனினும் குசேலரின் வருகைக்குரிய காரணத்தை உணர்ந்திருந்த கண்ணன் அவருக்குக் குறைவிலாத செல்வத்தை அளித்தான். தன் பக்தர்களின் தேவையைத் தானே உணர்ந்து இறைவன் நிறைவேற்றுவான்; பக்தர்கள் வாய் திறந்து கேட்க வேண்டியதில்லை என்னும் மக்களின் பொதுவான நம்பிக்கையை இக் கதை மெய்ப்பிக்கிறது. யாராவது ஒரு அடியார்க்கு இறைவன் பொருட்செல்வம் அருளவில்லையாயின், அது அவர் பொருட்செல்வத்தால் இறைவனை மறந்து, நெறிபிறழ்ந்து முத்திநெறியை இழந்து விடுவார் என்ற கருணையால்தானே தவிர இறைவனின் அருட்குறைவால் அன்று என்றுணர வேண்டும்.

குசேலர் அந் நிகழ்ச்சிக்குப் பிறகு பெருஞ் செல்வத்தில் திளைத்தார்; எனினும் செல்வத்தை அவர் ஓர் இன்பப் பொருளாகக் கருதி நுகரவில்லை. இறைவனிடம் அவர் கொண்ட அன்பு மாறாமல் நிலைத்திருந்தது. இவ்வாறு இறைவனையே நினைந்து தியானத்தில் ஆழ்ந்து முத்தியடைந்தார் குசேலர். குசேலரின் பெருமைகளை எல்லாம் இக்கதை விவரித்துக் கூறுகிறது. இக் கதையில் வரும் குசேலரை ஜீவாத்மாவாகவும், கண்ணனைப் பரமாத்மாவாகவும் கொள்ளவேண்டும். இருவரும் ஒரே தன்மையர். வாழ்க்கையில் ஈடுபடும்போது பிரம்மம் ஜீவாத்மாவாகிறது. இவ்வுலகில் பூதவுடலைப் பெற்றதும் ஜீவாத்மா தன் அறியாமையை உணர்கிறது. 'ஐசுவரி'யத்தை இழந்த தன்மையையும் உணர்ந்து வருந்துகிறது. உலக வாழ்க்கையை ஏற்றுக் கொண்டதும் தன்னை அறிவாகக் கருதும் ஜீவாத்மா தன் உண்மை இயல்பை மறந்து இறைவனிடமிருந்து விலகிச் செல்கிறது.

பிற பாகவதக் கதைகள்: ஜடபரதர்

மேற்கூறிய கிளைக்கதைகள் எல்லாம் போதனரின் பாகவதத்தில் கூறப்படுவன. பிற கவிஞர்கள் இயற்றிய பாகவதத்தில் ஜட பரதர், மார்க்கண்டேயர், அசாமிளர், சித்ரகேது ஆகியோருடைய கிளைக்கதைகளும் காணப்படுகின்றன. ஒருவன் இறக்கும் தருணத்தில் எதைப்பற்றி மிகுதியாக நினைந்து கொண்டிருக்கிறானோ அதே வடிவத்தை அவன் அடுத்த பிறவியில் பெறுகிறான்; இறைவழிபாட்டின் மூலம் ஒருவன் தன் முற்பிறவிகளைப் பற்றிய

அறிவையும் ஞானத்தையும் பெறலாம். தன் பாவங்களையெல்லாம் தொலைத்த பின்னரே ஒருவன் வீடுபேறு அடைய முடியும் என்பன போன்ற உண்மைகளை ஜடபரதரின் கதை விளக்குகிறது.

அசாமிளர், சித்ரகேது, மார்க்கண்டேயர்

இறைவன் திருப்பெயரை மீண்டும் மீண்டும் கூறிப் பாராயணம் செய்வதால் ஒருகொடிய பாவிகூடத் தன் பாவங்களையும் குறைகளையும் போக்கிக் கொள்ள இயலும் என்பதும், தன் பாவங்கட்கு ஒருவன் மனமார வருந்தி இரங்குவானாயின் அவனைக் கடவுள் காப்பாற்றுவார் என்பதும், அசாமிளரின் கதையால் பெறப்படுகின்றன. பிறப்பு இறப்புக்களின் இயல்பு இவை என்பதும், கடவுள் விதித்தவாறுதான் உலக உயிர்கள் இயங்குகின்றன என்பதும், சான்றோரின் அறிவுரையால் ஒருவன் உண்மையை உணர முடியும் என்பதும், சிவனும் கேசவனும் ஒன்றே என்பதும், தனக்கு அறிவைத் தேடிக் கொள்ளும்படி ஒருவன் சமயச் சான்றோர்களை எள்ளி நகையாடக் கூடாது என்பதும் சித்ரகேதுவின் கதையால் விளக்கம் பெறுகின்றன. தவஞ் செய்வதால் ஒருவன் இறையருளைப் பெறுதல் இயலும் என்பதையும், அவ்வருளால் பிணி, மூப்பு போன்றவற்றை மட்டுமின்றி இறப்பையும் ஒருவன் வெல்லக்கூடும் என்பதையும் மார்க்கண்டேயரின் கிளைக்கதை நமக்குக் கூறுகிறது.

பொதுவாகப் பாகவதத்தில் உள்ள எல்லாக் கதைகளும் கிளைக்கதைகளும் இறைவனின் அருளாட்சி இந் நிலவுலகில் நிலை பெற்று விளங்குவதை உளங்கொள்ளுமாறு இனிது விளக்குகின்றன.

இயல் ஆறு

பாகவதத்தில் பக்திச் சுவை

மானுட வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் வீடுபேறு அடைதல். இதனை அடைவதற்குரிய சிறந்த வழிகளாக நம் முன்னோர் ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் என்னும் மூவகை நெறிகளைக் காட்டியுள்ளனர். இவற்றுள் ஞான மார்க்கத்தைப் பக்குவமடைந்த யோகிகளே பின்பற்ற முடியும். கர்ம மார்க்கமும் கடினமானதுதான். சாதி, வயது, ஆண், பெண் என்னும் பல்வேறு நிலைகளுக்கேற்ப இயற்றப்படும் இந்நெறியைப் பற்றிப் புராணங்களும், வேதங்களும், ஸ்மிருதிகளும் பல்வேறு கடமைகளைக் கூறுகின்றன. இவ்வகையான கடமைகளையெல்லாம் முறையாகப் பற்றின்றிச் செய்வது எல்லோர்க்கும் இயல்வதன்று. ஆனால் பக்தி மார்க்கத்தை ஆண், பெண், இளையோர், முதியோர், கற்றோர், கல்லாதோர் என்னும் வேறுபாடுகளின்றி எல்லோரும் எளிதில் மேற்கொள்ளலாம். இதனால்தான் தவத்திரு சங்கராச்சாரிய சுவாமிகள்கூட, 'வீடுபேற்று நெறிகளுள் பக்திமார்க்கமே சிறந்தது' என்று அறிவித்துள்ளார். ஞான, கர்ம மார்க்கங்களைப் பாகவதம் இழித்துப் பேசவில்லையாயினும் பக்தி மார்க்கத்திற்குதான் அது சிறப்பிடம் அளிக்கிறது. பாகவதத்தில் வரும் ஒவ்வொரு கதையும் கிளைக்கதையும் பக்தியின் சிறப்பை வற்புறுத்தும் நோக்குடையதாகவே அமைந்துள்ளது. ''வாழ்க்கைப் பெருங்கடலைக் கடப்பதற்குத் திருமாலிடத்துக் கொள்ளும் பக்தியென்னும் படகைத் தவிர வேறொரு துணையும் இல்லை. எனவே அறிவிற் சிறந்த சுதரே, திருமாலின் இறைப்பெருமையை எங்களுக்குக் கூறி அருளுவீராக'' என்று சவுனக முனிவரும் பிறரும் சுதரை வேண்டுவதாக வரும் பாகவதத் தொடக்கம் இக் கருத்தை வலுப்படுத்துகிறது.

அறநெறியையும், ஒழுக்க விதிகளையும் பலவாறாகக் கூறுவதைவிடத் தம் இறைமைப் பண்புகளைப் புகழ்ந்து கூறுவதையே திருமால் பெரிதும் விரும்புவர் என்றும் பக்தி மார்க்கத்தாலன்றி வெறும் இயமம், நியமம் போன்ற யோக நெறிகளால் ஆன்மீக இன்பத்தை உள்ளம் அடையமுடியாது என்றும் கூறி நாரத முனிவர் பாகவதத்தை இயற்றுமாறு வியாசமுனிவரைத் தூண்டுகிறார். இரண்டாம் காண்டத்தில் முத்தி நெறியைப் பற்றிப்

பரீட்சித்துக்கு அறிவு கொளுத்துகையில் சுக முனிவர் பின்வருமாறு கூறுகிறார்:

"உலக வாழ்க்கையில் உழலும் ஒருவன் வீடுபேறு அடைவதற்குத் தவம், யோகம் முதலான பல வழிகள் உள்ளன. அவற்றுள் பக்தி நெறியே எளியது. அறம், நீதி என்பன பற்றி அறிய வேதங்களை நன்கு ஆராய்ந்த பிரம்மன் பக்திநெறி தவிர ஏனைய மார்க்கங்கள் முக்தியைத் தரமாட்டா என்றுணர்ந்து ஆழ்ந்த உள்ளத்தோடு திருமாலைத் தியானித்தார்."

மூன்றாம் காண்டத்தில் பக்தி நெறியின் பல்வேறு தன்மைகளைப் பற்றியும் ஆத்யந்திக பக்தியைப்பற்றியும் தேவஹூதிக்குக் கபில முனிவர் விளக்குகிறார். அப்போது திருமாலின் கூற்றாக அவளுக்கு அவர் கூறுவன:

"உள்ளார்ந்த பக்தியின்றி என் விக்கிரகங்களை வணங்கும் புற வழிபாட்டில் ஈடுபடும் அறிவற்ற ஒருவன் சாம்பற் குழியில் அவி சொரிந்து இடையறாதுயாகம் செய்யும் ஒருவனுக்கு ஒப்பாவான்."

இதைப்போன்ற இன்னும் பல இடங்களில் பக்திநெறிதான் முக்தியடையும் வழிகளில்மிகச் சிறந்ததும் எளிமையானதும் ஆகும் என்று பாகவதம் நன்கு தெளிவுபடுத்துகிறது.

'இறைவன்மாட்டுச் செலுத்தும் உயர்ந்த அன்பு' என்றும், 'அவன் மீது செலுத்தப்படும் உயரிய அன்பின் வெளிப்பாடு' என்றும் பக்தியின் இலக்கணத்தை நாரதர் முதலானோர் வரையறுப்பர். இறைவன் மீது காட்டப்படும் ஆழ்ந்த அன்பே பக்தி என்பது இவ்வறையறைகளின் பொருள். அன்பினைச் சொரியும் அளவற்ற ஆற்றலைப் பெற்றவை மானுட உள்ளங்கள். நெருங்கிய உறவினர்களான மனைவி, மக்கள், நண்பர்கள் ஆகியோரிடத்தும் பிற உலகப் பொருள்கள் மேலும் மக்கள் வைத்துள்ள பற்றினால் இவ் உண்மையை உணரலாம். வாழ்க்கையில் மக்கட்கு உள்ள பற்றே இதற்குக் காரணம். இதே பற்று இறைவன் மீது செலுத்தப்படும் போது பக்தி என்னும் பெயரைப் பெறுகிறது. இறைவனுக்கும் அவனுடைய பக்தர்கட்கும் இடையேயுள்ள உறவின் வேறு பெயர்தான் பக்தி என்பது.

கவிதையியலைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பக்தியின் தன்மை பற்றிப் பலவாறாகக் கூறியுள்ளனர். சுவையாகப் படைத்துக் காட்டலாகாத ஒருவகை உணர்ச்சியே பக்தி என்று சிலர் கருதுகின்றனர். பிறர் இதனைச் சாந்தத்துள் அடக்கலாம்

எனக் கூறுகின்றனர். இன்னும் சிலர் இதனைத் தனிச்சுவை யாகவே படைத்துக் காட்டலாம் என்று கூறுகின்றனர். மதுசூதன சரஸ்வதி என்னும் அறிஞர் தம்முடைய பக்திரசாயனம் என்னும் நூலில் விபாவம் (அவததை), அநுபாவம் (மெய்ப்பாடு) ஸ்தாயிபாவம், சஞ்சாரிபாவம் ஆகிய பக்திநிலைகளைத் தெளிவாகக் காட்டி இதனைத் தனிச்சுவையாகவே படைக்கலாம் என்று நிறுவுகிறார். இறைத் தன்மையைத் (உருவை/வடிவை) தன்னுள் ஏற்றுக் கொள்ளும் ஒருவகை ஆன்மீக உறவே பக்திக்கு அடிப்படை. இவ் உணர்வை இறைவனே தூண்டுகிறார். திருத்துழாய், சந்தனம் போன்றவை இதனை மேலும் வலுப்படுத்துகின்றன. கண், கண்ணிமை போன்றவற்றின் இயக்கம் இதனுடைய மெய்ப்பாட்டு வெளிப்பாடு; செயலற்ற நிலை தற்காலிக உணர்ச்சி; மேலே கூறிய விபாவம், அநுபாவம், சஞ்சாரி பாவம் ஆகியன இறைத்தன்மையைத் தன்னுள் பாவித்துக் கொள்ளும் மன நிலையை வளர்த்துப் பக்திச் சுவையாகப் பரிணமிக்கச் செய்கின்றன. இச் சுவை இணையற்ற இறையின்பத்தை விளக்கிறது. எல்லாம் வல்ல இறைவனின் குணநலன்களையும் அழகையும் விவரிக்கக் கேட்டு உருகி, அவனையே இடையறாது நாடும் மனநிலையே பக்தி என்று மதுசூதன சரஸ்வதி இலக்கணம் கூறுகிறார்.

ஏழாம் காண்டத்தில் தன்மகன் பிரகலாதனை அன்புடன் அழைத்து ஆசிரியர்களிடம் அவன் கற்ற பாடங்களைக் கூறுமாறு இரணியகசிபு கேட்கிறான். கல்வியின் பயன் இன்னதென்று தான் அறிந்து கொண்டதாகத் தயக்கமின்றிக் கூறிய பிரகலாதன் கூறியதாவது: மனிதனுக்குப் பாதுகாப்பாவது இறைவனிடம் அவன் வைக்கும் ஆழ்ந்த நம்பிக்கையேயாகும். மனமொழி மெய்களால் இறைவனை விரும்புதல், அவன் புகழ் கேட்டல், அவனுக்குத் தொண்டு செய்தல், அவனை வணங்குதல், வாழ்த்துதல், நேசித்தல், அறிதல், புகழ்தல், அவன் தியானத்தில் ஆழ்தல் ஆகிய ஒன்பது வகைப் பக்தி நெறிகளால் அவனுக்குத் தொண்டாற்ற வேண்டும். மேலும் அரியிடத்துப் பக்தி கொள்ளாதவர்களின் வாழ்க்கை பயனற்ற பாலையைப் போன்றது என்றும்' பக்தியில்லாத அறிஞன் அறிஞனல்ல; இருகால் விலங்கே என்றும் பிரகலாதன் கூறினான். பாகவதத்தின் சிறப்பைப் பற்றிய தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக இங்குப் பிரகலாதனைப் போதனர் பயன்படுத்துகிறாரோ என்று கருதத் தோன்றுகிறது.

பக்தர்கள் பல்வேறு மனப்பாங்குகளில் இறைவனை வழிபடுகின்றனர். அவற்றுள் சாந்தம், சேவகம் (அடிமை) தோழமை,

பாசம், இன்பம் என்பன மிக இன்றியமையாதன. இவற்றுள் எந்த ஒரு வகைப் பக்தியாலும் முக்தியடைய இயலும். நாரதர், அம்பரீடன் போன்றோர் சாந்த பக்தியினர். நாரதர் ஆசைகளை அறுத்த (மகரிஷி) பெரு முனிவர். அரசனுயிருப்பினும் யானை, குதிரை, அரசச் செல்வம், மனைவி, மக்கள், நண்பர் என்ற எவ்வகைத் தொடர்பும் இல்லாத துறவு மனப்பான்மையோடு இருந்தான் அம்பரீடன். குப்ஜை, அனுமன் ஆகியோர் தாசமார்க்க பக்தியைப் பின்பற்றியவர்கள். மதுரைத் தெருக்களில் கண்ணனைக் கண்ட குப்ஜை தன் வீட்டுக்கு வந்து தன் பணி விடைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினாள். அவனுடைய பணி விடைகளால் பெரிதும் மகிழ்ந்த கண்ணபிரான் அழகற்ற குப்ஜையைப் பேரழகுப் பெண்ணாக மாற்றியருளினான். பிரகலாதன், பீஷ்மன் போன்ற வரிடத்தில் சாந்தம், தாசம் ஆகிய இரு வகைப் பக்தி நிலைகளையும் காண்கிறோம். அருச்சுனன், குசேலன் போன்றோர் கண்ணனைத் தோழனாகப் பாவித்து ஒழுகவே இறைவனும் அவர்களுக்குத் தோழனாகவே இருந்து அவர்களை ஆட்கொண்டான்.

பாசநிலைப் பக்தியை (வாத்சல்யம்) மிகச் சிலரே கொண்டிருந்தனர். இறைவன் அதிதி-கசியப்பர், கோசலை-தசரதன், தேவகி-வாசுதேவன் ஆகியோருக்கு மகவாகத் தோன்றியருளினான். யசோதைக்கும் நந்தனுக்கும் மகவாக இறைவன் பிறக்க வில்லையாயினும் கண்ணனை அவர்கள் தான் தம் மகவாக வளர்த்தனர். கண்ணனின் திரு அவதாரத்தைப் பாடுகையில் போதனர் தேவகி வாசுதேவன் ஆகியோரின் பாசத்தை நன்கு உளங் கொள்ளுமாறு விவரித்துள்ளார். குழந்தையான கண்ணனின் திருவாயில் உலகம் முழுவதையும் கண்டு, 'இவன் குழந்தையாகக் காணப்படினும் உண்மையில் இவன் திருமாலே' என்று வியந்து போற்றிய யசோதையின் சொற்கள் இதே வகை பக்தியைக் காட்டுகின்றன. இறைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பொழியும் பக்தி நிலை பெறுதற்கரிய ஒரு பெரும்பேறாகும். அதனால்தான் இக்கதையைக் கேட்ட பரீட்சித்து அரசன், "பிரபஞ்சத் தலைவனாகிய இறைவனுக்குத் தாய்ப் பாலூட்டும் நற்பேற்றையடைய யசோதை என்ன தவஞ் செய்தாள்? கண்ணனைத் தன் மகனாக ஏற்றுப் போற்றி வளர்க்க நந்தன் செய்த தவந்தான் என்னவோ?" என்று சுக முனிவரிடம் வியந்து கூறினான்.

இறைவனை நாயகனாகக் (வாழ்க்கைத் தலைவனாக) கருதி வழிபடும் நிலையைப் பேரின்ப பக்தி என்பர். இவ்வகைப் பக்திச் சுவை

யைக் காமச் சுவையோடு கலந்து கூறுவது வழக்கம். எனவே இதனைப் பேரின்பம் (நற்காமம்) என்றும் கூறுவர். சைதன்யர் போன்றோரின் பக்தியில் இவ்வகை இன்பச் சுவை கலந்துள்ளது. புலன்கள் பற்றி எழும் சிற்றின்பம் போலன்றி இத்தகைய இன்பச் சுவை வீடு பேற்றுக்குரியதாக இருக்கும். இத்தகைய சிருங்கார பக்தி பெண்டிரை விட ஆண்களிடம் மிகவும் தூயதாகவும் புனித மாகவும் காணப்படுகிறது. பெண்கள் கொள்ளும் இவ்வகைப் பக்தியைப் புலன் பற்றிய காமம் எனத் தவறாகக் கருது வதுண்டு. பரதர் தம்முடைய நாட்டிய சாஸ்திரத்தில் காமம் நால் வகைப்படும் என்று குறிப்பிடுகிறார்: ஆண் பெண் இருவரி டைத் தோன்றும் இணைவிழைச்சு காமம் என்று கருதப்படுகிறது. இதைத் தவிர பொருட்காமம், அறக்காமம், முக்திக் காமம் எனப் பிற காமங்களும் ஆசைகளும் உள.

இத்தகைய நால்வகைக் காமங்களுள் நான்காவதாகக் கூறப்படும் முக்திக் காமமே சிறந்தது. பேரின்ப பக்திக்கு இக் காமமே அடிப்படை. உடலுக்கும் உள்ளத்துக்கும் எவ்வளவு வேறு பாடு உண்டோ அவ்வளவு வேறுபாடு பேரின்பச் சுவைக்கும் சிற்றின்பச் சுவைக்கும் உண்டு. பத்தாம் காண்டத்தில் போதனர் இப்பேரின்ப பக்தியை மிகச் சுவைபட விவரிக்கிறார். இச் சுவையினைக் கோபியர் எவ்வாறு அநுபவித்தார்களோ அவ்வாறே போதனரும் அநுபவித்திருக்கவேண்டும். இவ்வாறு தம்முடைய உள்ளத்துணர்வைப் பல இடங்களில் போதனர் வெளிப்படுத்துவதால் பத்தாம் காண்டம் முழுவதும் தன் னுணர்ச்சிப் பெருக்கால் நிறைந்துள்ளது.

பக்தியின் வளர்ச்சிப் படிகளாகப் பதினொரு நிலைகளை மது சூதன சரஸ்வதி தம்முடைய பக்தி இரசாயனத்தில் விளக்கிக் காட்டுகிறார். பாகவதத்தின் முதல் காண்டத்தில் நாரதர் விளக்கும் உபாயங்களின் அடிப்படையில் இந்த நிலைகள் பேசப் படுகின்றன. சான்றோர்க்குத் தொண்டாற்றுதல், சான்றோரின் அன்புக்கு உரியவராதல், அவருடைய நற்பண்புகளை உணர்ந்து போற்றுதல், அரியின் பெருமைகளைக் கேட்டல், பேரின்ப ஊற்று தோன்றுதல், அரியின் உருவத்தைத் தியானித்தல், பேரின்ப வளர்ச்சி, பேரின்ப வெளிப்பாடு, இறைப் பண்புகளில் மூழ்கி

யிருத்தல், அப் பண்புகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளுதல், பேரின்ப முதிர்ச்சி ஆகியன அப்பதினொரு பக்தி நிலைகளாகும். இவற்றை ஒவ்வொன்றாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றுள் இறுதி நிலைதான் பக்தியின் முதிர்ந்த நிலை. இந்நிலையில் பக்தர்கள் ஒரு கணமும் இறைவனிடமிருந்து பிரிந்திருக்கப் பொறார். இப் பிரிவுத் துன்பத்தின் போதுதான் பேரின்பக் காதல் மிக உயர்ந்த உள்ளொளி நிலையை எட்டுகிறது. இத்தகைய காதலில் ஈடுபட்ட கோபியர் முற்கூறிய பத்து நிலைகளைக் கடந்து பக்திக் காதலின் உயரிய நிலையாகிய பேரின்ப முதிர்ச்சியை அடைகின்றனர். இந்நிலையில் கண்ணனைப் பிரிந்திருத்தலால் தோன்றிய அவர்களுடைய பிரிவுத்துயரம் தாங்கொணாததாக வெளிப்படுவது இயற்கை. இவர்களுடைய பிரிவுத் துன்பத்தைப் பரமாத்மாவைப் பிரிந்து வருந்தும் ஜீவாத்மாவின் துன்பமாக உணர வேண்டும். கண்ணனைப் பிரிந்த இத்தகைய துயரத்தால் விளைந்த வருத்தத்தை ஒரு கோபியர் பெண் கீழ்வருமாறு புலம்பிக் கூறுகிறாள்.

"காட்டில் நீ அலைந்து கொண்டிருக்கையில் சுருளிருங் குழல்களால் அணி செய்யப்பெற்ற நின் திருமுகத்தை நாங்கள் மனமாரக் கண்டு களிக்கும் வாய்ப்பில்லாத போது நிமிடங்கள் ஊழிகளாக நகர்கின்றன. இரவிலும் உன் முழு அழகையும் பருகி இன்புறுதவாறு இமைகள் கண்களை மூடுகின்றன. இலக்குமி கணவனே, எங்களைக் கொடிய விதி ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறது?"

உளமாரக் கண்ணனைக் கண்டின்புற இயலாதவாறு கண்களை மறைக்கும் இமைகளைப் படைத்த விதியின் கொடுமையை அந்தக் கோபி இவ்வாறு தூற்றுகிறாள். மற்றொரு கோபி நிலமகளைப் பார்த்து, "முன்பொருகால் வராகமான திருமாலைத் தழுவும் பேறு பெறுதற்கும், பின்னர் வாமனனாக அவனால் அளக்கப்படுவதற்கும் இப்போது கண்ணனாக அவன் உன்மீது நடந்து இன்புறுதற்கும் முன் பிறவிகளில் என்ன தவங்களைச் செய்தாய்" என்று பொறாமையுடன் கேட்கிறாள். கண்ணனையும் பலராமனையும் அழிக்கும் நோக்கத்துடன் கண்ணன் மீது பற்றுடைய அக்ரூரனை அனுப்பித் தனுர்யாகத்திற்கு அழைக்குமாறு வஞ்சனையாக அனுப்புகிறான் கம்சன். அப்போது கோபியர் மிகவும் புலம்பிக் கீழ்வருமாறு கூறுகின்றனர்.

"அக்ரூரன் என்று பெயர் வைத்துக் கொண்டு கண்ணனை நம்மிடம் இருந்து பிரித்துக் கொண்டு போக வந்திருக்கும் இந்த அக்ரூரன் எவ்வளவு குரூரமானவன் (கொடியவன்)? இவன்உண்மை

யிலேயே அக்ரூரனுக (கொடுமையற்றவனுக) இருந்தால் தூய உள்ளத்தோடு கண்ணனை நம்பால் விட்டுப் விட்டுப் போக வேண்டும்.

கம்சனைக் கொன்ற பின்னர், கண்ணன் கோகுலத்துக்குச் சென்று தன் பெற்ருேர், கோபியர் ஆகியோரின் நலமறிநதுவர உத்தாவனை அனுப்புகிருன். துயரில் மூழ்கியிருந்த கோபியர் உத்தாவனிடம் கூறும் மொழிகள் அவர்கள் கண்ணன்பால் கொண்டிருந்த தூய அன்பினையும் அவன் பிரிவால் அவர்கள் படும் துன்ப மிகுதியையும் நன்கு உணர்த்துகின்றன. திருமாலின் வடிவான கண்ணனை நினைந்து தியானிப்பதுதான் கோபியரின் பேரின்பக் காதல். இதன் பெருமையைக் கண்ணன் உத்தாவன் வழியாக அனுப்பும் கீழ்வரும் செய்தியால் நன்கறியலாம்:

''நீங்கள் எப்போதும் என்னை நினைந்த வண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் உங்களைப் பிரிந்து வந்துள்ளேன். எனவே என் பிரிவால் துன்புற வேண்டாம். என்னை ஆழ்ந்து தியாணிக்கும் நீங்கள் விரைவில் என்னை அடைவீர்.''

பாகவதத்தில் உள்ள கண்ணன்-கோபியர் விளையாட்டுக்களைப் படிக்கும் போது மன்மத பாணத்தால் துயருறுதல், புணர்தல் (கூடி வாழ்தல்), தழுவுதல், முத்தமிடல் போன்ற செய்திகளையும் நாம் காண்கின்ருேம். இவற்ருல் உடல் பற்றிய இழிந்த ஆசை இங்குப் பேரின்பக் காதலாகப் பேசப்படுகிறது என்ற மயக்கம் தோன்றக் கூடும். மேற்போக்காகப் பார்த்தால் இவ்வாறுதான் புலப்படுகிறது. ஆழ்த்து நோக்கினுலன்றி இக்காதலின் தூய்மை புலனுகாது. கோபியர் கண்ணன் திருவடிகளை நினைந்து உருகுவதாக அமைந்த கீழ்வரும் பாடற் கருத்தால் அவர்களுடைய அன்பின் உண்மைத் தன்மை புலப்படும்.

சனகன் போன்ருேர் தம் யோகத்திற் கண்ட திருவடிகள் இவைதாம்: வேதமகளின் தலையை அணிபெறச் செய்வனவும் இவைதாம். பாற்கடற் பாவையான இலக்குமியின் புகலிடமும் இவையே. காத்தற் கடவுளாம் தேவியின் உள்ளத்தைக் கவர்வனவும் இவையே. பிரம்மன், சிவன் போன்ற கடவுளர்கள் தம் தலைமீது இத்திருவடிப் பொடியையே தாங்கியுள்ளனர். கண்ணனைக் காணுது அவனுடைய அடிச்சுவடுகளைக் கண்ட கோபியர் இவ்வாறு கூறி வருந்தினர்.

இப் பாடலின் ஒவ்வொரு வரியும் கோபியர் கண்ணன்மீது கொண்ட காதல் உடலைப் பற்றியது அன்று, உயர்ந்த தத்து

வத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதை விளக்குகிறது. தம்முள் முரண்பட்ட சுவைகளாகிய பக்தியையும் காமத்தையும் தக்கவாறு கலந்து பேரின்பச் சுவையைப் படைத்திருப்பதும், அதனால் பத்தாம் காண்டம் முழுவதையும் ஒரு பெருஞ் சுவைக் கடலாக மாற்றியிருப்பதும் போதனாரின் கற்பனைத் திறத்தையும் கவிதைத் திறனையும் விளங்கக் காட்டுகின்றன.

''எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு என்னையே அடைக்கலமாக நாடு'' என்று சரணாகதியின் இரகசியத்தைக் கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுகிறான். இப்பகுதி பகவத்கீதையின் இறுதியில் வருகிறது. எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்துத் தன்னை முழுவதுமாக அவனுக்கு ஒப்படைத்தலைச் சரணாகதி என்பர். அகப்புறப் பற்றுக்களை அறுத்தலை இது குறிக்கிறது. பிரகலாதன், துருவன், கஜேந்திரன், அம்பரீடன், அக்ரூரன் போன்றோரிடம் இத் தத்துவத்தின் பல்வேறு நிலைகளைக் காண்கிறோம். அடைக்கலம் அடைந்தோரை இறைவன் காப்பாற்றுவான் என்பதில் ஐயமில்லை. உதவிக்கு அழைத்ததும் கஜேந்திரனைத் திருமால் காப்பாற்றுவதும் சிறந்த பக்தனாயிருந்தும் பிரகலாதனுக்கு அத்தனை துன்பங்கள் ஏற்பட்டதும ஏன் என்று சிலர் வினவலாம். கஜேந்திரன் திருமாலைக் குறித்து வழிபட்டது உண்மைதான்; எனினும் இறைவன் உள்ளானா இல்லையா என்ற ஐயம் அதனுள்ளத்தே இருந்தது என்பதை, ''உளன் உளன் என்று பன்முறை கூறப்படும் அவன் உண்மையிலேயே இருக்கிறானா இல்லையா?'' ''ஓ கருணைப் பெருங்கடலே, உன்னைத் தொழுபவர்க்கெல்லாம் அருள்கிறாய் என்னும் கூற்றை நான் ஐயுறுகிறேன்'' என்னும் அதன் கூற்றால் உணரலாம். தொழுவோர் உள்ளத்தே இத்தகைய ஐயம் இருக்கும் வரையில் அவர்களைக் காக்க கடவுள் முன்வருவதில்லை. இத்தகைய ஐயத்தை ஒழித்துவிட்டு, ''உன்னையன்றி வேறுருவரையும் அறியேன்; இவ் ஏழை உயிரைக் காப்பாற்றுவாயாக'' என்று கஜேந்திரன் ஆழ்ந்த நம்பிக்கையுடன் அரற்றியதும் இறைவன் ஓடோடியும் வந்து அதனைக் காத்தனன். எனவே அடைக்கலத்தின் அடிப்படை ஆழ்ந்த நம்பிக்கைதான் என்று விளங்குகிறது. பிரகலாதன் தொடக்கத்தில் இருந்தே அத்தகைய நம்பிக்கையைப் பெற்றிருந்தான். திருமால் எல்லாமாய் எங்கும் நிறைந்தவர் என்பதை அவன் உறுதியாக நம்பினான். எனினும் அவனுடைய ப்ராப்த வினை (தொடக்கவினை)யின் பயனாக பல்வேறு இன்னல்களைத் தன் தந்தையின்வழி அநுபவித்தான். அவ்வினை அறுந்த அக்கணமே இறைவன் அவனுக்குத் தோன்றியருளினான்.

சாந்தம் முதலிய மேற்கூறிய நிலைகளில் நின்று அவனை வழிபட்டவர்கள் மட்டுமின்றி அவனை விரும்பாது வெறுப்பு, அச்சம் ஆகிய குணங்களால் வெறுத்து எப்போதும் பகைவர்களாகத் தொடர்புகொண்டவர்களும் முக்தியடைந்துள்ளனர். இதன் தொடர்பாகத தர்மஜனுக்கு நாரதர் கூறியதாவது.

''தம்முடைய பேரின்ப தாகத்தால் கோபியரும், அச்சத்தால் கம்சனும், நெடும் பகையால் சிசுபாலன் முதலான அரசர்களும், உறவுமுறையால் வ்ருஷ்ணி குலத்தோரும் (கோவலர்), அன்பினால் நீயும், பக்தியால் நாங்களும் இறைவனைக் கண்டு அடையலாம். ஆதலின் அரசனே, எவ்வகையிலாவது இடையறாது இறைவனை எண்ணிக்கொண்டிருந்தால் உறுதியாக அவனை அடையலாம்.''

கோபியர் கொண்ட பேரின்பக் காதலின் உள்ளார்ந்த இயல்பு பற்றி முன்னர்க் கூறப்பட்டது. அச்சத்தால் மீதூரப்பட்ட கம்சன் எப்போதும் அரியையே நினைத்திருந்தான். பகையின் காரணமாகச் சிசுபாலன் முதலான அரசர்கள் கண்ணனையே நினைத்தவண்ணம் இருந்தனர். கோவலர் உறவு மனப்பான்மையாலும், தர்மஜன் அன்புள்ளத்தாலும், நாரதர் பக்தியாலும் இடையறாது கண்ணனை நினைந்து வீடுபேறு அடைந்தனர். நட்பு, பகை, பக்தி எத்தகைய நிலையாயினும் உளமார அரியை நினைப்பதால் முக்தியடையலாம் என்பதில் யாதொரு ஐயமுமில்லை

இரணியகசிபு முதலானோர் இறைவனோடு பகைமை பூண்டு இருந்தாலும் அவர்கள் முற்றிலும் கடவுளை நம்பாதவர்களாக இல்லை. அவர்கள் கடுந்தவம் இயற்றினர். ஒருவன் இறையுண்மையை உணர்ந்திருப்பானாயின் அவனை அறவோனாகவே கருத வேண்டும் என்று புனித நூல்கள் கூறுகின்றன. ''இன்று என்னோடு கலந்து பொருததால் இவன் உடலால் புனிதமடைகிறான்; புதுச் சக்தி பெறுகிறான்; பாவம் தொலைந்து மேலுலகு செல்கிறான்'' என்று திருமாலே இரணியகசிபுவைப் பற்றிக் கூறுகிறார். வேனன் என்னும் அரசன் இறையுண்மையையே நம்ப மறுத்தான். இந்தக் கடவுள் மறுப்புக் கொள்கையே அவனுக்கு இறுதியைத் தந்தது.

இராமாநுசர் பரப்பிய வைணவத்திற்கும் பாகவதம் கூறும் வைணவத்திற்கும் வேறுபாடு இல்லை. இரண்டுமே ''பாஞ்சராத் ராகமத்தின் கொள்கைகளைப் பின்பற்றி எழுந்தவை. அரியின் திருநாமத்தை ஒருகணம் திரும்பத் திரும்பக் கூறுவதால் மட்டுமே. வீடுபேறு அடையலாம் என்று சுகமுனிவர் பரீட்சித்திடம் கூறுகிறார். இறக்குந் தருணத்தில் அரியின் பெயரைக் கூறுவதால்

உடனே வீடுபேறு கிடைக்கும் என்று அசாமிளரின் கதை அறிவுறுத்துகிறது. வைணவத்தின்படி அரியின் நாமத்தைப் பன்முறை கூறுதல் முத்தியடைவதற்கான முக்கியமான செயலாகக் கருதப்படுகிறது. கொல்லாமை, கடமையைச் செய்தல் போன்றன அதனையடுத்த நிலையில் இன்றியமையாதன. வாசுதேவனிடத்துக் கொள்ளும் பக்தியால் பற்றின்மையையும், மெய்யுணர்வையும் ஒருவன் பெறலாகும். பக்தியைப் போன்று அறநெறியோ, இறைநெறியோ, சாந்த நெறியோகூட அரியை மகிழ்விக்காது என்று பிரகலாதன் கூறுகிறான். வாசுதேவனிடத்து ஆழ்ந்த பக்தி கொள்ளுதல்தான் பாகவத வைணவர்களின் அடிப்படைச் சிறப்பாகும். ருக்குமணியிடத்திலும் கோபியரிடத்திலும் ஆசையேக்கம் ஆழ்ந்த தியானம் ஆகிய இரு பண்புக் கூறுகளைக் காண்கிறோம். தங்களுடைய புலன்களையும் செயல்களையும் ஒருமுகப்படுத்தி வாசுதேவனுக்கு அர்ப்பணித்தமையால் அவர்களால் முத்தி பெறமுடிந்தது. இவ்வாறு பாகவதத்தின் பல்வேறு கதைகளிலும் 'பாகவத வைணவ'த்தின் சிறப்புக் கூறுகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பு அம்சங்களைத்தான் பிற்காலத்தே இராமாநுசர் போதித்துப் பரப்பினார்.

கண்ணன் தேவகிக்கும் வசுதேவனுக்கும் மகனாய்ப் பிறந்தான். வ்ருஷ்ணி குடியின் அணியாக விளங்கினான். ''கோவலரிடையே நான் வாசுதேவனாக இருக்கிறேன்'' என்று கண்ணன் கீதையில் கூறுகிறான். பாணினி இலக்கணத்தில் மட்டுமின்றி மகாபாரதம் இராமாயணம் ஆகியவற்றிலும் 'வாசுதேவன்' என்னும் சொல் காணப்படுகிறது. எனவே வாசுதேவ வழிபாட்டு மரபு மிகவும் தொன்மையானது என்று நாம் துணியலாம். 'வஸ்' என்னும் வேரடியாகப் பிறந்தது இச் சொல். 'வஸ்' என்பது 'ஒளிர்தல்' எனவும், 'ஒளி மிக்கவன்' எனவும் பொருள்படும். எங்கும் ஒளிர்பவன் வாசுதேவன். 'வஸ்', 'திவ்' என்னும் வேர்ச் சொற்கள் ஒரே பொருளன. விளையாடல், வெல்லுதல், செயற்படல், உருகுதல், புகழ்தல், மகிழ்ச்சியில் திளைத்தல், மயக்கல், உறங்கல், கனவு காணுதல், ஒளிர்தல் என்னும் பல்வேறு பொருள்களையும் 'திவ்' என்னும் வேர் உணர்த்தும். எனவே இவ்விரு வேர்ச் சொற்களின் அடியாகப் பிறந்த 'வாசுதேவன்' என்னும் பெயர் எங்கும் நிறைந்திருப்பதும், 'திவ்' என்னும் வேர்ச்சொல் குறிக்கும் எல்லாத் தொழில்களையும் இயற்றுவதும் ஆகிய பரம்பொருளைக் குறிக்கிறது. வாசுதேவன், பாஞ்சராத்ராகமம் என்பன ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பின. வாசுதேவ தத்துவத்தில் இருந்துதான் இந்த ஆகமம் தோன்றியது.

பாஞ்சராத்ராகமத்தைப் போலவே பாகவதமும் வாசுதேவ வணக்கத்துக்கே முதன்மை யளிக்கிறது. மேலும் வாசுதேவ பதத்தை அன்புத் தியானத்தால்தான் பெற முடியும் என்றும், வாசுதேவனின் இறைவடிவை வழிபடுதலே முத்தியை விடச் சிறந்தது என்றும் தங்களுடைய யோக ஆற்றலால் இறைவனின், அவதாரங்களைத் தம் மனத்துள்ளே காணும் திருமால் அன்பர்கள் முத்தி வேண்டுமென்று விரும்ப மாட்டார்கள் என்றும், அவனுடைய இறை வடிவைக் கண்டு மகிழ்ந்து அவனை மட்டுமே புகழ்ந்து போற்றுவர் என்றும் பாகவதம் கூறுகிறது. தாம் விரும்பும் போது பிரபஞ்சத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்தலுமாகிய ஆற்றலுடைய வாசுதேவர் நால்வகை உருவங்களை மேற்கொள்கிறார். இவ் வடிவங்கள் வ்யூகங்கள் எனப்படும். இவை வாசுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ன,அநிருத்த வ்யூகங்கள் எனப் பெயர் பெறும். அவதாரங்கட்கும் வ்யூகங்கட்கும் இடையே சிறு வேறுபாடு உண்டு. இறைவன் விரும்பி மேற்கொள்ளும் பிறப்புகள் அவதாரங்கள் எனப்படும். பரம் பொருள் தன்னுடைய திருவருள் விருப்பால்தான் மச்சமாகவும், கூர்மமாகவும் பிறப்பெடுக்கிறார். மாறாகப் பரம்பொருள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் வெளிப்படும் போது அவ்வடிவம் வ்யூகம் எனப்படுகிறது. வ்யூகங்கள் பரம் பொருளின் வெளிப்பாடுகள்; வாசுதேவ வ்யூகத்தில் இருந்து அநிருத்த வ்யூகம் வரை அவற்றின் வளர்ச்சி நிலைகளை அவைகள் குறிக்கின்றன. தம்முள்ளும் தன்மை, வடிவம், பொருள் ஆகியவற்றில் இவ் யூகங்கள் வேறுபடுகின்றன. சூக்குமம் எனப்படும் பரவாசுதேவனிலிருந்தே இந் நால்வகை வ்யூகங்களும் தோன்றுகின்றன. விபாவங்கள் எனப்படும் அவதாரங்களை ஆழ்ந்த நம்பிக்கையுடன் பக்தி மேலிட்டு வணங்குவதால் பக்தன் ஆன்ம முதிர்ச்சியடைகிறான். பின்னர் வழிபாட்டாலும் தியானத்தாலும் வ்யூகங்களைப் பேணியொழுகும் நிலையை எய்தி முடிவில் சூக்கும நிலையை அடைவான் என்று பாஞ்சராத்ராகமம் கூறுகிறது. ''அரியை வழிபடும் நடைமுறைகள் எல்லாம் பஞ்சராத்ர ஞானியால் விதிக்கப்பட்டுள்ளன'' என்று கூறுவதால் பரம்பொருள் வழிபாட்டை இம்முறைகளால்தான் இயற்ற வேண்டும் என்று போதனரும் நம்பியதாகத் தெரிகிறது.

அவதாரம் என்னும் சொல் கீழே இறங்குதல் என்னும் பொருளது. நல்லோர் நலிவெய்தித் தீயோர் வெற்றியுறும் போது அறத்தை நிலைநாட்டிப் பூபாரம் தீர்ப்பதற்காகப் பரம் பொருள் தம் இறவாத இன்ப நிலையில் இருந்து இறங்கி நிலவுலகில் பிறக்

கிறார். பூபாரம் தீர்த்தலாவது தீயோரையும் மானுட குலத்துக்குத் தீங்கிழைப்போரையும் அழித்து விடுதல். தன்னலமற்ற அருளை விரும்பிப் பரம் பொருள் இவ்வாறு செய்கிறார். பல்பிணிச் சில் வாழ்நாள சிற்றறிவினராய கலியுக மக்கள் எத்தகைய அறமும் செய்யும் ஆற்றலற்றவராய் உள்ளனர். மானுடனாக அவதரித்த இறைவனைக் கேட்டும், வணங்கியும், புகழ்ந்தும், தியானித்தும், புகலிடமாகப் பெற்றும் மனிதர்கள் உய்யும் பொருட்டுப் பரம் பொருளாம் இறைவன் தம் இறவாப் பேரொளி நிலையிலிருந்து இறங்கி நிலையாப் புகழ் தரும் நிலைக்கு வருகிறார். இந்த நிலையற்ற புகழ் தரும் பிறப்பே அவதாரம் எனப்படும். பாகவதம் இத்தகைய அவதாரங்களைப் பற்றிப் பேசுகிறது. பாகவதத்தில் இருந்து ''எல்லாமாய் இருப்பதுவும் இல்லாததுமாய பொருளை, மனக் கவலைகளை மாற்றி வாழ்க்கையின் குறிக்கோளாகவும், பேரின்பத் தின் ஊற்றாகவும் உள்ள பொருளை'' ஒருவன் அறிய முடியும் என்று போதனரே கூறியுள்ளார். அப்பொருளை அறிவதற்குப் பக்தியே சிறந்த வழி:

ஓ அறிஞனே, 'தொல்லை இரும் பிறவிகள் பலவற்றிலும் இழைத்துச் சேர்த்துக் கொண்ட பாவங்களாகிய காட்டுத் தீயை அணைப்பதற்குக் கோவிந்தக் கடவுளின் கதையாம் அமுதமழை பெருக்கெடுத்துப் பெய்தாலன்றி வேறொரு வழியும் உள்ளதோ?

இயல் ஏழு

போதனரின் கவிதைச் சிறப்பு

கவிஞனைப் பொதுவாகப் படைப்புக் கடவுளோடு ஒப்பிட்டுக் கூறுவது உண்டு. ''முடிவில்லாத கவிதையுலகில் கவிஞனே படைப்பாளி'' என்ற கூற்றின் அடிப்படையில் இவ் ஒப்புமை கூறப்படுகிறது. கடவுள் ஐம்பூதங்களைக் கொண்டு இவ்வுலகைப் படைப்பதைப் போன்று கவிஞனும் வருணனை, பாத்திரப் படைப்பு, உணர்ச்சிகள், கருத்துகள், சொற்கள் ஆகிய ஐந்து கூறுகளைக் கொண்டு கவிதையுலகைப் படைக்கிருன். இப் படைப்பிற்குச் சிந்தனைத் திறம், நூலறிவு, பயன்பாட்டாற்றல் ஆகிய மூன்றும் இன்றியமையாதன என்று கவியிலக்கணிகள் கூறுகின்றனர். இம் மூன்றும் தக்க அளவில் பெருங்கவிஞர்கள் எல்லோரிடமும் அமைந்துள்ளன. போதனரிடமும் இவை இல்லாமல் இல்லை. எல்லாக் கவிஞர்களும் எல்லாப் பொருள் பற்றியும் அழகாகவும் சிறப்பாகவும் கவிதை படைக்க முடியும் என்று கூற முடியாது. கவிஞனின் மனம் கவிதைப் பொருளில் ஒன்றிச் செயற்படும் போது மிக வளமான கற்பனை தோன்றுகிறது. போதனர் இயல்பாகவே சிறந்த பக்தர். பாகவதமோ ஒரு பக்திக் கடல். இவ்வாறு கவிஞனின் உள்ள இயற்கையும் பாடுபொருளின் தன்மையும் ஒன்றுபட்ட காரணத்தால் பாகவதம் இணையற்ற இன்பமும் சுவையும் உடையதாக அமைந்துள்ளது. பக்திக் காவியமான பாகவதத்தைச் சிறந்த பக்தராகிய போதனர் படைக்க நேர்ந்தது ஆந்திர மக்களின் நற்பேறேயாகும்.

பாகவதத்தை இயற்றுவதற்கு முன்னர்ப் போதனர் வீரபத்ர விஜயத்தையும் போகினி தண்டகத்தையும் இயற்றினர். எனவே பாகவதத்தை இயற்றும் போது கவிதைக் கலையில் கைவந்தவராக அவர் விளங்கினர். முக்கவிஞர்களின் பாகவதத்தையும், எர்ரனவின் நரசிம்ம புராணத்தையும், நாசன சோமரின் உத்தர அரிவம்சத்தையும், சைவப் பனுவல்கள் பலவற்றையும் போதனர் பன்முறை பயின்றிருக்க வேண்டும். பாகவதத்தின் தொடக்கத்தில் வியாசர், வால்மீகி, பாசர், காளிதாசர், பாரவி, மாகர் போன்ற வடமொழிக் கவிஞர்களைப் போதனர் புகழ்ந்து போற்றுகிறார். அவர்களுடைய நூல்களையும் அவர் ஆர்வத்துடன் கற்றிருக்கக் கூடும். அவருடைய பாகவதத்தின் பல பகுதிகளில் இப்பெருங் கவிஞர்

களின் செல்வாக்கு நன்கு புலப்படுகிறது. தன்முயற்சியோடு இறையருளையும் போதனர் குறைவின்றிப் பெற்றிருந்தார். இராமபத்ரர் தான் தம்மைக் கவி பாடுமாறு அருள் செய்தார் என்று போதனரே குறிப்பிடுகிறார். எனவே அவருடைய பாகவதம் முழுவதுமே இறை அருளால் பாடப்பெற்றதுபோல் காணப்படுகிறது.

பாகவதத்தைப் படிக்கும்போது ஒருவருடைய உள்ளத்தைக் கவரும் முதற்சிறப்பு அதனுடைய இடையறாத ஆற்றொழுக்கான நடைதான். தூய்மையாலும் விரைவாலும் அது கங்கையாற்றின் போக்கை ஒத்துள்ளது. அவருடைய ஒவ்வொரு கவிதையும் இனிது விரைந்து இயங்குகிறது. இந்நூலில் உள்ள எல்லாப் பாடல்களும் தங்குதடையின்றிச் செல்லும் நடையின. கருத்துகளுக்காகவோ, எதுகை மோனை முதலான அலங்காரங்கட்காகவோ அல்லற்படாமல் இறையருளின் துணையால் இயற்றியமையே இதற்குக் காரணம். அவையெல்லாம் தாமாகவே வந்து அவருடைய கவிதையில் இடம் பெற்று அதனை இயற்கை நலம் சான்ற இலக்கியமாக்கியுள்ளன. இந்தப் பாகவதத்தை மட்டுமே பயின்று கவிஞரானவர் பலர் உளர். பக்திச் சுவையோடு இனிய ஓசை நயமும் நிறைந்திருப்பதும் இதனைப் பலர் எளிமையாக மனனம் செய்வதற்கு உரிய ஒரு காரணமாகும்.

வருணனை

போதனரின் வருணனைகள் மிக இயற்கையாகவும் இனிமையாகவும் அமைந்துள்ளன. தம்முடைய விரிவான வருணனையால் கற்போர் கண்முன்னர்க் காட்சிகளே உருவெடுத்து நிற்பன போல் படைப்பதில் இவர் மிகவும் வல்லவர். எட்டாம் காண்டத்தில் வரும் வாமனரின் விசுவரூபக் காட்சியை விவரிக்கும் இரண்டு பாடல்களும்வாமனரின் உருவம்சிறிதுசிறிதாக வளர்ந்து பிரபஞ்சம் முழுவதும் பரந்து நிற்கும் உணர்ச்சியைக் கற்போர் உள்ளத்தே தோற்றுவிக்கின்றன. ருக்குமணி திருமணப் பகுதியில் ருக்குமணியின் இளமை அழகை வருணிக்கும் திறம் போற்றுதற்குரியது. திருமால் கஜேந்திரனைக் காப்பாற்றச் செல்லுமிடத்து மேகத்தைத் தொடர்ந்து செல்லும் மின்னலைப் போல இலக்குமி திருமாலைப் பின்தொடர்ந்து செல்லும் காட்சியை நேரிற்கண்டதைப் போல் வருணிக்கிறார். யானைக்கும் முதலைக்கும் நடந்த போரை விவரிக்கையில் அவை ஒன்றையொன்று வெல்ல முயலும் காட்சியைப் படம் பிடித்ததுபோல் காட்டுகிறார்.

தம்முடைய அம்பு மழையைப் பொருட்படுத்தாது கண்ணன் தம்மைத் தாக்கிப் போர் செய்வதை வீடுமர் முதல்

காண்டத்தில் விவரிக்கிருர். கற்போர் கண் முன்னுல் போர் நடப்பது போலவே இவ் வருணனை அமைந்துள்ளது. பத்தாம் காண்டத்தில் வரும் நரகாசுர-சத்யபாமா போரில், சத்தியபாமா வீரமும் சிருங்காரமும் மாறி மாறித் தோன்றுமாறு போரிட்ட பகுதியை வருணிக்கையில் போதனர் தம்மையே வென்று விடு கிருர். குசேலோபாக்கியானத்தில் இடையருது ஒழுகும் பெரு மழையை வருணிக்கும் போது படிப்போர் தாமே மழையில் நனைவது போன்ற உணர்வைப் பெறுகின்றனர். கண்ணனின் குறும்புச் செயல்களைக் கோபியர் வந்து யசோதையிடம் முறை யிடும் பகுதி மிகக் கவர்ச்சியாகவும் சுவையாகவும் படைக்கப் பட்டுள்ளது. இதே காண்டத்தில் கோபியரும் கோபாலரும் தம்முடைய அழகான முல்லை நிலப் பகுதியில் நடத்தும் கர வற்ற மகிழ்ச்சியான வாழ்க்கையை இயற்கை நலம் சிறக்க வருணித்திருக்கும் பாங்கு மிகவும் சுவையானது.

இயற்கையைக் கூர்ந்து நோக்கி அறிவதில் போதனர் மிகவும் வல்லவர் என்பதைக் கோபியரின் ஆடை கவரும் நிகழ்ச்சிக்கு முன்னர் நிகழும் கூதிர், இலைபுதிர் பருவங்களை வருணிப்பதாலும் கம்சனைக் கொல்வதற்காகப் பலராமனும் கண்ணனும் மதுரை செல்லும் போது திங்களின் மறைவு, ஞாயிற்றின்தோற்றம் ஆகிய காட்சிகளை வருணிப்பதாலும் நன்கு உணரலாம். மரபுவழிப் பட்டனவாயினும் மிக்க ஒண்மையும் மெய்ம்மையத் தன்மையும் உடையனவாதலின் இவ்வருணனைகள் மிகவும் சுவையாக அமைந் துள்ளன. நீண்ட உரைநடை வருணனைகளையும் போதனர் தம் நூலின் இடையிடையே சேர்த்துள்ளார். அவற்றுள் பாகவதத் தொடக்கத்தில் வரும் நைமிசாரண்ய வருணனையும், வாமனுவ தாரத்தில் வரும் மேலுலக வருணனையும், ஒன்பதாம் காண்டத் தில் வரும் கங்கை பூமிக்கு வந்ததன் வருணனையும், பத்தாம் காண்டத்தில் வரும் புனல் விளையாடடு வருணனையும் மிகவும் சிறப்புடையன. இவ்வருணனைகளால் போதனரின் உலக அறிவும் நூற்புலமையும் நன்கு புலனுகின்றன. சிலேடை, வேற்றுமை முதலிய பொருளணிகள் மிகுந்துள்ள இப்பகுதிகள் நமக்குப் பாணரின் காதம்பரியில் உள்ள இத்தகைய இடங்களை நினைவு படுத்துகின்றன. இரண்டாம் மூன்றும் காண்டங்களில் வரும் தத்துவக் கருத்துக்களை விளக்கிக் கூறுமிடத்து இவ்வாறு நீண்ட உரைநடைப் பகுதிகளைக் கையாளுகிருர். இவ் விளக்கத்திற்கு வேண்டிய செய்திகளை மூல நூலிலிருந்தும் ஸ்ரீதரரின் உரையிலிருந்தும் போதனர் எடுத்தாளுகிருர்.

சுவைகள்

சுவைகளைப் படைப்பதில் போதனர் மிகவும் கைதேர்ந்தவராக உள்ளார். தாமே சிறந்த பக்தராதலின் பக்திச் சுவையைப் படைக்கும் போது அவ் உணர்ச்சி மேலிட்டவராகக் காணப்படுகிறார். கஜேந்திரன் முக்தி, பிரகலாதன் சரித்திரம், ருக்குமணி திருமணம், அம்பரீடர் சரித்திரம் போன்றவற்றை இதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். பாகவதத்தில் பக்தர்கள் இறைவனைப் புகழ்ந்து பாடும் இடங்களில் எல்லாம் பெரும்பாலும் சாந்தபக்தியே காணப்படுகிறது. வீடுமன், குந்தி, கஜேந்திரன் ஆகியோரின் தோத்திரங்களால் இக் கருத்து நன்கு தெளிவாகிறது. பாகவதம் முழுவதிலும் இத்தகைய பக்திச் சுவையை விளக்கும் நிகழ்ச்சிகளே நிறைந்துள்ளன. வேறு பிற சுவைகளும் பாகவதத்தில் இடம் பெற்றுள்ளன. போதனர் அவற்றையும் நன்கு படைத்துள்ளார். ஒன்றுக் கொன்று முரண்பட்ட சுவைகளாகிய பக்தி, காதல் ஆகிய இரண்டையும் கண்ணன் கோபியர் ஆகியோரின் விளையாட்டுக்களிலும் வீரம், இன்பம் ஆகிய இரண்டையும் கண்ணன் நினைவிழந்த நிலையில் சத்யபாமா நரகாசுரனுடன் போரிடும் காட்சியிலும் அமைத்துள்ள திறம் மிகவும் வியத்தற்குரியது.

முதல் காண்டத்தில் கண்ணன் இறந்து விட்டதாக அர்ச்சுனன் தருமரிடம் கூறும் பகுதியிலும் தோல்வியுற்ற அசுவத்தாமனை விளித்துப் பேசும் பகுதியிலும் இரக்கச் சுவை அமைந்துள்ளது. நரசிம்மம் இரணிய கசிபுவைக் கொல்லுமிடத்தில் கோபம், வியப்பு ஆகிய சுவைகளும் திருமால், கம்சன், நரகன், பாணன், இரணிய கசிபு முதலியோரைக் கொல்லுமிடத்தில் வீரம், கோபம் ஆகிய சுவைகளும் நிறைந்துள்ளன. கண்ணன்-ருக்குமணி, அநிருத்தன்-உஷா ஆகியோரின் காதற் கதைகளில் பக்தியுடன் கூடிய காதற்சுவை நன்கு விளக்கம் பெருகிறது. கண்ணன் ருக்மியை வென்று அவமானப்படுத்துமிடத்து நகைச்சுவையும் வெறுப்புச் சுவையும் வெளிப்படுகின்றன. இவ்வாறு போதனர் விபாவம், அநுபவம், சஞ்சாரிபாவம் ஆகிய நிலைகளை வருணிக்குமிடங்களில் பற்பல சுவைகளைப் படைத்துப் படிப்போரைப் பேரின்ப நிலைக்குக் கொண்டு செல்கிறார்.

பாத்திரப் படைப்பு

பல்வேறு பாத்திரங்களைப் படைப்பதிலும் போதனர் தம் திறனை வெளிப்படுத்தியுள்ளார். படிப்போர் உள்ளத்தே நன்கு பதியுமாறு மிகத் தெளிவாகப் பாத்திரங்களைப் படைத்துள்ளார்

போதனர். தன் பக்தர்களைக் காப்பாற்றும் அன்பும் ஆர்வமும் உடையவராகக் கண்ணபிரானைப் பலவிடங்களில் போதனர் காட்டியுள்ளார். கண்ணனின் முடிவிலாற்றலைப் படைத்துக் காட்டுவதைப் போலவே அவனுடைய பிள்ளைக் குறும்புகளையும் மிக்க ஆர்வத்துடன் படைத்துள்ளார். அருச்சுனன் அசுவத்தாமனைக் கொடுமைப் படுத்தியபோது திரௌபதி காட்டிய தாய்ப் பாசமும், பெருந்தன்மையும் மிகச் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன. கண்ணனின் அருட் பெருமையைப் புகழ்ந்து கூறும்போது வீடுமனின் பேரறிவும் பெரும் பக்தியும் வெளிப்படுமாறு செய்துள்ளார் போதனர். திருமாலன்பின் திருவுருவங்களாகத் துருவன் பிரகலாதன், அம்பரீடன், கசேந்திரன் ஆகியோர் விளங்குகின்றனர். அவர்களுடைய இயல்புகளையும், பண்பு நலன்களையும் நன்கு தெளிவாகக் காட்டியுள்ளார் கவிஞர். துருவனின் தன்மதிப்பையும் பிரகலாதலின் பெருந்தன்மையையும், அம்பரீடனின் தன்முனைப்பு அழிவையும், கசேந்திரனின் துயரத்தையும் போதனர் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். கோபியரின் இறைக்காதலைப் போதனர் படைத்துக் காட்டியிருக்கும் பாங்கு அவருக்கே உரியது. மேலும் குசேலரின் தன்னலமற்ற பெருந்தன்மை, துருவாசரின் இறுமாப்பு, சிசுபாலனின் வலியத்தாக்கும் முரட்டுத்தனம், ருக்மியின் பிடிவாதம், நந்தன், யசோதை, தேவகி, வசுதேவன் ஆகியோரின் இளகிய அன்பு, புலிச்சக்ரவர்த்தியின் வீரமும், வள்ளன்மையும், சுக்ரனின் விசுவாசம், கம்சனின் கொடுமையும் கோழைத் தன்மையும், அதிதியின் தாய்ப்பாசம், சத்ரசீத்தின் பேராசை, உத்தாவன், அக்ரூரன் ஆகியோரின் ஒப்பற்ற பக்தி, ரந்திதேவனின் தியாகம் ஆகிய பல்வேறு பண்பு நிலைகளைப் போதனர் மிகத் தெளிவாகப் படைத்துக் காட்டியுள்ளார். தான் பெற்ற பெருவரங்களால் செருக்கிப் பிரபஞ்சம் முழுவதற்கும் தானே தலைவன் எனத் தருக்கித் தன் மகனைச் சொல்லொணு அளவுக்குத் துன்புறுத்தும் கொடியவனுக இரணியகசிபு காட்டப்படுகிறுன். எனினும் இத்தகையவனே தன்னுடைய சகோதரனிடத்துப் பேரன்பு உடையவனுகவும், மிக உயர்ந்த மெய்யுணர்வு மனப்பான்மை உடையவனுகவும் படைக்கப்பட்டுள்ளான். இவ்வாறு பாகவதப் பாத்திரங்களை—தலைமைப் பாத்திரங்களாயினும் துணைப் பாத்திரங்களாயினும்—மிக்க கவனத்தோடும் திறமையோடும் போதனர் படைத்துக் காட்டியுள்ளார்.

கருத்துக் கருவூலம்

வடமொழிப் பாகவதத்தின்மொழியாக்கமாதலால் மூலத்தின் கண் உள்ள பல்வேறு கருத்துகள் தெலுங்கு பாகவதத்திலும் காணப்படுகின்றன. எனினும் இது வெறும் கவனமற்ற மொழி பெயர்ப்பன்று. மூலக் கருத்தை மொழி பெயர்க்குமிடத்து இடத்துக்கு ஏற்றவாறு விரித்தும், அழகுபடுத்தியும், ஏற்ற இடங்களில் தம் கருத்தைப் புகுத்தியும் போதனர் கலையுணர் வோடு மொழி பெயர்த்துள்ளார். இத்தகைய இடங்களில் போதனர் வெளிப்படுத்தியுள்ள கருத்துகள் இடப்பொருத்தம் பொருளாழம், பண்புப் பெருமை ஆகியவற்றால் சிறந்து நின்று அவருடைய வளமான கற்பனைக்குச் சான்று பகர்கின்றன. அருச்சுனனால் சிறைப்படுத்தப்பட்ட அசுவத்தாமனைக் கண்டு திரௌபதி கூறிய சொற்கள் உணர்ச்சிக் கோவையாக அமைந் துள்ளன.

''இவர்கள் வலிய போருக்கு வரவில்லை; படைக் கலங் களுடன் போர்க்களத்திற்கு வரவுமில்லை; உன்னை இவர்கள் வஞ்சிக்கவுமில்லை. அந்தோ! உறக்கத்தில் ஆழ்ந்திருந்த இவர் களைப் போர்ப்பயிற்சியே பெறாத இவ் அழகிய சிறுவர்களை இருளில் படுகொலை செய்வதற்கு நின் வலிபொருந்திய வாளை ஏந்துவானேன்?''

அசுவத்தாமனின் மனிதாபிமானமற்ற கொடுஞ்செயலையும் திரௌபதியின் மென்மையான தாயுள்ளத்தையும் இப் பாடல் உணர்ச்சிக் களனாய் நின்று உணர்த்துகிறது. வீடுமன், குந்தி ஆகியோரின் தோத்திரப் பகுதிகள் ஆழ்ந்த பக்தியையும் உயர்ந்த தத்துவத்தையும் கொண்ட இக் கருத்துக் கருவூலங் களாக அமைந்துள்ளன.

''ஞாயிறு ஒன்றே யாயினும் ஒவ்வொருவர்க்கும் தனித் தனியே தோற்றமளிக்கிறது. அதுபோல் தன் படைப்பாகிய மனிதத்திரளின் ஒவ்வொருவருடைய உள்ளத் தாமரையிலும் ஒவ்வோர் உருவமாகத் தோன்றி மகிழ்விக்கும் திருவிளை யாடல்களை இறைவன் மேற்கொள்கிறான். அத்தகைய அரியை நான் தூய உள்ளத்தோடு வழிபடுகிறேன்.''

எல்லாம் அறியும் இறைவன் பேரறிவினன் என்பதையும் எங்கும் நிறைந்திருக்கும் பேரிருப்பினன் என்பதையும் வீடுமனின் இத் தோத்திரப்பாடல் நன்கு விளக்குகிறது. கண்ணன் இறந்த செய்தியைப் பல பாடல்களில் தருமனுக்குக் கூறுகிறான்

அருச்சுனன். இரக்கச் சுவை ததும்பும் இப்பாடல்கள் கண்ணன் பாண்டவரிடத்துக் கொண்டிருந்த அன்பையும் குறிப்பாக அருச்சுனனிடம் கொண்டிருந்த பாசத்தையும் தெளிவாகக் காட்டுகின்றன.

''அரசே, அவனுடைய மனைவியர் பலரும் கண்ணனின் அன்பு தனக்கே உரியது என ஒவ்வொருவரும் போரிட்டுக் கொள்ளும்போது அவர்களுடைய சினத்தை மாற்றிச் சந்து செய்வித்தற்காகக் கண்ணன் என்னை அனுப்புவது வழக்கம்.''

இப்பாடல் அருச்சுனனிடத்துக் கண்ணன் கொண்டிருந்த நம்பிக்கையையும், நெருக்கமான பழக்கத்தையும் தெரிவிப்பதோடு அவ் இருவர்க்கிடையே அமைந்திருந்த உளமார்ந்த நட்பின் ஆழத்தையும் குறிப்பாய் உணர்த்துகிறது. இரண்டாம் காண்டத்தில் அரியின் தன்மையையும், குணச் சிறப்புக்களையும் எடுத்தோதுமாறு பரீட்சித்து வேண்டியதுபோது சுகமுனிவர் இறைவனின் பண்பு நலன்களோடு பக்தியின் ஆற்றலையும் விரித்தோதுகிறார். ஏழாம் காண்டத்தில் வரும் சுயக்ஞனின் கதையில் வேடன் பெட்டைக் குருவியைச் சிறைப்படுத்தி எடுத்துச்செல்லும் போது ஆண் சிட்டு தன் பேடையை நினைந்து கீழ்வருமாறு கலங்கிப் புலம்புகிறது.

''இக் குஞ்சுகளுக்கு இன்னும் இறகு முளைக்கவில்லை. காலையில் இருந்து உணவின்மையாலும், கூட்டைவிட்டு வெளியே பறந்து செல்ல இயலாமையாலும் பசியால் கத்துகின்றன. எங்கிருந்தாவது தம் தாய் உணவுடன் வருமென்று நம்பித் தலையைத் தூக்கி எல்லாத் திசைகளையும் உற்றுப் பார்த்தவாறு வருந்துகின்றன. ஐயோ, இதனை எவ்வாறு பொறுப்பேன்!''

இரக்கச் சுவை மிக்க இப்பாடல் ஆண் சிட்டின் ஆற்றாமையையும் சிறு குஞ்சுகளின் வருத்தத்தையும் உள்ளம் உருகுமாறு எடுத்துரைக்கிறது. பிரகலாதன் கதையில் உணர்ச்சி மிக்க பாடல்கள் பல உள்ளன. அரியின் பெருமைகளைப் பிரகலாதன் கூறக் கேட்ட இரணிய கசிபு, ''ஆசிரியரால் கற்பிக்கப்படாத செய்திகளை எங்கிருந்து பெற்றாய்''என்று வினவுகிறான். அதற்குப் பிரகலாதன் கூறுவதாவது;

''அறியாமை இருளில் மூழ்கி, இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு இவ்வுலகின் இன்பங்களில் ஆழ்ந்து உழலும் மனிதர்கள் பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு என்னும் வினையுருளியில் சிக்கித் துன்புறுகின்றனர். பிறரால் கற்பிக்கப்படினும், தாமே

எத்துணை முயன்றாலும் பயன்களைக் காட்டித் தூண்டப்பட்டாலும் வீடுதுறந்து காட்டிற்குச் சென்றாலும் இத்தகையோர்க்கு இறைவனைப் பற்றிய நல்லுணர்வு தோன்றாது.''

இப்பாடல் மக்களின் அறியாமையை விளக்கி இறைவனிடத்துக் கொள்ளும் பக்தியை ஒருவன் 'பிறவியிலேயே அமையப் பெறவேண்டும் என்ற உண்மையைக் குறிப்பாகக் கூறுகிறது. தம் பக்தர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற இறைவனின் ஆர்வம் கீழ்வரும் பாடலில் மிக அழகாகக் கூறப்படுகிறது:

''இலக்குமிக்கும் கூறாமல், சங்கு சக்கரங்களையும் அணியாமல், பரிவாரங்களையும் அழையாமல், வாகனமாகிய கருடனையும் அலங்கரிக்காமல், கன்னங்களில் சரிந்து விழும் தன் கூந்தலையும் சரி செய்யாது, ஊடலின் போது கவர்ந்த இலக்குமியின் மேலாடையையும் விடாமல் யானையைக் காக்க வேண்டும் என்ற ஆர்வம் மீதூரப் பெற்றவனாய் விரைந்தோடினான்.''

ஆந்திர மக்கள் சுவைத்துப் படிக்கும் பல பாடல்கள் இப்பகுதியில் நிறைந்துள்ளன. வாமனாவதாரக் கதையில் வாமனனுக்கு மூன்றடி மண் கொடுக்க வேண்டாம் எனத் தடுக்க முயன்ற சுக்கிரனுக்குப் பலி விடை கூறுவதாக அமைந்த பாடல்கள் ஆழ்ந்த உணர்ச்சியும் இனிய ஆற்றொழுக்கும் உடையனவாய் உள்ளன.

''இலக்குமியின் கூந்தல், மேனி, தோள், தாமரைத் தாள்' கன்னம், மார்பு ஆகியவற்றின்மேல் பட்டு இன்புறும் உரிமை பெற்ற கைகள் என் கைகளுக்குக் கீழே ஏந்தி நிற்கச் செய்வது சிறந்ததல்லவா? இப் பயனற்ற அரசு நிலையானதா? இவ் உடல் அழியாததா?''

இன்பச் சுவை நிறைந்த இப்பாடல் பலியினுடைய ஒப்பற்ற பெருந்தன்மையினையும் நன்கு காட்டுகின்றது. திருமால் தன் அன்பர்கள் மீது வைத்திருந்த அன்பினை அவர் தன்னைச் சரணடைந்த துருவாச முனிவர்க்குக்கூறிய செய்தியால்நன்கு அறியலாம்.

''ஞானிகளும் பக்தர்களும் என்னுள்ளத்தை மிக எளிதில் கவர்ந்து பக்திக்கொடியால் இறுகப் பிணைத்து விடுகிறார்கள். ஓ, முனிவரே, வலையில் அகப்பட்ட யானைபோல் சிக்குண்டு இருப்பினும் அவர்கள்மீது கொண்ட பாசத்தின் காரணமாக அவ் அன்பெனும் வலையிலிருந்து தப்ப நானும் விரும்பவில்லை.''

பத்தாம் காண்டத்தில் உள்ள நூற்றுக் கணக்கான பாடல்கள் போதனரின் கற்பனை வளத்திற்கும் உணர்ச்சி ஊற்றுக்கும் சான்று பகர்கின்றன. கோபியரின் பாடல்களில் சொரிந்துள்ள பக்திச் சுவை சொல்லால் விவரிக்க இயலாத சிறப்புடையது. ஆநிரைகளை யும் இடையர்களையும் மறைத்து வைக்க முயன்றும் முடியாமல் கண்ணனிடம் தோற்று அவமானம் அடைந்த பிரம்மன் கண்ணனைப் பின்வருமாறு புகழ்கிறான்:

''வேதங்களால் அறியப்படாத உன்னை, இவ்வுலகில் இந்தக் காட்டில், இந்த ஆநிரையிலேயே உள்ள இடையர்கள் உன்னைக் காணும் பேறு பெற்றவர்கள்; உன்னைக் 'கண்ணு' என அழைத்துத் தம் மனமொழிமெய்களை உனக்கே அர்ப்பணித்தவர்கள். இவர் களில் ஒருவனுடைய திருவடிப் புழுதியால் என் தலை நிறைந்து விளங்குவது போதாதா? பிரம்ம பதவியினால் என்ன பயன்?''

பிரம்மனைக் காட்டிலும் இடைக்குல மக்கள் சிறந்தவர்கள் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. இதனைப் பிரம்மனே கூறுவதாக அமைத்திருப்பதால் இக் கருத்தின் சிறப்பு மேலும் பொலிவு பெறுகிறது. இது போன்றே ருக்குமணி திருமணம், நரகாசுரனின் வதை, சியாமந்தகனின் கதை போன்ற பகுதிகளில் வரும் பல பாடல்களும் உணர்ச்சிப் பெருக்கு, கருத்து வளம் போன்றவற்றால் சிறந்து விளங்கிப் போதனரின் கவிதைச் சிறப்பை விளக்குகின்றன.

முக் கவிஞர், பாலகுரிகி சோமநாதர் ஆகியோருடைய கருத்துக்களைப் போதனர் தம் பாகவதத்தில் பல இடங்களில் எடுத்தாண்டிருக்கக் காண்கிறோம். கண்ணன் இருப்பிடத்தைக் கூறுமாறு ஒவ்வொரு மரமாகக் கெஞ்சி கேட்டுக்கொண்டே காடு களில் அலையும் கோபியரைப் பற்றிய பாடலொன்று பத்தாம் காண்டத்தின் முற்பகுதியில் உள்ளது. இந்தப் பாடல் நளனைத் தேடிக் காட்டில் அலையும் தமயந்தியைப் பற்றி நன்னயர் பாடிய பாடலைப் போன்று அமைந்துள்ளது. யசோதை கண்ணனைப் பார்த்து, ''யார் இந்த மனிதர்? கண்ணன் போல இருக்கிறார். இவர் வெண்ணெயே பார்த்ததில்லை போலும்'' என்று வஞ்சக் குறிப்பாகக் கூறுகிறாள். இப்பாடல், அருச்சுனனால் சிறை செய்யப் பட்டுத் தம்முன் நிறுத்தப்பட்ட துருபதனைக் கண்டு துரோணர் கூறுவதாக வரும் நன்னயரின் பாடலை ஒத்துள்ளது. பலராம னோடும் இடைக்குல வீரர்களோடும் மதுரா நகரம் புக்க கண்ணனைக் கண்ட அந் நகரப் பெண்டிர், ''பூதகியின் முலையுறிஞ்சி அவளைக் கொன்ற அதிசயச் சிறுவன் இவனா?'' என்று வியந்து கூறுகின்றனர்.

திருதராட்டிரனைக் காணத் தம் தெரு வழியாக நடந்து சென்ற கண்ணனைக் கண்ட அத்தினபுரப் பெண்கள் அவனுடைய இதே இளமை நிகழ்ச்சியைக்கூறி வியந்ததாக திக்கனர் எழுதிய பாடலொன்றை யொட்டிப் போதனர் இப்பாடலைப் பாடினர் என்று அறிகிறோம்.

தம்முடைய நரசிம்ம புராணத்தில் பிரகலாதன் கதையை எர்ரனர் மிக அழகாகப் பாடியுள்ளார். எர்ரனரின் இப் பகுதியைப் பார்த்துப் பாடியதாக அமைந்த பாடல்கள் பல போதனரின் பிரகலாத சரித்திரத்தில் உள்ளன. ''மந்தார மலரின் தேனை மகிழும் தேனீ ஊமத்தைப் பூவை நாடுமா'' என்னும் பொருளுடைய போதனரின் பாகவதப் பாடலை அறியாத ஆந்திரர் இல்லை. இதனுடைய மூலம் சோபநாதரின் சதுர் வேத சாரத்திலும், அவருடைய பாசவ புராணத்தின் மூன்றாம் காண்டத்திலும் உள்ளது. இக் கருத்து போதனரின் போகினி தண்டகத்திலும் காணப்படுகிறது. இளமையில் சைவராயிருந்த போதனர் சைவக் கவிஞர்களின் காப்பியங்களை ஆழ்ந்து கற்றிருக்கலாம் என்று இதனால் உய்த்துணரலாம்.

நடை நலம்

''சிலர் தெலுங்கையும், சிலர் வடமொழியையும், வேறு சிலர் இவ் விரண்டையும் விரும்புகின்றனர். எனவே என்னுடைய நூலின் பல்வேறு பகுதிகளில் இப் பல்வேறு அறிஞர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுவேன்'' என்று போதனர் தம் பாகவதத்தின் தொடக்கத்தில் கூறுகிறார். நீண்ட வடமொழித் தொடர்களும், எளிய தெலுங்குச் சொற்களும் விரவி நிற்பதைப் பாகவதப் பாக்களில் காணலாம். மொத்தத்தில் தெலுங்குச் சொற்களைவிட வடமொழிச் சொற்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. எனினும் சிக்கலான நீண்டமைந்த தொடரமைப்புகள் இல்லாமையால் இனிய, எளிய நடையமைந்த இந்நூல் கற்குந்தோறும் இனிமையூட்டுவதாக அமைந்துளளது. தெலுங்கு மொழியின் இனிமையை அறிய விரும்பும் ஒருவர் போதனரின் பாகவதத்தை அவசியம் கற்கவேண்டும். போதனரின் கவிதையில் சொல்லழகு நிறைந்துள்ளது. இத்தகைய அழகு தம் நூலிலும் உள்ளதாக நன்னயர் கூறுகிறார். ''எந்த மலர் எந்த மலரோடு கூடினால் கண்ணனுக்கு விருந்தளிக்கும் என்று ஆய்ந்து ஒருவன் மலர்களை மாலையாகத் தொடுப்பதைப்போல, எந்தச் சொல் எந்தச் சொல்லோடு இயைந்து நின்று செவிக்கு இன்பம் பயக்கும் என்று சொற்களின் ஓசை நயத்தை ஆய்ந்து ஆய்ந்து பாக்களைத் தொடுப்பவனே

சிறந்த கவிஞன்'' என்று வடமொழி இலக்கண ஆசிரியரான பாமகர் கூறுகிறார். ஏனைய தெலுங்குக் கவிஞர்களைவிடப் போதனர் ஒருவரே இத்தகைய இனியபாக்களை இயற்றும் கவியாற்றலைப் பெற்றிருந்தார் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கே இடமில்லை. நூல் முழுவதும் ஒரேசீராக இத்தகைய சொற்சுவை நிறைந்திருப்பதால் கற்போர் செவிக்கு நல் விருந்தாக இந்நூல் விளங்குகிறது.

அணிகள்

வெறும் சொல்லலங்காரங்கள் மிகுந்துள்ள கவிதை அத்துணை உயர்வானதன்று என்பர் அணியியலார். ஆயினும் அலங்காரமே நோக்கமாகக் கொள்ளாமல், கருத்து, உணர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தும் சிறந்த வாயிலாகக் கருதிச் சொல்லணிகளை மிகுதியாக அமைத்துப் புகழ்பெற்ற கவிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் போதனரும் ஒருவர். சொல்லணி, பொருளணிகளை ஆள்வதில் பெரு விருப்புடையவர் போதனர். வருணனைப் பகுதிகளாக அமைந்த அவருடைய பாடல்கள் பலவற்றில் யமகம், எதுகை, மோனை போன்ற சொல்லணிகள் மலிந்து காணப்படுகின்றன. கஜேந்திரனைக் காப்பதற்காக விரைந்தோடும் திருமாலைக் கண்டு பதைபதைத்து நின்ற இலக்குமியின் நிலையைப் போதனர் சிறு 'கந்த' யாப்பு பாடல்களால் வருணிக்கிறார். இவற்றில் அமைந்த ஒலிகளே பொருளையுணர்த்தும் பெற்றியனவாய் உள்ளன. எதிர்பாராது நிகழ்ந்த அதிர்ச்சியால் நேர்ந்த இலக்குமியின் இதயத் துடிப்பையும் படபடப்பையும் 'ட' (d) ஒலியின் மிகுதியாலும், சிறு சிறு அசைகளை மிகுதியாகப் பயன்படுத்தியும் விளக்கும் போதனரின் கவியாற்றல் அறிந்து மகிழ்தற்குரியது.

மோனை, யமகம், சிலேடை போன்ற சொல்லணிகளை மிக அதிகமாக ஆளுவதில் போதனர் பெரு விருப்புடையவராய்த் தோன்றுகிறார். செய்யுளழகை மிகுவிப்பதற்காகத், 'த்விப்ராசம்'' ''த்ரைப்ராசம்'' போன்ற யாப்பு வேறுபாடுகளையும் அவர் பயன்படுத்துகிறார். பொருளணிகளைப் பயன்படுத்துவதிலும் போதனர் பேரார்வம் உடைவராய்த் தோன்றுகிறார். உவமை, உருவகம், அதிசயோக்தி, வேற்றுப் பொருள் வைப்பணி போன்ற பொருளணிகள் இவர் நூலில் பரவலாய் அமைந்துள்ளன. சான்றாகக் கீழ்வரும் கருத்தமைந்த பாடலைக் காட்டலாம்:

''தாமரைக் கண்ணனும் கண்ணனின் கையிலேந்திய கோவர்த்தனக் குன்று ஓர் அழகிய தாமரை போன்று இருந்தது. அதனைச் சூழ்ந்த கருமேகக் கூட்டம் தேனீக்களின் ஈட்டம் போன்று விளங்கியது.''

இப் பாடலில் உவமையணி தவிர மோனை போன்ற சொல்லணிகளும் அமைந்துள்ளன. மேகங்கள் சூழ்ந்த கோவர்த்தனத்தைக் கண்ணன் தன் கையில் ஏந்தி நின்ற அழகை விளக்குவதோடு, பூப்போன்ற கைகளால் மலையினைப் பூப்போலத் தூக்கினான் என்பதால் கண்ணனின் இளமையும், வலிமையும், மேகக்கூட்டம் சூழ்ந்த மலை என்பதால் கண்ணன் மிக உயரமாக மலையை ஏந்தி நின்றான் என்பதும் விளங்குமாறு இவ் உவமை அமைந்துள்ளது.

கஜேந்திரன் கதையில் யானையைச் சந்தேக இயல்புடைய ஒரு மனிதனுக்கும் முதலையைப் பேரின்பமாகிய பிரம்மத்தை இறுகப் பற்றிக்கொள்ளும் ஒரு யோகிக்கும் போதனர் உவமிக்கிறார். இவ் இரண்டு தத்துவக் கருத்தமைந்த உவமைகளும் இடத்திற்கேற்பப் பொருந்தி நின்று இன்பம் பயக்கின்றன.

ஓசைநயம்

தக்க யாப்பு வேறுபாடுகளால் ஓர் ஒழுங்கான லயமும், சொல்லணிகளால் பெறப்படும் முழவோசை போன்ற ஓசையினிமையும், பொருளார்ந்த சொற்களால் பெறப்படும் இலக்கியமணமும் ஒன்று சேர்ந்து போதனரின் கவிதையை ஓர் இசைக்களமாகக் காட்டுகின்றன. இதனால்தான் பாடலின் பொருளை அறிந்தோர்க்கும், அறியாதோர்க்கும் இப் பாடல்கள் ஒப்ப இன்பம் பயக்கின்றன. போதனரின் கவிதை பெரும் புகழ் பெற்றமைக்கு இதுவே முதற் காரணமாயிற்று.

உரையாடல்கள்

போதனரின் நடை பெரும்பாலும் வருணனையாகவும் கிளத்தலாகவும் அமைந்துள்ளது. தேவையான இடங்களில் வருணனைகளை அமைத்துக் கிளத்தல் நடையில் காப்பியத்தைக் கொண்டு செல்கிறார். சில இடங்களில் பொருத்தமான உரையாடல்களையும் பயன்படுத்துகிறார். வாமனாவதாரத்தில் பலியும் வாமனனும், பலியும் சுக்ரனும் உரையாடும் பகுதிகளும் நரகாசுரனுக்கும் அரிக்கும் இடையே நிகழும் உரையாடற் பகுதியும் போதனரின் திறமைக்கு நல்ல எடுத்துக் காட்டுகளாகும்.

உரையிடையிட்ட யாப்பு

பாகவதத்தில் இங்குமங்குமாகச் சிலவிடங்களை உரைநடையிலும் போதனர் எழுதியுள்ளார். அவற்றுள் சில மிக நீளமானவை. அத்தகைய நீண்ட உரைநடைப் பகுதிகள் யமகம், மோனை முதலான சொல்லணிகளும், உவமை, உருவகம், ஒரோவிடத்துச் சிலேடை, விரோதாபாசம் போன்ற பொருளணிகளும் நிறைந்து மிளிர்கின்றன. போதனரின் மொழிப்புலமை, ஆழ்ந்த

நூற்புலமை போன்றவற்றை இப்பகுதிகள் காட்டுகின்றன. வட மொழிச் சொற்களும் கூட்டுப் பெயர்களும் மலிந்துள்ள போதிலும் போதனருடைய உரைநடை நன்னயரின் உரைநடையைப் போல இனிய ஆற்றொழுக்கு உடையதாய் அமைந்துள்ளது. பாகவதத்தில் மொத்தம் 7915 செய்யுள் உரைநடைப் பகுதிகள் உள்ளன. இவற்றுள் 2364 உரைநடைப் பகுதிகள். இதில் மூன்றில் ஒரு பங்கு ஒவ்வொன்றும் தனிவாக்கியமாகவோ, சொல்லாகவோ அமைந்துள்ளது.

யாப்பு

போதனரின் செய்யுட் பகுதியில் மூன்றில் ஒரு கூறு 'கந்த' யாப்பில் இயன்றது. செய்யுளியற்றும் கலையில் நல்ல தேர்ச்சியுடைமையால் பல்வேறு ஓசையமைப்புக்களுடைய கந்த யாப்பைப் பயன்படுத்திப் போதனர் தம் செய்யுள் நடையை மிக்க அழகும் இனிமையும் உடையதாகச் செய்துள்ளார். அடுத்த நிலையில் 'சிசா' யாப்புப் பாடல்கள் அமைந்துள்ளன. 89 சிசாப்பாடல்களில் 677 பாடல்களில் ''தேட கீதி'' என்னும் தெலுங்குச் செய்யுள் வகையையும் 222 பாடல்களில் ''ஆட வெலதி'' என்னும் செய்யுள் வகையையும் இணைத்துள்ளார். போதனரின் வீரபத்ர விசயத்தில் உள்ள 118 சிசாப் பாடல்களில் ஏறக்குறைய 101 பாடல்கள் ஆடவெலதியில் முடிகின்றன. இதனால் வயது முதிர முதிர ஆடவெலதியை விட தேடகீதி அமைப்பைப் போதனர் மிகவும் விரும்பினர் என அறிகிறோம். அவருடைய சிசாப் பாடல்களின் லய இனிமையை யாவரும் அறிந்த ஒன்று. பொது விருத்தயாப்பைப் பொறுத்த வரையில் போதனருக்கு ''மத்தேப''யாப்பில் பெருவிருப்பு இருந்ததாகத் தெரிகிறது. இதனையடுத்த அளவில் ''சம்பகமாலாவும், ''உத்பல மாலா''வும், ''சார்தூலா''வும் முறையே இடம் பெறுகின்றன. இவை தெலுங்கு யாப்புக்குரிய சந்த விருத்தவகைகள். மத்த யானையாகிய கசேந்திரனைப் பற்றிய கதையாதலின் இப் பகுதியில் போதனர் 'மத்தேச' விருத்தயாப்பை மிகுதியாகப் பயன் படுத்தி இருக்கவேண்டும் என்று திறனாய்வறிஞர்கள் கருது கின்கிறனர். சிறப்பு விருத்தவகையில் விரைந்த இனிய நடையமைப்பை உடைய ''மத்தகோகிலம்'', ''தரலம்'' ஆகிய இரண்டுவகைப் பாவகையையும் போதனர் அதிக அளவில் பயன் படுத்தியுள்ளார். மூன்றாம் காண்டத்திலும் பத்தாம் காண்டத் திலும் தண்டக யாப்பைப் பயன்படுத்தியுள்ளார். ''மகாஸ்ருக தாரா''வகையில் ஒரு பாடலும் 'ஸ்ரகதாரா''வகையில் இரண்டு பாடல்களும் இயற்றியுள்ளார். விருத்தம், ஜடி, போன்ற யாப்பு

எதுவாயினும் தாம் பயன்படுத்தும்போது செவிக்கினிய ஆற்றொழுக்கான யாப்பாகப் போதனர் யாக்கும் திறம் அறிந்து மகிழதற்குரியது.

போதனருடைய பாகவதத்தின் சில பகுதிகளில் நிறுத்த யாபபு முறையின் (Caesura) சில புதுமையான அமைப்புகள் காணப்படுகின்றன. அகண்டயதி என்னும் நிறுத்த யாப்பு முறையை அவர் ஏற்றுக் கொள்கிறார். பாகவதத்தின் முதற் பாடலின் இரண்டாவது அடியில் இது அமைந்துள்ளது. வு உ, உ-றி, ரு-றி, த்ரு-த்ரே ஆகிய ஒலிகட்கிடையில் போதனர் நிறுத்த யாப்பைப் பயன்படுத்துகிறார். இரண்டு மூனறு இடங்களில் இவ்வகையில் வழுக்கள் அமைந்துள்ளன. மறதி அல்லது அயர்வால் இவை நிகழ்ந்திருக்க வேண்டும். போதனரின் புதுமுறை யாப்பு முறைகளைச் சில பதிப்பாசிரியர்கள் திருத்தி அமைக்க முயன்றனர். இத்தகைய பகுதிகள் நாராயரரால் இயற்றப்பட்டன என்றும் போதனருடையன அல்ல என்றும் சிலர் கருதுகினறனர். சைவக் கவிஞர்களேயன்றி வேறு பிற கவிஞர்களும் இத்தகைய யாப்பை ஆண்டுள்ளனர். ர, ற ஆகிய ஒலிகளை யதி, ப்ராசம் போன்ற சொல்லணிகளில் பயன் படுத்தியதால் போதனர் ஒரு சிறந்த கவிஞரல்லர் என்று சில இலக்கண வாதிகள் கூறுகின்றனர்.

சில சிறுகுறைகள்

மொழியை ஆளுவதிலும் சில மாறுபாடுகள் போதனர் பாகவதத்தில் காணப்படுகின்றன. சில இடங்களில் எச்சவினை ஏகாரத்தில் சந்தியைப் பயன்படுத்துகிறார். நகரச் சாரியை இல்லாமலே நான்காம் வேற்றுமைக் 'கு' உருபைப் பயன்படுத்துகிறார். ஓரோவிடங்களில் 'விகசகமலனேத்ரி, மிஸ்ரசமாசம், துருதாவித்வசந்தி' போன்ற கூட்டுப் பெயர்களையும், பேச்சு வழக்குகளையும் தம் நூலுள் அமைத்துள்ளார்.

சிறந்த கவிஞர்களின் ஆட்சியைக் கூர்ந்து நோக்கி அதற்கேற்ப விதிகளை அமைப்பதுதான் இலக்கண ஆசிரியர்களின் கடமை. அவ்வாறு செய்யாதது அவர்களுடைய பிழை; கவிஞர்களின் குற்றமாகக் கருதலாகாது. இலக்கண விதிகளைக் கருதிப் பெருங்கவிஞர்களைக் குறை கூறுவது தக்க தன்று. சில குறுகிய மனப் பான்மையுள்ள இலக்கணவாதிகள் அவரைச் சிறந்த கவிஞர் என்று ஏற்றுக்கொள்ளாமையால் போதனரின் கவிதைப் பெருமை குன்றிவிடாது. அவர் ஒரு தலை சிறந்த கவிஞராகவே விளங்குகிறார். அதிலுள்ள சில இலக்கண வழுக்களுக்காகவோ, யாப்புக் குறைபாட்டுக்காகவோ அவருடைய காப்பியத்தைச் சிலர் படிக்க விரும்புவதில்லை; படிப்பதில்லை. இதனல் அவர்கள் இழக்கும் கவிதை இன்பத்துக்காக அவர்களே பின்னர் இரங்க நேரிடும். இப் புறக்கணிப்பால் போதனரோ அவருடைய காப்பியமோ இழப்பது ஒன்றுமில்லை.

இயல் எட்டு

போதனரின் ஆளுமை

தெலுங்கு நாட்டில் வழங்கி வரும் மரபுவழிக்கதைகளாலும் அவருடைய நூல்களாலும் போதனருடைய பண்பு நலன்களை யும் ஆளுமைத் திறத்தையும் நாம் ஒருவாறு அறியலாம். சைவக் குடியிற் பிறந்து இளமையில் சைவத்தின் மீது பற்றுடையவராய் இருந்தாலும் பின்னர்த் திருமால் அன்பில் ஈடுபட்டுப் பாகவ தத்தைப் போதனர் இயற்றினார் என்று முன்னரே கண்டோம். வைணவத்தில் ஆழ்ந்த பற்றுடையவராய் விளங்கினாலும் இவர் ஒருபோதும் சைவமதத்தைக் குறைத்துக் கூறுவதில்லை. இளமைப் பருவத்தே உலக இன்பங்களில் மூழ்கியிருந்த போதிலும திரு மாலிடத்துப் பக்தி பெருகப் பெருக வாழ்க்கையில் மன நிறை வுடையவராய் வாழ்ந்தார். வாழ்க்கையின் தொடக்கத்தில் ஒரு கல்லு செல்வந்தர்கள்,இராசகொண்ட சர்வக்ஞ சிங்க பூபாலன் ஆகியோருடைய ஆதரவை நாடியிருக்கலாம். அக்காலத்தே தான் சிங்கபூபாலனின் வேண்டுகோட்கிணங்கி போகினி தண்ட கத்தை இயற்றியிருக்க வேண்டும். இவ்வாறு சைவசமயத்தி லிருந்து வைணவ சமயத்துக்கு மாறினார் எனவும், உலக இன் பங்களில் இருந்து விடுபட்டு ஆன்றவிந்தடங்கிய அமைதி வாழ்க்கையை மேற்கொண்டார் எனவும் அறிகிறோம்.

மானுடம் பாடாமை

பாகவதத்தை இயற்றிக் கொண்டிருந்த பக்திக் காலத்தும் போதனர் தம் குடும்பப் பொறுப்புகளைப் புறக்கணிக்கவில்லை. தம் குடும்பப் பராமரிப்புக்காகப் போதனரும் அவருடைய மகனும் உழவுத் தொழிலை மேற்கொண்டனர் என்னும் மரபு வழிச் செய்தி பொய்யன்று. ஒரு காப்பியத்தைப் பிறருக்குப் படை யலாக்குவதும் அதனைப் பிறர் ஏற்றுக்கொள்வதும் அக் காலத்திலிருந்த சாதாரண வழக்குகளே. எழுவகை வாழ்க்கைப் பேறுகளுள் ஒன்றாக இத்தகைய படையல் ஏற்பைக் கருதிய மக்கள் அக்காலத்தில் இருந்தனர். வறுமையில் உழன்று, குடும்பப் பராமரிப்புக்காக உழவுத் தொழிலில் ஈடுபட்டு வருந்து கிறார் என்பதையும், அந்நிலையிலும் பாகவதம் ஆகிய பெருங் காவியம் ஒன்றை இயற்றி வருகிறார் என்பதையும் அறிந்த நண்பர்களோ, உறவினர்களோ அந்நூலை அரசர் ஒருவர்க்கு அர்ப்பணித்துப் பொருள் பெற்று இனிது வாழலாம் என்று அறி

வுறுத்தி இருக்க வேண்டும். பாகவதம் இயற்றப்பட்டு வருவதை அறிந்த அரசர் சிங்கபூபாலரே தம் பெயருக்கு அர்ப்பணிக்கு மாறு போதனரை வேண்டியும் இருக்கலாம். போதனரின் மைத்துனராகிய ஸ்ரீநாதர்தான் யாரேனும் ஒரு செல்வந்தருக்கு அர்ப்பணிக்குமாறு தூண்டினர் என்னும் கதையொன்றும் வழங்கி வருகிறது. தம் பாகவதத்தை மானிடர்க்குப் படையலாகப் போதனர் மறுத்து விட்ட பின்னர் அவரைக் காண வந்த ஸ்ரீநாதர் 'உழவர் வாழ்க்கை எவ்வாறுள்ளது' என்று ஏளன மாகக் கேட்டார் என்றும் ஒரு கதை வழங்குகிறது. இவ்வினு விற்குப் போதனர் அளித்ததாகக் கூறப்படும் விடை பின் வருமாறு:

''புதிய மாங்கன்றின் நாற்றிலிருந்து தோன்றிய தலைத்தளிர் போன்ற மென்மைத் தன்மையை உடைய 'காவியக் கன்னி'யை அறிவற்ற செல்வந்தன் ஒருவனுக்கு விலைமகளை விற்பது போல் விற்று அதனுல் வரும் பாவப் பணத்தால் வாழ்வதைவிட, நல்ல கவிஞர்கள் தம் மனைவி மக்களைக் காப்பதற்காகக் காடுகளில் கிழங்கு வெட்டியும் நிலத்தை உழுதும் பயிரிட்டும் வாழ்வதால் நேரும் இழுக்கு என்ன?''

இப்பாடல் போதனருக்கு முன்னர் வாழ்ந்த மஞ்சனரின் கேயூரபாகு சரிதையில் காணப்படுகிறது. எனவே போதனர் இப்பாடலை இயற்றினரா என்பது ஐயத்திற்கிடமானது. தாம் மிகவும் விரும்பிப் படித்து மனப்பாடஞ் செய்திருந்த இப்பாடலை விடையாகப் போதனர் ஸ்ரீநாதருக்கோ பிறருக்கோ சொல்லி யிருக்கல்ாம். இதனுல் போதனர் தம்முடைய சொந்த முயற்சி யால் பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றினர் என்றும் தம்நூலை மானிடர் யாருக்கும் படையலாக்க விரும்பவில்லை என்றும் அறிகிறோம். அறிஞர் பலரால் இடைச்செருகல் எனக் கருதப்படும் கீழ்வரும் பொருளுடைய பாடல் ஒன்று அச்சேறிய பாகவதப் படிகளில் காணப்படுகின்றது.

''என்னுடைய நூலைப் பண்பற்ற அரசர்க்குப் படையலாக்கிப் பொருளும் வாகனமும், ஊர்களும் பெற்று மயங்கி வாழ்ந்து மடிந்து பின்னர் எமனுல் சம்மட்டியடி பெறுவதற்கு மாறுகப் பம்மெர போதனராகிய நான் உலகம் உய்யும் பொருட்டுப் பாகவதத்தை இயற்றி ஸ்ரீஅரிக்கு உள்ளன்புடன் படையலாக்கி கினேன்.''

உலக ஆசைகளில் ஈடுபட்டுழலும் அரசர்க்குத் தம் நூலைக் காணிக்கையாக்கிப பொன்னும்பொருளும் பெற்று வாழ்வதைப்

போதனர் வெறுத்தார் என்பதும், அத்தகைய காணிக்கை ஒருவனைக் கொடுநரகிற் சேர்க்கும் என்று அவர் நம்பினார் என்பதும் இப்பாட்டலால் நன்கு அறியக் கிடக்கின்றன. அரசர்களின் வாழ்க்கை முறைகளையும் சூழலையும் நன்கறிந்த போதனர் இத்தகைய கருத்துடையவராய் இருந்திருக்கக்கூடும் என்பதில் வியப்பில்லை. வேறொரு கதையின்படி, நண்பர்களின் தூண்டுதலாலும் வறுமையின் கொடுமையாலும் மனம் பேதுற்றுப் போதனர் தம் பாகவதத்தை மானிடர் ஒருவருக்குக் காணிக்கையாக்க ஒருப்படலாம் எனக் கருதிய கலைமகள் அவர் முன் தோன்றிக் கண்ணீர் வடித்த போது போதனர் பின்வருமாறு கூறிக் கலைமகளைத் தேற்றினார்:

"பிரம்மதேவனின் அரசியும், கைதவ அசுரனைக் கொன்ற திருமாலின் அன்பு மருமகளும் ஆகிய தாயே, நின் கருந்தடங் கண் கண்ணீர் சொரியுமாறு அழுவதேன்? வறுமையின் காரணமாகக், கருநாடகத்தின் கொடிய வணிகர்கட்டு உன்னை ஒரு போதும் விற்கமாட்டேன். பாரதியே, மனமொழி மெய்களால் என்னை நம்புவாயாக."

இப்பாடலால் ஒரு காவியத்தைக் காணிக்கையாக்குதலாவது கலைகளை விற்பதென்றும், அச்செயல் அவளுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணும் என்றும் அறிகிறோம். எவ்வளவுதான் துன்பம் வந்தாலும் தம் பாகவதத்தை மானிடர் யாருக்கும் காணிக்கையாக்குவதில்லை என்று போதனர் உறுதி பூண்டிருந்தார் என்பது இப்பாடலால் விளங்குகிறது. இந்த உறுதியினால்தான் போதனர் தம்முடைய பாகவதத்தை இராமபிரானுக்குப் படையலாக்கினார். ஒரு சந்திர கிரகண நாளன்று தியானத்தில் ஆழ்ந்திருந்த போதனருக்குப் பாகவதத்தை இயற்றுமாறு கூறியருளியவரே இராமபிரான்தான். அதே இராமபிரான்தான் தம்மைப் பாகவதத்தை இயற்றி முடிக்குமாறு அருள் செய்தார் என்று போதனர் நம்பினார். ஒவ்வொரு காண்டத்தின் முதலிலும் முடிவிலும் இராமபிரானை மட்டுமே போதனர் வணங்குகிறார். சஷ்டியந்தத்தில் மட்டும் நந்தனின் ஆநிரைகளைக் காத்துவந்த கண்ணனை வருணிக்கிறார். இதில் முரண்பாடு எதுவும் இல்லை. தூய இறையன்பு நிறைந்த அவருடைய உள்ளத்தில் இராமபிரானுக்கும் கண்ணபிரானுக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை. இருவருமே ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்கள்தான் என்று அவர் உறுதியாக நம்பினார். அதனால்தான், ஒன்பதாம் காண்டத்தில், "தாமரை போன்ற கண்களையுடைய கருமை நிறத்

தோன்'' என இராமனை வருணித்த போதனர் பத்தாம் காண்டத்தில் கண்ணபிரானையும் அதே போன்று ஒரு பாடலில் வருணித்துள்ளார்.

வறுமையிற் செம்மை

கொடிய வறுமையால் துன்புற்றாலும், தம் நூலை அரசன் ஒருவருக்குக் காணிக்கையாக்கிப் பெருஞ்செல்வம் பெற்று உலக இன்பங்களைத் துவரத் துய்க்கும் வாய்ப்பு இருந்த போதிலும், போதனர் தம் பாகவதத்தை இராமபிரானுக்கே காணிக்கையாக்கியதிலிருந்து அவருடைய பக்தியின் ஆழமும் உள்ள உரனும் நன்கு வெளிப்படுகின்றன. திருமால் பக்தியைத்தான் அவர் பெறற்கருஞ் செல்வமாகக் கருதினார். அதனால்தான் திருமால் எனும் 'நளினாக்ஷ' செல்வத்தைக் கண்டேன் என்று ஆனந்தக் கூத்தாடுவதாகப் பிரகலாதனைக் காட்டுகிறார். கீழ்வரும் குசேலோபாக்யானக் கூற்றால் போதனர் வறுமையைஒரு சாபமாகக் கருதா ப இறைவன் அளித்த வரமாகவே கருதினார் என்று அறிகிறோம்:

''கருணைக்கடலாம் இறைவன், தன் அடியார்களின் துயரங்களையெல்லாம் துடைக்கும் இறைவன் எல்லாவிதமான உலக இன்பங்களையும் எனக்கு அருளியிருப்பான். ஆனால் வறுமையில் வாடும் ஒருவன் பெருஞ்செல்வம் பெற்றால் அதனால் மயங்கித் தன்னை உணரவும் அடையவும் இயலாதவனாகிப் பாழ்படுவான் என்று கருதியே இறைவன் எனக்குச் செல்வத்தை அளிக்கவில்லை.''

பத்தாம் காண்டத்தின் பிற்பகுதியில் (X-1234) திருமால் தொண்டின் பெருமையைப் பரீட்சித்துக்கு விளக்கிக் கூறும் போது போதனர் இக்கருத்தை மிக விளக்கமாகக் கூறுகிறார்.

பக்தியே நல்லறம்

போதனரின் நல்லறம் பக்திதான். பல இடங்களில் பக்தியின் ஆற்றலைத் தம்மை மறந்த உணர்ச்சியில் திளைத்து வருணித்துள்ளார் போதனர். பக்தியைப் பற்றிப் பிரகலாதன் கூறும் சொற்கள் இவ்வகையில் தலைசிறந்தன. அரிக்குத் தொண்டு செய்யாத உறுப்புகள் உறுப்புகளே அல்ல என்றும், அரியைப் பற்றிச் சிந்திக்காத வாழ்க்கை வாழ்க்கையே அன்று என்றும் பிரக ாதன் கூறுகிறான். வாழ்க்கைத்துன்பங்களிலிருந்தும், தொல்லைகளில் இருந்தும், தீமைகளில் இருந்தும் விடுபட்டு வீடுபேறு அடைய விரும்பும் ஒருவனுக்குத்திருமால்அன்பில்ஈடுபட்டுஅவன்புகழ்பாடித்தொண்டாற்றுவதைத்தவிர வேறு வழியில்லை என்று பிரகலாதன் நம்புகிறான். அரியிடம்பக்தியில்லாதவரின் வாழ்க்கை வெற்று வாழ்க்கை என்று பன்

முறை கூறுகிறான். இவை பிரகலாதனின் கருத்துக்கள் மட்டு மல்ல; போதனரின் கருத்துகளும்தான். இவ்வாறே பக்தர்கள் எங்கெங்கு இறைவனுடைய புகழைப் பேசுகிறார்களோ அங்கெல் லாம் போதனர் அப்பக்தர்களாகவே மாறிப் பேசுகிறார். துருவன், அம்பரீடன், கசேந்திரன், வீடுமன், அக்ரூரன் போன்ற பக்தர் களின் வாயிலாகப் போதனர் தம் உணர்ச்சிகளைத்தான் வெளி யிடுகிறார். போதனர் சிவனையும் கேசவனையும் ஒன்றாகவே கருது கிறார். கிரகண நாளன்று மகேசுவரனை எண்ணித் தியானத்தில் இருந்த போதனர் முன்னே இராமபிரான் தோன்றினார். பாகவதத் தொடக்கத்தில் இதனைப் போதனர் வெளிப்படையாகவே கூறி யுள்ளார்.

மனிதப் பிறவியெடுத்த ஒருவன் இருகை தூக்கிச் சிவனை வழி படானாயின், தன் வாயார அரியின் புகழைப்பாடானாயின், வாய்மை, அன்புபோன்ற நற்பண்புகளைச் சிந்திக்கானாயின், தன் தாய்க்குப் பொறையானான் என்பது தவிர அவன்பிறந்ததனால் என்ன பயன்?

இறைவன் தாமரைத் தாள்களுக்குப் பணி விடை செய்யவும், அவன் அடியார்களோடு நட்புக் கொள்ளவும், எல்லா உயிர் களிடத்தும் எல்லையில்லா அன்பு செலுத்தவும் தனக்கு அருள் செய்ய வேண்டும் என்பது போதனரின் விருப்பம். இதே கருத் தைப் பத்தாம் காண்டத்தில் சுதாமன் வாயிலாக வெளிப்படுத்து கிறார். கம்சனைக் கொல்வதற்காகப் பலராமனும் கண்ணனும் மதுரை சென்ற போது தங்கள் பக்தனாகிய சுதாமனின் வீட்டில் தங்குகின்றனர். இப்பெரும் பேற்றால் களிப்படைந்த சுதாமன் அவர்களைத் தக்கவாறு உபசரித்து மணமிக்க மலர்களை அணிவித்து மகிழ்ந்தான். பின்னர் கண்ணனை நோக்கிக் கீழ்வருமாறு வேண்டினான்:

''முனிவர்க்கு வரங்கள் பல அருளும் இறைவனே, உன் னுடைய தாமரைத் தாள்களை வணங்கவும், உன்னடியாரோடு நட்புக்கொள்ளவும், எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் இருக்க வும் எனக்கு அருள்புரிவாயாக''

இவையனைத்தையும் கண்ணன் சுதாமனுக்கு அருளினான். அது மட்டுமன்று, போதனருக்கும் இவையெல்லாம் அருளினான். இப் பாடல் எங்கே வருகிறது என்று அறியா விட்டாலும் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு ஆந்திரனும் இப்பாடலை மனனம் செய்து பாடிக் கொண்டிருக்கிறான்.

பாகவதத்தில் வரும் பக்தர்கள் இறைவன் புகழைப் பாடும் போது கூறும் கருத்துக்களையும், உணர்வுகளையும் அவர்களுடைய

கருத்துக்களாகவே கருதலாம். ஆனால் இத்தகைய சூழலைப் படைக்கும் கவிஞன்தானே அவ்வுணர்வுகளைப் பெற்றிருந்தாலன்றி அவ்வாறு படைக்க முடியாது. மேலும் பகையுணர்வு கொண்டவர்கள் திருமாலைப் பழித்துரைக்கும் இடங்களிலும் போதனர் மறைமுகமாக வேனும் தன் பக்தி உணர்வை வெளிப்படுத்தாது இரார். இத்தகைய இடங்களில் போதனர் வஞ்சப்புகழ்ச்சி உத்தியைப் பயன்படுத்துவார். சில பாத்திரங்கள் இறைவனைப் பழிக்கும் போது போதனர் அதனைக் கேளாதது போல் மறைமுகமாக இறைவனைப் புகழ்ந்து மகிழ்வர். ருக்குமணியைக் கவர்ந்து கொண்டு கண்ணன் ஓடும் போது, ருக்மணியின் சகோதரனாய ருக்மி அவனை எதிர்த்துப் போரிடும்போது கீழ் வருமாறு பழித்துரைக்கிறான்:

எங்கள் மதலையைக் கவர்ந்து செல்லும் நீ எங்களுக்குச் சமமானவனா? உன்னுடைய மதிப்பு என்ன? உன்னுடைய குடும்பம் எது? நீ எங்கே பிறந்தாய்? எங்கே வளர்ந்தாய்? உன் நடத்தை என்ன? உன்னை அறிந்தவர்கள் யார்? உனக்குக் கௌரவமும் இல்லை; நல்ல பண்புகளும் இல்லை. மாயவித்தையின் துணையின்றி உன்னால் வெளிப்படவும் இயலாது.

இவ்வாறு கூறிக் கண்ணனைப் பழிக்கக் கருதுகிறான் ருக்மி. ஆனால் பக்தரான போதனரின் உள்ளம் இவ்வாறு கண்ணனைப் பழிக்க ஒருப்படவில்லை. எனவே, பரம் பொருள் ஆதியும் அந்தமும் நடுவும் இல்லாதவன்; அறியப்படாதவன், அளக்கப்படாதவன், மாயைக்கும் எட்டாதவன் என்னும் வேறொரு பொருளும் தோன்றுமாறு தம் கவிதையை அமைத்துப் பாடியுள்ளார் போதனர். இவ்வாறு, பகைப் பாத்திரங்கள் திருமாலை இகழ்வதாக வரும் இடங்களில் எல்லாம் போதனர் வஞ்சப் புகழ்ச்சி உத்தியைப் பயன்படுத்திப் பாத்திரங்கள் பழிப்பது போலவும் கவிஞர் புகழ்வது போலவும் பொருள் தரும் பாடல்களை அமைத்துள்ளார். சுக்கிரன் வாமனனுக்கு மூன்றடி நிலம் தர வேண்டாம் என்று தடுத்த போது பலி அவனுக்குக் கூறுவதாவது:

''என்னிடம் யாசிக்கும் இவன் வேறெந்தப் பகைவனிடமும் சென்று இரக்காதவன்; பெற்றோர் உற்றோர் ஒருவருமின்றித் தனியானவன்; அறிவுக் கலைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையான மறை பொருளை உணர்ந்த மூதறிஞன் இக்குள்ளன். இத்தகைய ஒருவன் கை நீட்டி என் முன் இரக்கும் போது இல்லையென்று மறுக்க என் மனம் இடம் தரவில்லை.''

மேலோட்டமாகப் பார்க்குமிடத்து இவ்வரிகள் வாமனனின் பரிதாப நிலையை விளக்குவது போல் காணப்படும். ஆனால்

நுணுகிப் பார்க்குமிடத்து அவனே பரம் பொருள் என்ற உண்மையும் வெளிப்படும். இத்தகைய தூய ஆழ்ந்த பக்தியின் இருப்பிடமான போதனரின் உள்ளம், கொடிய பகைவன் வாயிலிருந்து கூடத் திருமாலைத் தூற்றுவதாக மட்டுமே பொருள்படும் பாடலை இயற்ற இசைந்ததில்லை.

தன்னைப் போலவே பிறரையும் அன்புடன் நடத்துபவன், சான்றோரைக் கண்டு வணங்கி உபசரிப்பவன், பிற பெண்டிரைத் தன் தாய் போலக் கருதுபவன், பெற்றோர்க்குரிய பாசத்தோடு வறியவர்களைக் காக்க நினைப்பவன், நண்பர்களை உடன் பிறந்தவர்களாகக் கருதி அன்பு செய்பவன், ஆசிரியனை இறைவனாகக் கருதி வழிபடுபவன், விளையாட்டாகக் கூடப் பொய் கூறாதவன் என்றிவ்வாறெல்லாம் போதனர் பிரகலாதனை ஒரு பாடலில் வருணிக்கிறார். இப் பாடலிற் கூறப்படும் அரும் பண்புகள் அனைத்தும் போதனருக்கும் பொருந்துபவை என்பதில் ஐயமில்லை. இவ்வாறே பாகவதத்தில் வரும் பக்தர்களின் நற்பண்புகள் அனைத்தும் போதனரின் பண்புகளாகவே கருதத் தக்கன.

ஸ்ரீநாதரின் தடையும் போதனரின் விடையும்:

கஜேந்திரனின் கதையில் கஜேந்திரனின் முறையீட்டைக் கேட்டதும் திருமால் அவனைக் காப்பதற்காக விரைந்தோடுகிறார். இவ் விரைவைக் குறிப்பிடும் போது, இலக்குமிக்கும் அறிவிக்காது, சங்கு சக்கரங்களையும் அணியாது, தன் குழாத்தையும் அழைக்காமல், கருடனாகிய ஊர்தியையும் தேடாமல், ஊடலின் போது கவர்ந்த இலக்குமியின் மேலாடையைக் கூட நெகிழ விடாமல் விரைந்தோடினார் என்று போதனர் வருணிக்கிறார்.

இப் பாடலைக் கேட்ட ஸ்ரீநாதர் தன் பக்தனைக் காப்பாற்ற நினைத்த திருமால் படைகளைக் கூட எடுத்துக் கொள்ளாமல் வேடிக்கை பார்க்கவா ஓடினார் என்று கேட்டுப் போதனரை ஏளனம் செய்தார். போதனர் ஸ்ரீநாதருக்கு நேராக விடை கூறாமல் செய்கையால் குறிப்பாக விடைகூற விரும்பினார்.

ஒரு நாள் இருவரும் உணவருந்திக் கொண்டிருந்த போது போதனர் விரைந்துஉணவை முடித்துக் கொண்டு வெளியில் சென்றவர் கிணற்றில் ஒரு பெரிய கல்லைப் போட்டு விட்டு, ஓடோடி வந்து ஸ்ரீநாதரின் மகன் கிணற்றில் வீழ்ந்து விட்டதாகக் கூக்குரலிட்டுக் கதறினார். ஸ்ரீநாதர் கையைக் கூட கழுவாமல் பதறியடித்துக் கொண்டு கிணற்றுக்கு ஓடினார். இதனைக் கண்ட போதனர் அமைதியாக, ''மைத்துனரே, மகன் கிணற்

றில் வீழ்ந்து விட்டான் என்று அறிந்தும் கையைக் கூட கழுவாமல், மகனைக் காப்பாற்றக் கூடிய கருவிகளும் இல்லாமல் ஏன் ஓடி வந்தீர்? அவனைக் காப்பாற்றவா அல்லது வேடிக்கை பார்க்கவா?'' என்று கேட்டார். தன்னுடைய குதர்க்க வினாவிற்குப் போதனர் இவ்வாறு செய்கையில் விடையளித்தார் என உணர்ந்த ஸ்ரீநாதர் நாணி வெட்கமுற்றார்.

ஸ்ரீநாதர் ஒருவேளை இப்பாடலை இவ்வாறு குறை கூறாமலும் இருந்திருக்கலாம். எனினும் போதனர் ஏன் இவ்வாறு இந்நிகழ்ச்சியைத் தம் காப்பியத்தில் வருணித்தார் என்று அநுபவமற்ற பிறர் ஐயுறவும் கூடும். தம் பக்தர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வக் கவலையால் திருமால் அவ்வாறு ஓடினார் என்று போதனர் கருதியிருக்கலாம். தன்னை முழுவதுமாக இறைவன்பால் ஒப்படைப்பவர்களை இறைவன் தவறாது காப்பாற்றுகிறார் என்பதை அவர் மனமார நம்பினார். இதே நம்பிக்கையில் சிறிதும் தளராமல் போதனர் தம் வாழ்நாள் முழுதும் திருமால் தொண்டிலேயே ஈடுபட்டிருந்தார்.

போதுமென்ற மனம்

இயல்பாகவே போதனர் தத்துவ ஈடுபாடுடையவராக இருந்தார். பலியின் வாயிலாகக் கூறியது போல், அரசுகள் நிலைபேறு உடையன அல்ல என்பதையும் உடல் அழியத் தக்கது என்பதையும் நன்கு உணர்ந்திருந்தார். பிறரிடம் சென்று இரக்காமல் உள்ளதே போதுமென்ற மனநிறைவோடு வறுமையிலும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார். செல்வம் என்பது சிந்தையின் நிறைவாதலின் பிற பொருள்களால் மகிழ்ச்சியோ மனநிறைவோ உண்டாவதில்லை என்பதே உண்மை. ''மனநிறைவு அடையாவிடின் இந்திரனும் அழிவான்'' என்பது போதனரின் திடமான நம்பிக்கை. பரீட்சித்துக்குச் சாபம் இடும்போது சிருங்கி முனிவர் கூறியதாவது:

''பொன்னும் பொருளும் வேண்டி நாங்கள் யாரிடமும் செல்வதில்லை; பிறரை வஞ்சித்துப் பொருள் தேடுவதுமில்லை; மக்களை வலிந்து சென்று வாழ்த்தவும் நாங்கள் விரும்புவதில்லை (I-468)''.

இந்தக் கூற்றில் போதனரின் உளப்பாங்கு பளிச்சிடுகிறது. இது போலவே இரண்டாம் காண்டத்தில் பரீட்சித்துக்கு வீடுபேற்று நெறியைக் கற்பிக்கும் போது சுகமுனிவர் கூறுவதும் இங்குக் கருதத் தக்கது:

''படுத்து உறங்குவதற்கு அழகிய பசும்புல் தரை இருக்கும் போது இப்பஞ்சு மெத்தைகள் எதற்காக? இயற்கை அளிக்கும் இலைகள் பல இருக்க இந்தச் சாப்பாட்டுத் தட்டுகள் எதற்காக?

அணிவதற்கு மரப்பட்டையும், தோலும், புல்லுடையும் இருக்க, மாளிகைகளும் அரண்மனைகளும் எதற்கு? மரங்கள் பழரசம் தர வில்லையா? ஆறுகளில் இனிய நீர் இல்லையா? வேண்டிய உண வளிக்க கற்புடைய மகளிர் இல்லையா? பிறகு எதற்காக முனிவர் கள் செல்வக் களிப்பில் மிதப்போரை நாட வேண்டும்?'' இவை யெல்லாம் வாழ்க்கையைப் பற்றிய போதனர் கொண்டிருந்த கருத்துகளேயாம்.

ஆன்றவிந்த அடக்கம்:

தம்முடைய குலமுறை வரலாறு கூறுமிடத்துத் தம் பெற்றோ ரைப் பற்றியும் தமையனரைப் பற்றியும் மரியாதையும் பெரு மிதமும் கலந்த உணர்ச்சியோடு பேசுகிறார். தம் தாயாரின் நற் பண்புகளை விவரிக்கப் போதிய சொற்களின்றித் தவிப்பது போல் உணருகிறார். தம்மைப் பற்றி நல்லொழுக்கம் கொண்ட பெருந் தகை என்று மட்டுமே கூறிச் செல்கிறார். பெருந்தகைமை, ஒழுக்கம், அடக்கமுடைமை ஆகிய பண்புகளின் கொள்கலமாக அவர் விளங்கினார் என்பது தெளிவு. பக்திச்சுவை நிரம்பிய பெருங் காப்பியமாகிய பாகவதத்தை இயற்றுதற்கேற்ற ஆற்றலும் தகுதி யும் உடையவர்கள் போதனரைப் போன்ற ஒரு சிலரே இருப்பர் எனக் கூறுவது மிகையாகாது. ஆழ்ந்த பக்தியும் கலக்கமற்ற உள்ளஅமைதியும் இயல்பாகவே அவரிடம் அமைந்து இருந்தமையே இதற்குக் காரணம். இருப்பினும் தம் நூலின் முகவுரையில் கலை மகளை அவர் கீழ்வருமாறு வேண்டுகிறார்:

''புற்றிடத்திலோ, பிப்பங்காட்டிலோ, நீர் மிசைத் தோணி யிலோ, பிறவாதவன் நான். காளியையும் வணங்கியதில்லை. இருந் தாலும் ஒரு புராணத்தை இயற்றத் தொடங்கியுள்ளேன். அன்னையே, எவ்வாறு, எவ்வண்ணம் நான் தொடர வேண்டும் என்று எனக்கு அருள் செய்வாயாக. உன் அருள்துணை தொடர்ந்து எனக்கு இருக்க அருள்வாயாக. அன்புக் கடலாம் அபிராமியே, நான் உன்னையே நம்பியுள்ளேன்.''

போதனரின் பணிவுடைமை இதனால் நன்கு விளங்குகிறது. தம்முடைய அறிவையும் புலமையையும் நம்பாமல், கலைமகளின் துணையால்தான் பாகவதத்தைத் தாம் இயற்றத் தொடங்கியதாகப் போதனர் கூறுகிறார். இராமபத்திரர்தான் தம்மைப் பாகவதத்தை இயற்றுமாறு பணித்தார் என்றும் போதனர் கூறியுள்ளார். இத னாலும் இவருடைய செருக்கின்மையும் தம்மை ஒரு பொருளாகக் கருதாத அடக்கமுடைமையும் புலனாகின்றன. இப்பாகவதத்தின் சில இடங்களைப் போதனர் இல்லாதபோது இறைவனே இயற்றிச் சேர்த்தார் என்று கூறும் அளவிற்குப் பல கதைகளும் மக்களிடையே வழங்கி வருகின்றன.

''சிவன், பிரமன் போன்றோராலும் உணர்ந்து உரைத்தற்கரிய பாகவதப் பொருளைக் கற்றறிந்த சான்றோர்பால் கேட்டு உணர்ந்து தெளிவாக எடுத்துரைக்க முயலுவேன்.''

இப்பாடலும் போதனரின் பெருமிதமற்ற பண்பைக் காட்டுகிறது. பாகவதத்தைக் கொண்டு கற்றவர்களுடைய புலமையைச் சோதித்தறியலாம் என்ற வழக்கால் பாகவதத்தின் அருமைப்பாடு விளங்கும். பண்டைக் காலத்தே அறிஞர்களின் புலமையைச் சோதிக்கும் பொருட்டுப் பாகவதத்தில் உள்ள சில பாடல்களின் சொற்றொடர் அமைப்பை விளக்குமாறு கேட்பார்களாம். வடமொழிப் பாகவதத்தின் மொழிநடைக்கும் பிற புராணங்களின் மொழிநடைக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு. காப்பியங்களில் பயிலும் எளிய நடைபோல் இல்லாமல், இலக்கிய நூல்களில் பயிலும் அணிகள் நிறைந்த செறிவான நடையால் இயன்றுள்ளது பாகவதம். தத்துவக் கருத்துக்கள் நிறைந்துள்ள காரணத்தால் சில இடங்கள் பொருளே விளங்காத அளவுக்குக் கடினமாக அமைந்துள்ளன. அதனால்தான் சிவனும் பிரமனுங்கூட உணர்ந்து உரைக்க முடியாத அளவுக்குக் கடினமானது பாகவதம் என்று போதனர் கூறியுள்ளார்.

தாமே முயன்று படித்துப் புலமை எய்திய போதனர் இக் காரணத்தால் பாகவதத்தை மொழிபெயர்ப்பதெனத் துணிந்த பின்னர் பல்வேறு உரைகளைக் கற்றும் அறிஞர் பெருமக்களைக் கேட்டறிந்தும் அதன் நுணுக்கங்களை அறிந்து கொள்ள முயன்றார். தம்முடைய தத்துவ நுண்ணுணர்வாலும் பக்தியுணர்வாலும் சில அரிய இடங்களைத்தாமே உணர்ந்து கொண்டும் இருக்கலாம். இருந்தும், பாகவதப் பொருள் முழுதும் உணர்ந்த வல்லுநர் என்று அவர் ஒரு போதும் தம்மைக் கூறிக் கொண்டதில்லை. தாம் உணர்ந்த அளவுக்குத் தம்மால் இயன்றவரை எடுத்தியம்புவதாக மிக்க அடக்கத்துடன் கூறுகிறார்.

பண்டைப் புலவர்களிடத்தே போதனர் பெருமதிப்பும் பக்தியும் கொண்டிருந்தார். போதனருக்குப் பல ஆண்டுகள் முன்னரே ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தை மூக்கவிஞர்களாகிய நன்னயர், திக்கனர், எர்ரனர் என்போரும், மார்க்கண்டேய புராணத்தை மாரனர் என்பவரும், இராமாயணத்தைப் பாஸ்கரரும் அவர் குழுவும் மொழிபெயர்த்திருந்தனர். இவர்களுள் யாரேனும் நினைத்திருந்தால் பாகவதத்தை மிகத் திறம்பட மொழிபெயர்த்திருப்பர். அவர்கள் அவ்வாறு செய்யாமையைத் தம்முடைய நற்பேறாகப் போதனர் கருதினார். இக் கருத்தைப் பின் வரும் பொருள்பட ஒரு பாடலில் கூறியுள்ளார்.

"பல புராணங்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்த நன்னயர், திக்கனர் போன்ற பெரும் புலவர்கள் பாகவதத்தை மொழி பெயர்க்காமல் விட்டது முற்பிறவியில் நான் செய்த நற்செயல்களின் பயனேயாகும். இப்பிறவியைப் பயனுடையதாகச் செய்யவும், இனிப் பிறவியே இல்லாமல் தடுக்கவும் நான் இந்த பாகவதத்தை மொழிபெயர்ப்பேன்."

உண்மையில் அது போதனரின் நற்பேறன்று; ஆந்திரர்களின் நற்பேறேயாகும். ஏனெனில் பண்டைக்காலப் புலவர்கள் போதனரை விடப் பெரும் புலமையும், மிக்க கவிதைத் திறமும் உடையவர்களாய் இருந்திருந்தாலும், அவர்கள் போதனரைவிடச் சிறந்த பக்தர்கள் அல்லர். எனவே அவர்கள் மொழிபெயர்த்திருந்தால் பாகவதம் இவ்வளவு சிறப்புடையதாக அமைந்திருக்காது.

தம் புலமையை வெளிப்படுத்தவோ, ஒரு பெருங்கவிஞர் எனப் புகழ்பெறவோ, அல்லது பெருஞ்செல்வம் முதலான பொருட் பயன் கருதியோ, போதனர் பாகவதத்தை இயற்றவில்லை. தம் வாழ்க்கை நோக்கம் நிறைவேறும் என்றும், மீண்டும் பிறவி எடுப்பதைத் தடுக்கலாம் என்றும், இதனால் உலகிற்குப் பெரு நன்மை விளையும் என்றும் போதனர் உறுதியாக நம்பியதால்தான் இவ் அரிய செயலைச் செய்துமுடித்தார். அவருடைய இந்த நல்ல தொண்டினால் வடமொழி அறியாதோரும் பாகவத அமுதைப் பருகிக் களிக்கும் நல் வாய்ப்பைப் பெற்றனர். பல தலைமுறைக்கு ஆந்திரர்கள் அவருக்குத் தீர்க்கலாகா நன்றிக் கடன்பட்டுள்ளனர்.

பாகவதமும் வாழ்க்கையும்

பாரதமும் பிற புராணங்களும் கர்ம நெறியினையும் உபநிடதங்கள் ஞான நெறியினையும் பரப்புகின்றன. பாகவதமோ எளிய மக்களுக்கும் உகந்ததான பக்தி நெறியைப் பரப்புகிறது. போதனரின் இனிய, எளிய ஆற்றொழுக்கான கவிதை நடை, பக்தி நெறியும் பாகவதக் கதையும் மக்களிடையே நன்கு பரப்புவதற்குப் பெருந்துணை புரிகிறது. மேலும் பாகவதத்தில் வரும் நிகழ்ச்சிகள் பலவற்றை விளக்கும் போது போதனர் இயற்றிய பாடல்கள் பலவும் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்திருத்தலால் பல நேரங்களில் மக்களுக்கு அறிவூட்டவும் ஆறுதல் அளிக்கவும் அவை பயன்படுகின்றன: மிகவும் வறுமையுற்ற பண்டிதர் ஒருவர் பொருளுதவி வேண்டி சி.பி. ப்ரௌன் (C.P.Brown) என்பாருக்கு ஒருவேண்டுகோள் அனுப்பினார். அவ்வேண்டுகோள் கடிதத்தில் தம்முடைய வறுமைக் கொடுமையைக் குறிப்பாகப் புலப்படுத்த விரும்பிக் கஜேந்திர

மோட்சப் பாடலொன்றையும் எழுதி அனுப்பினர். அதன் பொருள் வருமாறு:

''என் வல்லமை தொலைந்தது; உறுதி தளர்ந்தது. புலன்கள் செயலற்றன. பொறிகள் கலங்கின; உடலோ ஓய்ந்தது; நான் அறவே களைத்து விட்டேன். உன்னையன்றி யாரையும் நான் அறியேன். இவ் அபலையைப் பொறுப்பாயாக. இறைவனே, அருளுருவானவனே, உடனே வந்து என்னைக் காத்தருள்வாயாக.''

அவருக்குக் கொஞ்சம் பணம் அனுப்பி உதவிய அறிஞர் ப்ரௌன் அவர்கள் பாகவதத்தில் இருந்து ஒரு பாடலை எழுதி அதனையும் உடன் அனுப்பி வைத்தார். அதன் பொருள் வருமாறு:

''இறந்து விடுவோம் என்ற பேரச்சத்தைக் கைவிடுக. பிறவியெடுத்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் இறப்பு தவிர்க்க இயலாதது. எனவே அரியை வணங்குக. இவ் உலகில் இனி மேல் உங்களுக்குப் பிறவியே நேராது. அரசனே, மாதவன் உலகில் வாழும் மாபெரும் இன்பத்தை நீ அடையலாம்.''

இவ்வாறு மானுட வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்த பாகவதப் பாடல்கள் எண்ணில. இம்மையில் இலக்கிய, பக்தி இன்பங்களையும் மறுமையில் வீட்டின்பத்தையும் ஒருங்கு அளிக்க வல்ல ஆற்றலுடைய பெருநூல் பாகவதம். அதனால்தான் சுகமுனிவர் உமிழ்ந்த வேதமாகிய கற்பகத்தருவின் கனிக்கு இதனை ஒப்பிட்டுக்கூறினர் வியாசபகவான். போதனரோ இதனைக் கற்பகத் தருவிற்கே ஒப்பிட்டுக் கூறினர்.

பாகவதம் என்னும் கற்பகத்தரு மெல்லிய கிளைகளையும் (காண்டங்கள்) கருத்த வேர்களையும் (கண்ணன்), இன்மொழி பேசும் கிள்ளைகளையும் (சுகமுனிவர்), அணிசெய்யும் அழகிய கொடிகளையும் (மென்மை), விளங்கிய பல்நிற மலர்களையும் (உயர்குடிச் சான்றோர்), அழகிய சுற்றுப் பரிதியையும் (சிறந்த கதைப் பொருள்), பெரிய பெரிய கனிகளையும் (வீடு பேறாகிய நோக்கு)அகன்ற அடிப்பாகத்தையும் (வியாச பகவான்), பெற்று நற்பறவைகள் (முனிவர்கள்) நலம் பெற இவ் உலகின் கண்ணே நிலைபெற்ற புகழுடையதாக விளங்குகிறது.''

''கற்பனைக் கண்பெற்ற மானுடரே! சுகமுனி என்னும் கிளியின் வாயிலிருந்து நழுவியதும், வேதமாகிய கற்பகத்தருவின் கனியுமாகிய பாகவதத்தின் அமுதமொத்த இனிய தீஞ்சுவைச் சாற்றைப் பருகுக; இடையறாது பருகுக;

கவிதையழகைச் சுவைக்கும் அன்பர்களே, வேதமென்னும் கற்பகத் தரு ஈன்றதும், சுகமுனியாம் கிள்ளையின் வாயமுதால் சுவை சிறந்து விளங்குவதும் ஆகிய பாகவதக் கனியின் இன் சாற்றைப் பருகி மகிழும் அளவிற்கு உயர்வீர்களாக.''

துணை நூல்கள்

1. ஆந்த்ர கவிதரங்கிணி, *சாகணி சேஷய்யா தொகுதி* VI

2. ஆந்த்ர கவுல சரித்ர, K. *வீரேசலிங்கம் பந்துலு, தொகுதி* I

3. ஆந்த்ர மகாபாகவத *ஆராய்ச்சிப் பதிப்பு, ஆந்த்ர ப்ரதேஷ் சாகித்யஅகாதெமி, 1964.*

4. ஆந்த்ர மகாபாகவதோபன்யாசமுலு, *ஆந்த்ர சாரஸ்வத பரிஷத், திலக்ரோட், ஹைதராபாத், செப்டம்பர், 1957.*

5. ஆந்த்ர வாங்மய சரித்ர, D. *வேங்கடாவதானி 1971.*

6. சமக்ர ஆந்த்ர சாகித்தியமு, *ஆருத்ர, தொகுதி* V *ஆகஸ்டு 1965.*

7. தெலுகு விக்ஞான சர்வஸ்வமு, *தொகுதி* III, *தெலுகு பாஷா சமிதி, 1959.*

8. பக்த போதன—மகாபாகவத ரசன, K.S. *சாஸ்திரி 1971.*

9. போதன, N. *வெங்கட்ராவ், நேஷனல் புக் ட்ரஸ்ட், ஆகஸ்டு 1962.*

10. ஸ்ரீபாகவதம் *(சமஸ்கிருதம்)*, *வாவில்ல ராமசாமி சாஸ்திரி&சன்ஸ், 1941.*

அருஞ்சொல்லகராதி

அகண்ட யதி	நிறுத்த யாப்பில் ஒருவகை (தனி மெய் யெழுத்தும் கூட்டு மெய்யெழுத்தும் ஒன்றி ஒலிக்கும்).
அதிதி	கசியப்ப முனிவரின் மனைவி; வாமன னின் தாய்.
அரிகராத்வைதம்	அரியும் அரனும் ஒன்றென்னும் கோட் பாடு
ஆடவெலதி	மாத்திரை சந்தத்தால் இயன்ற ஒரு வகைத் தேசிய தெலுங்குயாப்பு
ஆத்யந்திக பக்தி	வைணவப் பக்தி வகைகளுள் ஒன்று
ஆராத்ய	சைவப் பிராமணர்களுள் ஒருவகை
ஆவரணம்	நிலம், நீர், ஒளி, காற்று, ஆகாயம், அகங் காரம், அறிவு ஆகிய எழுவகை எல்லைகள்
ஆஸ்வாயனம்	காற்று நுழைந்து செல்லும் எழுவகை வாயில்கள் (காது, கண், மூக்கு, முகம்)
உத்பலமாலா	எழுத்துச் சந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வடமொழி விருத்த வகை.
கந்தம்	நான்கு சீரும் பதினாறு கணமும் உடைய ஒருவகைத் தெலுங்கு யாப்பு
குப்ஜை	குறளி, குள்ளமான பெண்
சகஜ பாண்டித்ய	பிறவிப் புலவர்
சம்பகமாலா	எழுத்துச் சந்தத்தை அடிப்படையாகக் கொண்ட வடமொழி விருத்த வகை களுள் ஒன்று
சம்பு	ஒரே பொருள் பற்றிச் செய்யுளும் உரை நடையும் விரவி அமைந்த ஒருவகை யாப்பு

சார்தூலம்	எழுத்துச் சந்தத்தால் அமைந்த ஒருவகை வடமொழி விருத்த வகை
சிசா	மாத்திரைச் சந்தங்களால் அமைந்த ஒரு வகைத் தெலுங்கு தேசிய யாப்பு
சிவகேசவாத்வைதம்	சிவனும் கேசவனும் ஒன்றென்னும் கோட்பாடு
தண்டகம்	எதுகை, மோனை, அடி போன்ற வரையறைகள் இன்றி இயலும் ஒரு வகை இனிய உரைநடை யாப்பு
தரலம்	தெலுங்குப் பாவகைகளுள் ஒன்று
தேட கீதி	மாத்திரை சந்தத்தால் அமைந்த ஒரு வகைத் தேசிய தெலுங்கு யாப்பு
ப்ராசம்	தெலுங்கு எதுகை வகைகளுள் ஒன்று
ப்ரௌன், சி. பீ.	இந்தியாவில் அலுவலராக இருந்து தெலுங்கு மொழிக்கும் இலக்கியத்திற்கும் பெருந்தொண்டு புரிந்த ஓர் ஆங்கில அறிஞர்
போகினி	அரசனின் அந்தப்புரப் பெண்டிர்களுள் ஒருத்தி
மகாஸ்ருகதாரா	ஒரு வகைத் தெலுங்கு யாப்பு
மத்தகோகிலம்	தெலுங்குப் பாவகைகளுள் ஒன்று
மிஸ்ர சமாசம்	வடமொழிச் சொல்லும் தெலுங்குச் சொல்லும் கலந்த கூட்டுச் சொல் (மணிப்ரவாளம்)
யதி, ஜதி	ஒருவகை நிறுத்த யாப்பு (தெலுங்கு)
ஸ்ரகதாரா	ஒருவகைத் தெலுங்கு யாப்பு

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்:

1. லட்சுமிநாத பெஸ்பருவா—ஹேம்பருவா
   தமிழ் : க. த. திருநாவுக்கரசு
2. கபீர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. கேசவஸுதர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: ராமகோபிநாதன்
4. ஈசுவர் சந்திர வித்தியாசாகர்—ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ்: ராமகோபிநாதன்
5. ராஜா ராம் மோகன் ராய்—சௌமியேந்திரநாத தாகூர்
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
6. பிரேம்சந்த்—பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ்: சரஸ்வதி ராமநாத்
7. குமாரன் ஆசான்—கே. எம். ஜார்ஜ்
   தமிழ்: கே. சி. சங்கரநாராயணன்
8. தாருதத்—பத்மினி ஸென்குப்தா
   தமிழ்: அ. சீனிவாச ராகவன்
9. வீரேசலிங்கம்—வி. ஆர். நார்லா
   தமிழ்: நா. பார்த்தசாரதி
10. ஸ்ரீ அரவிந்தர்—மனோஜ்தாஸ்
    தமிழ்: பி. கோதண்டராமன்
11. மீராபாய்—உஷா நில்சன்
    தமிழ்: எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. வேமனர்—வி. ஆர். நார்லா
    தமிழ்: ந. சுப்பு ரெட்டியார்
13. B.M· ஸ்ரீகண்டய்யா—A.N. மூர்த்தி ராவ்
    தமிழ்: இரா. மதிவாணன்
14. சந்துமேனன்—டி. சி. சங்கர மேனன்
    தமிழ்: கு. இராஜவேலு
15. காஸி நஸ்ருல் இஸ்லாம்— கோபால் ஹால்டார்
    தமிழ்: K.P.S. ஹமீத்
16. வள்ளத்தோள்—ஹிருதயகுமாரி
    தமிழ்: மா. இளையபெருமாள்
17. பசவேஸ்வரர்—H. திப்பேருத்ரசுவாமி
    தமிழ்: T.K. நாகாம்பாள்
18. பாணபட்டர்—கே. கிருஷ்ணமூர்த்தி
    தமிழ்: பெ. திருஞானசம்பந்தன்
19. பங்கிம்சந்திர சாட்டர்ஜி—சு. ச. ஸென்குப்தா
    தமிழ்: அசோகமித்திரன்
20. மகரிஷி தேவேந்திரநாத தாகூர்—நா. சௌதுரி
    தமிழ்: கா. மீனாட்சி சுந்தரம்
21. தாராசங்கர் பந்தோபாத்யாயர்— மஹாஸ்வேதாதேவி
    தமிழ்: கு. இராஜவேலு
22. நானாலால்—U.M. மணியார்
    தமிழ்: நா பார்த்தசாரதி
23. போதனர்—D. வேங்கடாவதானி
    தமிழ்: அ. அ. மணவாளன்